JL
Y15 m211 N24(M)
N25.2.4
207604

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 DEC 1925
MADRAS

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

DITOR SISTER V. BALAMMAL.

.] November 1925. [No. 4.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(All Rights reserved by the Authoress.)

207604

सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डः ॥

मयाद्य याचितं वत्स पुरा दत्तं वरद्वयम् ।
गच्छ त्वं वनवासाय भरतोऽस्तु महीपतिः ॥ १४ ॥

पुरा முந்தி दत्तं அளிக்கப்பட்ட वरद्वयं வரமிரண்டும் अद्य இப்பொழுது मया
याचितं யாசிக்கப்பட்டது. त्वं நீ वनवासाय வனவாசத்தின்பொருட்டு गच्छ செல்; भरतः
महीपतिः அரசனாக अस्तु ஆகட்டும் ॥ १४ ॥

तथेति रामः कैकेयीं प्रणम्य विनयोज्ज्वलः ।
कौसल्यागृहमागत्य सप्रणाममुवाच ताम् ॥ १५ ॥

विनयोज्ज्वलः வணக்கத்தினால் பிரகாசிக்கின்றவரான रामः ஸ்ரீராமர் तथा அ
इति என்று कैकेयीं கைகேயியை प्रणम्य நமஸ்கரித்து விட்டு कौसल्यागृहं கௌசலையின்
आगत्य அடைந்து तां அவளை सप्रणामं நமஸ்கார பூர்வமாக उवाच சொன்னார் ॥ १५ ॥

रक्षणीयं त्वया मातश्शरीरं जनकस्य मे ।
गच्छामि वनमद्यैव माऽस्तु शोकस्तवाधुना ॥ १६ ॥

मातः அம்மா मे என்னுடைய जनकस्य தந்தையினுடைய शरीरं தேகமானது
உன்னால் रक्षणीयं காப்பாற்றப்படல் வேண்டும். अद्यैव இப்பொழுதே वनं வனத்தை गच्छामि
லப் போகிறேன். अधुना இப்பொழுது तव உங்களுக்கு शोकः விசனம் माऽस्तु வேண்டா

वसिष्ठेनाभिषेकायाऽऽबद्धमङ्गलकौतुकः ।
सीतालक्ष्मणसंयुक्तो रामो वनमगात्तदा ॥ १७ ॥

तदा அப்பொழுது वसिष्ठेन வசிஷ்டரால் अभिषेकाय பட்டாபிஷேகத்தின் பெ
आबद्धमङ्गलकौतुकः கட்டப்பட்ட கங்கணத்தை யுடைய रामः ஸ்ரீராமர் सीतालक्ष्मणसंयुक्त
சீதை லக்ஷ்மணர் இவர்களுடன்கூட वनं வனத்தை நோக்கி अगात् சென்றார் ॥ १७ ॥

(To be continued.)

ஸ்ரீராம ஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

I.] குரோதன—கார்த்திகை. [இதழ் 4.

ஜீவசக்திப் பழக்கம்.

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி.)

எழுசீரடி.

பித்தம் எழும்பி உடல் நடுங்கி பிழைதீர் மூளை கலக்க முறச்
சித்தம் தவறி வாய் பிதற்றித் தினவும் சொரிவுஞ் செழித்தனவாய்
ரத்தம் கொதித்துக் கண்ணெரிந்து ரணமாயுதடு களம் முதலாய்
நித்தந் துயரம் பெருகிடினும் நிறுத்தேல் உயிரை நாப்புதலே. (1)

மயிரின் துளைகள் ஒவ்வொன்றும் வலியாலுடலை வதைப்பதுபோல்
தயிரின் நிலையும் அதைக் கடையும் தடியின் நடிப்பு மெனத் தவிக்கச்
செயிரின் நிலைமை வளர்ந்தெங்கும் தீயின் கொழுந்தைச் சிவணுறினும்
உயிரின் பெருக்காம் பயிற்சிதனை யொரு நாளேனும் ஒழியேலே. (2)

காசம் கலங்கி இரத்த நிலை கடுவாய் நாடிக் குழல்களெலாம்
காசம் பெருக வலியெழுந்து நாவுங்களனும் உலர்ந்து நடை
கூசும்படியே காலிரண்டுங்குளறி நடையும் குறைந்திடினும்
சாசம் பயிலும் வழக்கமதைத் தடுத்து நிறுத்தேல் சலிப்புடனே. (3)

அழுக்குப் புனலை நெருப்பெதிர்க்க அதனால் புளிப்பங்கடர்ந்தெழும்பி
பழுக்கக் கொதிக்கும் கொடுஞ்சமயம் பதரியுளம் கொந்தறிவழிந்து
வழுக்கட் கடிமையுறப்புந்தி மயங்கி யுடல மெலி வெய்தி
இழுக்குற்றிடினும் உயிர்ப்பயிற்சி யியற்று தொழியேல் என்றுமே, (4)

ஆண் பெண் சுகமும் மெண் ஆணின் அன்பும் அகன்று நீங்கிடினும்
ஊண் உண் ருசியும் உணவிணங்கள் உதவும் பதமும் ஒழிந்திடினும்
மாண் உன்னிய எக்கலைத்திறமும் வளராதொழிந்து மங்கிடினும்
நீண் உண்ணிகழும் உயிர்ப்பெருக்கை நிறுத்தேல் நிறுத்தேல் நிறுத்தேலே. (5)

என்றும் எங்கும் எப்பொழுதும் எதுவும் இல்லா நிலையிலையால்
தின்றும் பூதம் ஒவ்வொன்றும் சோரா நிலைய தாயினால்
வென்றும் ஈரம் இலையாயின் வேகும் நெருப்பங்கிருப்பதனால்
நின்றுன் உயிரைப் பெருக்குவதை நிறுத்தேல் நிறுத்தேல் நிறுத்தேலே. (6)

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.

(132-ம் பக்கத்தொடர்ச்சி.)

(எழுந்த செந்தமிழ்ப் பெருமை.)

சண்முகமே யுருவாகிய சம்பந்தர்
சங்கரனுக் கடியார்க் கடியார்
உண்மை காணு மாதிசைவ பரம்பரை
உற்றவர் காழியவதரித்தார். (39)

பாண்டியற்குற்ற சுரத்தை யொழித்தவர்
பண்ணவர் பூசிக்கும் பண்புடையார்
வேண்டிய துன்பம் விளைத்த சமணரை
வெய்ய கழுவினி லேற்றினவர். (40)

மங்கையர்க் கரசியோடு குலச்சிறை
மாதவற்கன்பு புரிந்தவர் காண்
எங்கணுஞ் சைவம் இசையுற நாட்டிய
எம்மிறை வாய்த்தமிழ் ஏற்றமன்றோ ? (41)

ஆண்பனை தன்னையே பெண்பனை யாக்கிய
அந்தணன் தந்திடு செந்தமிழே
மாண்புறு மாசபை மத்தியில் அத்தியை
மங்கையாச் செய்ததுஞ் செந்தமிழே. (42)

ஓடிய வைகையில் ஏடதைப்போடவும்
உற்றெதி ரேறியே சென்றதுவும்
தேடிய புத்தன் தலையது தத்திடச்
செய்ததுஞ் சீர்பெறுஞ் செந்தமிழே. (43)

பொய்யர்கள் முன்னாலே கனலி லேடதைப்
போடவே பச்சென் றிருந்ததுவும்
மொய்யளி வேதவனத் திற் கதவது
மூடியதும் மொழி செந்தமிழே. (44)

வன்னியுங் கிணறும் வாழையுஞ் சாட்சியா
மங்கை யொருத்தியைத் தான் மணந்தான்
தன்னை யரவங் கடித்திடவே யவன்
தன்னுயிர் தந்ததுஞ் செந்தமிழே. (45)

தெண்டிரை யாழியிற் கல்லுமிதந்திடச்
செய்ததும் பெருஞ் செந்தமிழே

விண்டலஞ் சூழ்மறைக் காட்டின் கதவது
மீண்டுந் திறந்ததுஞ் செந்தமிழே (46)

கொல்லவந்த மதயானையின் சென்னியைக்
குனிய வைத்ததுஞ் செந்தமிழே
அல்லகண்டந்தர வல்ல மகாவிஷம்
அமிழ்த மானதுஞ் செந்தமிழே. (47)

அக்கினி ரூபமே யாகிய நீற்றறை
அங்கமலப் பொய்கையாக்கியதும்
திக்கினி லுள்ளவ ரறியக் குன்மத்தைத்
தீர்த்தடி சேர்த்ததுஞ் செந்தமிழே. (48)

புத்தர் சமணர்கள் செய்த கொடுமையைப்
போக்கித் திருவருளே வடிவாய்
இத்தரை தன்னிலே யாவரும் போற்றிட
இருக்கச் செய்ததுஞ் செந்தமிழே (49)

சேர சோழரோடு பாண்டியமன்னர்கள்
செஞ்சடை வானவன் சீர்மறந்து
கோரமிகும் பல மதம்புகப் பின்னும்
கொணர்ந்து சேர்த்ததுஞ் செந்தமிழே. (50)

ஆதிபரம்பன் ஜோதியாகித் தங்கும்
ஆயிரத் தெட்டுத் தலங்களெல்லாம்
ஓதிய அற்புதப் பாடலெல்லாம் அன்பின்
உத்தமர் வாக்குற்ற செந்தமிழே. (51)

நாவுக்கரசென்ன நாமம் புனைவித்திந்
நாட்டில் உயர்வுறச் செய்ததுவும்
தேவுக்கரசன் திருப்புக லூரிலே
சிங்கமா யுண்டதுஞ் செந்தமிழே. (52)

வீரட்டானமுதல் மேலவன் தொண்டர்கள்
வேண்டுந் திருப்புக லூர்வரைக்கும்
பாரட்ட மாதிசை யோருற்றறிந்திடப்
பண்ணிய அற்புதஞ் செந்தமிழே. (53)

(தொடரும்.)

பெண்மக்களின் எதிர்கால நிலை.

பத்திராதிபர்.

(134-ம் பக்கத் தொடர்ச்சி.)

நன்கு ஊன்றிப் பெரிதும் சிந்தித்துப் பார்க்குங்கால் பெண் மக்களுக்கு ஒரு வழியில் அபிவிருத்தியும் சீர்திருத்தமும் அவசியமென்பதை நாம் ஒப்புக்கொள்ளுவதுடன் தற்காலம் சில ஆடவர்களின் இடையிலும் மனப்போக்கிலும் தங்கியுள்ள நவநாகரிக வாழ்க்கை பொதுவாய்ப் பெண்கள் சமூகத்திற்கே ஏற்றதென்று சாதித்தல் நியாயமன்று. ஒரு சிலர் நாகரிக வாழ்க்கையில் தமக்குள்ள பற்றினால் தீவிரமான ஆசார சீர்திருத்தத்தைக் கைப்பற்ற முயல்வதை நாம் தடுக்கப் போவதில்லை. ஆனாலும் அவர்கள் தமது நடவடிக்கைகளுக்கு அனாதியான ஹிந்துமதம் ஆதரவு காட்ட வேண்டுமென்று வாதிப்பதை நாம் ஒப்புக்கொள்ளவே முடியாது. அனாதியான ஹிந்துமதக் கோட்பாட்டை மாற்றக்கூடிய வல்லமை எவருக்குமே இல்லை. நமது தற்கால நிலைமையானது ஹிந்து மதக்கோட்பாட்டைப் பெரிதும் விலக்கியதாக இருப்பினும் விலக்கவேண்டி நேரிடினும் அதற்காக நாம் நமது மதத்தையே நமது தற்கால நிலைமைக்கேற்றதாக மாற்ற நினைத்தல் சாத்தியமற்றதாம். ஆசார சீர்திருத்தத்தில் பிரபலஸ்தர்கள் என்று கூறப்படுபவர்கள் தமது கொள்கைக்குச் சட்ட சம்மதமான ஆதாரவைத் தேட முற்படுவார்களாயின் மதக்கோட்பாட்டிற்குத் தீங்கு விளைவிப்பவர்களாகவும் தங்களது முக்கிய உத்தேசத்திற்கே இடைஞ்சல் உண்டாக்குபவர்களாகவுமாவார்கள் என்பதில் தடையென்ன? ஆசார சீர்திருத்தத்தில் தீவிர புத்தியும் நம்பிக்கையுமுள்ளவர்கள் அவ்வழியில் துரிதத்துடன் செல்லட்டும். ஆனால் அதுவே சமூக முன்னேற்றத்திற்கு மூலகாரணமென்று வாதித்தல் கூடாது. அதிலும் நிதானத்துடன் ஆராயவேண்டிய பெண்களின் நிலைமையில் இத்தகைய நூதன உணர்ச்சியைக் கொண்டு நடத்தல் முடியாத காரியமாகும். ஏனெனில் ஆடவர் பலர் பூர்வீக வாழ்க்கையின் உயர்வை யறிந்து அதைக் கைப்பிடித்து நடக்க விருப்பமுள்ளவர்களாகத் தற்சமயம் காணப்படுகிறார்கள். எதிர்காலத்தில் ஆடவர்கள் பரிசுத்தம் வாய்ந்த பூர்வீக வாழ்க்கையையே பெரிதும் கைக்கொண்டு நடப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இச்சந்தர்ப்பத்தில் நமது பெண்கள் நிலையை அதற்கு அனுசரணையாக அமைத்தல், ஒழுங்கன்றி எதிரிடையாகச் செய்தல் ஒவ்வாதானது பற்றியே பெண்களின் எதிர்கால நிலையைப்பற்றி நாம் நன்கு சிந்தித்து அதற்கேற்ற வழியை இப்பொழுதே நிர்த்தாரணம் செய்யல் முக்கியம். தவிர தற்காலத்திலும் பெண்பாலர் பலர் தமக்குப் பூர்வீக வாழ்க்கையே முக்கியமெனக் கருதுவதால் பெரும்பாலரானவர்களின் உத்தேசப்பிரகாரமே பெண்களின் எதிர்கால நிலையை அமைத்தல் அவசியமாகும். பெண்களின் அபிவிருத்தி நாடுங்கால் அதற்காக அயல் நாட்டை ஒப்பிடுதல் சரியன்று. ஒவ்வொரு தேச சரித்திரங்களையும் ஊன்றிக் கவனிப்போமாயின் அவை தமது தேசத்திற்கேற்றதான வழியிலேயே முன்னேற்றமடைந்திருப்பதை நன்கறியலாம். ஆகையால் நமக்கிடையே தற்காலம் நவீன ஆசார சீர்திருத்தத்தில் முழு நம்பிக்கையுள்ளவர்கள் தாங்கள் தங்கள் குடும்பத்தை யவ்வழியில் நடத்திக் காட்டுவதே சிறந்த வழியன்றி தமது கொள்கைக்கு

ஹிந்துமதத்தையோ சட்டசம்மதியையோ எதிர் பார்த்தல் அலை ஓய்ந்ததும் ஆழியில் முழுக விரும்புவதற்கொப்பாகும். தவிர்த்துப் பொதுவாக இந்தியப் பெண்களின் எதிர்கால நிலையானது மதக்கோட்பாட்டிற்கு மீறாததும் முன்னேற்றத்திற்கேற்றதும், இந்திய நாகரிகத்திற்கேற்றதும், சர்வஜன சம்மதி பெற்றதுமாக இருக்கவேண்டியதை ஸ்திரீவித்தியாபிமானிகள் நன்கறிந்து அதற்கேற்ற வழியில் தங்கள் நாட்டத்தைச் செலுத்துவார்களாக.

சுபம்.

ஊஞ்சல் பாட்டு.

"கோமதி" பாடியது.

குறிப்பு:— ஊஞ்சலாடல் தமிழ் நாட்டில் ஒரு பிரியமான கேளிவிலாசம். அதனை அக ஊஞ்சல், புறஊஞ்சல் என இருவகையாகப் பகுக்கலாம். வீட்டினுள்ளே முற்றத்திலோ அல்லது விசால அறையிலோ அமைத்தாடும் ஊஞ்சல் அகஊஞ்சல். தோட்டங்களிலும் சோலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் விருட்சங்களிலோ அல்லது பிரத்தியேகமாக நாட்டப்பெற்ற கம்பங்களிலோ அமைத்தாடும் ஊஞ்சல் புறஊஞ்சல். நல்ல பண்டைக்காலங்களில் இந்திரவிழா, மதனவிழா முதலிய விழாக்காலங்களில் சிறப்பாகவும் ஏனைய காலங்களில் பொதுவாகவும் புறஊஞ்சலாட்டமே பெரிதும் வழக்கத்திலிருந்தது. தற்போதிலோ தமிழ்நாட்டில் அத்தகைய புறஊஞ்சல் புறக்கணிக்கப்பட்டுப் பொன்றியே போய்விட்டதென்னலாம். ஆனால் பண்டைய பண்புறு முறைகள் ஒருசில பேணப்பெற்று வரும் கேரளபூமியாகிய திருவாங்கூர் ராஜ்யத்தில் மாத்திரம் வருடந்தோறும் ஆவணி மாதம் கொண்டாடப் பெறும் ஓணவிழாவில தமிழ்நாட்டுக் கேளிவிலாசமாகிய புறஊஞ்சல் அந்த விழாவின் முக்கிய அமிசமாய் அநுசரிக்கப்பெற்று வருகிறது. இல்லற வாழ்க்கையில் இறங்கியுள்ள சுமங்கலிகளைவிடப் பெதும்பை, மங்கை,மடந்தைப் பருவங்களுடைய கன்னிப் பெண்களுக்கே இவ்வூஞ்சலாட்டம் அதிகப் பிரியமானது. காதல்வழி கலியாணம் நிகழ் பண்டைச் சீரிய நாட்களில் பூஞ்சோலையில் ஊஞ்சலாடும் உல்லாசத்திலிருக்கும் கன்னிகையானவள் தனக்கிசைந்த கட்டழகனொருவனோடு கண்கலந்து காதலுவகை யுழன்றதன் காரியமாக, பின்னர் அவ்விருவருக்கும் கலியாணம் நிகழ்வதாம் ஒரு அகப்பொருள் முறைமையைக் குறிப்பதற்கே, நாட்டில் திருமணகாலத்தில் மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் ஏகாசனத்தில் அருகருகே அமர்வதற்குமுன்பு பெண்ணை மாத்திரம் ஊஞ்சலிலும் அவ்வூஞ்சலுக்கு நேராக மாப்பிள்ளையை ஒரு ஆசனத்திலும் எதிரெதிராக அமர்த்திக் கண்கலங்கச் செய்யும் "கன்னியூஞ்சல்" என்றழைக்கப்பெறும் கவி ஊறு கட்டு இன்றும் நடைபெற்று வருகிறது. இந்த வெறுஞ் சடங்குகூட வட தமிழ்நாட்டில் கிடையாது. பழைய ஆசாரங்களில் சீரியவற்றையெல்லாம் விட்டுவிட்டு அப்பழைய ஆசாரங்களிலும் இடையில் ஏற்பட்டவைகளிலுமுள்ள கசடுகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருக்கிற இக்கால நிலை என்று மாறுமோ, கன்னிப்பெண்கள் சில விடங்களில் இல்லறப் பெண்களுங்கூட அகத்திலேயே அடைபட்டு அவிந்திருக்கும் அநியாயநியதி என்றுதொலையுமோ அன்றிருந்தே புறஊஞ்சலும் புத்துயிர் பூத்துப் போற்றப் பெறுவதாகும்.

சாதாரணமாய்த் தமிழ்நாட்டில் பாடப்பெற்று வருகிற ஊஞ்சல்பாட்டுகள் மெல்ல நீண்டெழுந்து மெல்ல நீண்டு தாழும் தொனியியலுடைய நீலாம்பரி இராகத்தில் பாட அமைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த இராக தோரணை உல்லாச நீரன்னங்கள் போன்று அழகுற அசைந்து முன்னும் பின்னும் சிறிதுசிறிது தூரமே சென்றாடும் அகஊஞ்சலுக்கே சாலப் பொருந்தியதாம். அடியில் வரும் பாட்டுத் தோட்டங்களில் அல்லது சாலைகளில் விருட்சத்தின்கீழ் அமைக்கப்பெற்று, "பாரினுக்கும் காரினுக்கும் பாய்ந்தே யூஞ்சல் ஆடுவோம்"என்றவாறு வேகுவேகமாய் ஆடும் ஊஞ்சலாட்டத்தைக் குறிப்பதால் அதற்கிசைந்தபடி "லல்ல லல்ல லல்ல லல்ல லல்ல லல்ல லல்லலா" என்று விரைந்து நடக்கும் நோட்டு மெட்டில் பாடப் பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் விரைவாகப் பந்தாடுவதைக் குறிக்கும் "கந்துகவரி"என்னும் பாட்டும் இந்த மாதிரிதான் நடக்கிறது. அது வருமாறு,

"பொன்னிலங்கு பூங்கொ டிப்பொலஞ் செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப வார்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்கவாழ்கவென்று சென்று பந்தடித்துமே
தேவ ராரார்பன் வாழ்கவென்று பந்தடித்துமே."

இந்தப் பந்துப் பாட்டின் போக்கை ஒட்டியே நமது பாட்டு ஊஞ்சல் அடியிற் கண்டவாறு ஓடுகிறது.

பாட்டு.

வாரீர் வாரீர் வஞ்சி மாரே வசந்த காலம் வந்ததே
ஈரி ரண்டு வன்க யிற்றால் எழில்வி ருட்சத் தேய்ந்திடும்
நேரில் நின்ற ஊஞ்ச லில்நெருங்கி வீற்றி ருந்திட்டுப்
பாரி னுக்கும் காரி னுக்கும் பாய்ந்தே யூஞ்ச லாடுவோம். (1)

பொன்னை நேரும் புஷ்ப மாரி பொழிய வோடும் ஊஞ்சலே
உன்னை டேகு லாவும் எங்கட் குவகை யூறி யோங்குதே
உன்னை டேகு லாவும் எங்கட் குவகை யூறல் ஒப்பவே
மன்னி டுச்சன் மார்க்கம் நாங்கள் மன்னி டச்செய் தோடுவாய். (2)

முன்னும் பின்னும் ஓடு கின்ற மொய்ம்பு மிக்க ஊஞ்சலே
பின்னே யோடுந் தூர மேநீ முன்னும் ஓடு கின்றனை
பின்னே யோடுந் தூர மேநீ முன்னும் ஓடு கின்றதால்
என்ன நீதி பன்னு கின்றாய் ஏந்தி ழைமார் தோழியே. (3)

முன்னும் பின்னும் ஓடு கின்ற மொய்ம்பு மிக்க ஊஞ்சலே
இன்ன லெய்தல் இன்ப மெய்தல் இந்நி லத்தி யற்கையாம்
என்ன இன்னல் எய்து மோபின் அன்ன தின்பம் உண்டெனப்
பன்னு கின்றாய் பன்னு கின்றாய் பண்மொழியார் தோழியே. (4)

அந்த ரத்தில் அங்கு மிங்கு மாக ஓடும் ஊஞ்சலே
அந்த ரத்தில் உன்னு தாரம் அவனி தானே யாகுமாம்
அந்த ரத்தில் உன்னு தாரம் அவனி தானே யாதலால்
சொந்த மாய்ச்சொல் நீதி யென்ன சொர்ன மாதர் தோழியே? (5)

அந்த ரத்தில் அங்கு மிங்கு மாக ஓடும் ஊஞ்சலே
இந்த லோகம் ஒன்று மின்றி இயங்கு மாறு தோற்றினும்
இந்த லோகத் திற்கா தாரம் ஈசன் என்னும் உண்மையைச்
சிந்தை காணச் செப்பு கின்றாய் சேல்விழியர் தோழியே. (6)

கந்த மாருங் கூந்தல் மேவும் கன்னி மார்க ளிக்கவே
பந்தப் பட்ட பாடு மூன்றாய் பால்மொழியர் தோழியே
பந்தப் பட்ட பாடு மூன்றும் பாராட் டாது பரிந்து நீ
விந்தை யாகப் பண்ணி சைத்து விளம்பு நீதி என்னடி. (7)

பந்தப் பட்ட பாடு மூன்றும் பண்ணி சைக்கும் ஊஞ்சலே
நந்த மக்கு நாட்டு நன்மை நல்கும் இன்னல் எஃதையும்
சிந்தனைசெய் யாமல் அன்பு செறிய வேண்டும் என்னுமோர்
சந்த நீதி சாற்று கின்றாய் சவிவி ழியர் தோழியே. (8)

கன்னல் சேருங் கனிகள் சிதறக் கடுகி யோடும் ஊஞ்சலே
உன்னை டேகு லாவு வோர்க்குற் சாகம் ஊட்டு கின்றனை
உன்னை டேகு லாவு வோர்க்குற் சாகம் ஊட்டும் உன்னையே
நன்ன லங்கள் நவிலு கின்ற ஞானத் தோழி என்னலாம். (9)

பொருட் குறிப்புகள்.

பாட்டு 1. வன் கயிற்றால், உறுதியான கயிற்றால். எழில் விருட்சத்து எய்திடும், அழகிய விருட்சத்தில் பொருந்தியுள்ள. பாரினுக்கும், பூமிக்கும். காரினுக்கும், மேக மண்டலத்திற்கும். கார், மேகம்.

பாட்டு 2. மன்னிடும் சன்மார்க்கம், நிலைபெற்ற நன்னெறி. மன்னிடச் செய்து, பொருந்தியிருக்கச் செய்து.

பாட்டு 3. மொய்ம்பு, வலிமை, பலம். பன்னுகின்றாய், சொல்லுகின்றாய்.

பாட்டு 4. இன்னல் எய்தல், துன்பம் உறுதல்.

பாட்டு 5. உன்னு தாரம் அவனிதானே யாகுமாம், உனது ஆதாரம் பூமியே ஆகும்.

பாட்டு 6. சேல், கயல்மீன். சேல்விழியர், கயல் மீன்போன்ற கண்களுடைய பெண்கள்.

பாட்டு 7. கந்தம் ஆரும் கூந்தல், வாசனை நிறைந்த கூந்தல். பந்தப்பட்ட, கயிறுகளினால் கட்டுப்பட்ட. பரிந்து, அன்பு கூர்ந்து. பண் இசைத்து, இசையுடன் ஒலித்து.

பாட்டு 8. சந்த நீதி, அழகிய நீதி. சாற்றுகின்றாய், சொல்லுகின்றாய். சவி விழியர், ஒளி பொருந்திய கண்களுடைய பெண்கள். சவி, ஒளி.

பாட்டு 9. கன்னல், சர்க்கரை யன்ன இனிமை. கடுகி ஓடும், விரைவாய் ஓடும். (ஊஞ்சல் விரைந்தோடும் அதிர்ச்சியில், புஷ்பங்கள் சிதறுவது. இரண்டாவது பாட்டில் குறிக்கப்பட்டிருப்பது போல இந்தப் பாட்டில் கனிகளும் சிதறுவதாகச் சொல்லப் பெற்றிருக்கிறது.)

பாரதநாட்டு நாரீமணிகளின் வீர எழுச்சி.

(ஸ்ரீமான் ஆ. வ. பதுமநாப பிள்ளை.)

"சர்வம் சக்திமயம் ஜகத்" என்பது நமது முன்னோர் கண்ட உண்மைமொழி. சக்தியின்றி சிவம் அருள்நல்க லலாது; இலக்குமியின்றி நாரணன் அருள் பொழிய இயலாது; கலைமகளின்றி நான்முகன் வாக்கு எழும்பாது. ஆகலானே, சிவம் இடப்பாகத்தினும், மாயவன் மார்பிலும், நான்முகன் நாவிலும் தத்தமது ஆருயிர்த்தேவியரை வைத்து அருள்புரிவாராயினர். செல்வத்தை விழைவோர் பங்கயச் செல்வியை ஏத்துகின்றனர்; கல்வியை விரும்புவோர் கலைமகளைப் போற்றுகின்றனர்; சித்தியை வேண்டுவோர் சக்தியை வழுத்துகின்றனர்; வீரத்தை வேண்டுவோர் போருக்கிறைவியாம் காளியைக் குறித்து நோற்கின்றனர். ஆதலின், வேண்டுவார் வேண்டியாங்களிக்கும் விமலைகளும் பெண் தெய்வங்களே! மக்கள் தோற்றத்திற்கே மங்கையரன்றோ காரணர்! இந்நில வுலகில் நிகழ்ந்த பலபெரும் போர்களும், மங்களகரங்களும் பெண்கள்பொருட்டு நிகழ்த்தப்பட்டவைதானே! பலதிறப்பட்ட வீரர்களை ஈன்றளித்து, உலகின் இடுக்கண்களை அவ்வப்போது போக்குவோரும் பெண்களே!

பண்டைகாலத்தில், ஏனைய அனைவரும் நாணித்தலைகுனியுமாறு, நமது பாரததேவி, 'பூசுவன பூசி புனைவன புனைந்து', தேசுபெறச் சீரிய கலை அணிந்து, செங்கோல் தாங்கி, வீரமும், இரக்கமும், அருளும் பொங்கித் ததும்பிப் பொலியும் திருமுகத்தினளாய்—தனி முடி கவித்து அரியாசனத்தமர்ந்து அரசாண்டு வந்த நாட்களிலே—நமது பாரதகண்டத்துப் பெண்மணிகள் பல்கும் கல்விக்குறையுள்களாய், கற்புக்குப் புகலிடங்களாய், வீரத்திற்குப் பிறப்பிடங்களாய், அருளுக்குக் கொழுக்கொம்புகளாய் வாழ்ந்து வந்தனர். வேதகாலத்திலே, பற்பல வீரத்தாய்மார்கள் வைராக்கியமும் ஞானமும் வளர்ந்தோங்கும் தபஸ்வினிகளாய், ஆன்மஞானக் கல்வி பயின்று, உண்மை நிலை தெளிந்து ஒழுகி வந்தனர். (இதனை வலியுறுத்தப் போதிய சான்றுகள் வேத ஆராய்ச்சியாளர்க்கு இனிது புலனாகும்.)

எத்துணை இடுக்கண்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து விளைந்து துன்புறுத்தினும், தாங்கொண்ட கொள்கையை—உண்மையை, கற்பை—ஒரு சிறிதும் நழுவவிடாது, 'இடும்பைக் கிடும்பை படுப்பர்; இடும்பைக் கிடும்பை படாஅ தவர்.' பொய்யா மொழியார் பொன்னுரைக்கு இலக்கியமாக, உறுதியோடு பொறுத்து நின்று, காத்துக்கொண்டோரும் கற்புக்கரசிகளாம் பெண்மணிகளே! காடுபுகுந்து, காந்தனை விடுத்து, கண்மணியான செல்வச் சிறுவனைக் கடுவிஷப்பாம்பிற்குப்பலிகொடுத்து, வேதியன் வீட்டில் அடிமைப்பட்டு வாழ்ந்தும், தமது கணவனாலேயே வாள்வீசப்பெற நேர்ந்தும் சத்தியநெறியினின்றும் சந்திரவதியார்சிறிதேனும் பிறழ்ந்தனரோ! வல்லரக்கனால் வஞ்சிக்கப்பட்டு, தலைவனும் தசரத திருக்குமாரனிடத்தினின்றும் பிரிக்கப்பட்டு, அரக்கியர் பலரால் அச்சுறப்பட்டு, அருந்துயர் உழன்ற போதும் அன்னை ஜானகியார் இராவணனது பசப்பு வார்த்தைகளில் மயங்கினரோ! அல்லல்களினின்றும் அகன்று, இராமன்பால் எய்துதற்குத் தனது தோளில் இவர்ந்து வருமாறு அநுமான் வேண்டியதற்கேனும் உடன்பட்டனரோ! "ஆரந்தாழ் திருமார்பற்கமைந்த தோர் தாரந்தானலனேனுந்த யாவெனும்—

ஈரந்தானகத்தில்லை யென்றானுந்தன்—வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்"—என்றன்றோ தனது ஆர்வலனது கடனும் வீரத்தை அறிவுறுத்தியருளினர்! அவ்வீரத்தாயின் தீரத்தை என்னென்று விரித்துரைப்பது?

மற்றும், மாயம் வல்ல அரக்கரோடு தத்தமது வீரக்கணவன்மார் போராடிச் சலித்து சிறிதே தளர்வுற்றகாலத்து, அஞ்சாது போராடி வெற்றியளித்தோரும் பெண்மக்களே! இமையவர்க்கொரு தனி பெருந்தலைவனும் இந்திரனையும் அச்சுறுத்திச் சஞ்சலமுறச்செய்த சம்பராசுரனோடு தசரதசக்கரவர்த்தி கொடுஞ்சமர் புரிந்து சிறிதே தளர்வுற்றகாலத்து, அம்மன்னனது வாழ்க்கைத் துணைவியருள் ஒருத்தியாம் கைகேசி, அச்சத்தை அகற்றி, வீரவேசங்கொண்டு வேந்தனுக்குப் பேருதவி புரிந்து அரக்கனது செருக்கை அடக்கி ஒழித்து மடிவித்தனளன்றோ! அவ்விந்திரனையே மற்றொருமுறை அச்சுறுத்தி, நல்லோரை அல்லற்படுத்தித் திரிந்த நரகாசுரனோடு, பூபாரந்தீர்க்கப் புகுந்த புயல்வண்ணனும் கண்ணபிரான், கடும்போர் புரிந்து சிறிதே அயர்வுற்றவிடத்தே, உடன் சென்றிருந்த காதலி சத்யபாமை வில்லெடுத்து, அமர்விளைத்து, வீறுகொண்டு போராடி, அவ்வசுரனைப் போக்கி உலகின் துயரை நீக்கினளன்றோ! அன்றியும், நமது பாரதகண்டத்துப் பண்டைய அன்னைமார் திறமை படைத்திருந்தமை போர்த்தொழிலில்மட்டுமன்று; தேர்த்தொழிலிலும் வல்லவராகவே இருந்தனர். மகாபாரதத்திலே, கண்ணபிரான் தங்கையாம்சுபத்திரை தன்னைக் கடிமணம்புரிந்து தேரேற்றிச் செல்லும் விஜயனோடு எதிர்த்து வந்த யாதவசேனைகள் போராடி தோல்வியுறும்போது, தாங்கள் இவர்ந்து செல்லும் இரதத்தினை மிகத் திறம்படச் செலுத்திச் சென்றனள் என்று கூறப்பெறுவதே இக்கூற்றினை வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

பின்னும், வேறெவராலும் வெல்லமுடியாத மகிடாசுரனைதுர்க்காதேவியே வென்றுகொன்று அதருமத்தை வேரறுத்தனளன்றோ! ஐந்திணை நிலங்களுள் ஒன்றும் பாலைநிலத்தில் வாழும் மக்கள் போர்த்தொழிலையே பெரிதும் பூண்டவர்களென்பதும், போருக்குத் தெய்வம் காளி என்பதும் ஒல்காப்பெருமைத் தொல்காப்பியர் கூற்று. ஆதலினன்றோ பாண்டவரும் போர் தொடங்குமுன் காளிக்கு நரபலியாங் களபலியூட்டி, மகிழ்வூட்டித் துதித்து அருள் பெற்றபின் வெற்றிபெற்றனர். பிற்காலத்தில், சிவாஜியும் தேவியைப் போற்றிவிடைகொண்டு சென்றுபலபோர்களில் வெற்றிபெற்றமை பலருமறிந்ததொன்றே. கீழ்வரும் அருணகிரிநாதர் அருள்மொழிகளாலும் காளிதேவியின் வீரம் புலனாதல் காண்க :—

"காளி திரிபுரை அந்தரி சுந்தரி—ஆதிமலைமகள்
மங்கலை பிங்கலை ;
குடிலை யோகினி சண்டினி குண்டலி—குறைவிலா
ளுமை மந்தரி அந்தரி
காளவிடமுணி மாதங்கி வேதஞ்சொல்—பேதை
நெடுநீலி சாமுண்டி வாழ்வஞ்சி ;
நவயாவி நீலி மோடி—குலிச குடாரியாயி ;
நீலசுந்தரி கோமளி யாமளி—நாடகம்பயில் நாரணி
பூரணி ;......
அநுபவை யம்பிகை யனுதினை யம்பைத்ரி
யம்பகியா சம்பரை பாசாங்குசை ;
அரகை யஞ்சலி யதிகுண சுந்தரி—யந்தரி காலாந்தகி
மேலாந்திரு"......

மற்றும், தமது கணவன்மாரின் வெற்றிக்காக தக்கசமயத்தில் ஆருயிரையும் பொருட்படுத்தாது அளிப்பதன்றோ உயர்குலப் பெண்டிர்தம் இயல்பு. மகாபாரதத்திலே

"एतद्धि परमं नार्याः कार्यंलोके सनातनम् ।
प्राणा नपि परित्यज्य यत्भर्तृ हितमाचरेत्" ॥

(இ—ள்.) "தங்களுடைய பிராணனை விட்டாவது கணவர்களுக்கு நன்மையைச் செய்வதே நங்கையர்க்கு இவ்வுலகில் அதிக உயர்வுடையதும் பெருமை தரத்தக்கதுமான செயல்" என்று ஆதிபர்வ சுலோகம் கூறுவதுங் காண்க.

அன்றியும், சகிக்க ஒண்ணாத துயரம் வந்தவிடத்து, மயங்கிப் புழுங்கித் தயங்காது, அச்சத்தை உதறித்தள்ளி, வீர எழுச்சியோடு வீறுகொண்டெழுந்து, அறத்தின் உண்மையை விளக்கி, அநீதியின் கொட்டத்தை அடக்குவது, எவ்வாற்றானும் நற்குணப்பெண்டிர் மாண்புக்கு மாறுபாடாகாது. பூபாரந்தீர்க்கப் புகுந்த தேவியும் ஐவர் அகங்கட்கும் ஒரு தனிக் கண்மணியாய் விளங்கியவளுமான திரௌபதை கௌரவர்களது சபையிலே துரியோதனனது அழிம்புச் செயல்களை அடக்க அஞ்சி, பதுமைகளே போல வீற்றிருந்த மன்னர் முன்னிலையிலே, ஆண்டவன்பால் சுமையைப்போட்டு, மானத்தைக் காத்துக்கொண்டு கூறிய சூளுரைகளை நோக்குங்கள் :—

"அரசவையி லெனையேற்றி அஞ்சாமல் துகிறீண்டி
அளகந்தீண்டி
விரைசெயளி யினம்படிதார் வேந்தரெதிர் தகா
தனவே விளம்புவோரை
பொருசமரில் முடிதுணித்துப் புலானறு
வெங்குருதி பொழியவெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்த குழலினி
யெடுத்து முடியேனென்றாள்."

பத்தினிக் கடவுள் என்று போற்றப்படும் கண்ணகி அம்மையார் தமது ஆருயிர்க் கணவன் கோவலன் பொற்கொல்லனது சூழ்ச்சியால் வெட்டுண்டிறந்தான் எனக் கேள்வியுற்றதும் அழுது சோம்பி நின்றனரோ? அஞ்சிவாளாகிடந்தனரோ? பின் என்செய்தார்? வீர எழுச்சியுற்று, சரேலெனச் சென்று, அரசனது அரண்களைக் கடந்து, மன்னவனை நண்ணி, தமது கணவனின் பிழையின்மையையும் அவனைக் கொல்ல ஏவிய அரையனது பெரும் பிழையையும் கண்ணுக்கெதிரே விளக்கிக் காட்டினான்றே! துஷ்யந்தன் சபையிலே வீர உரைகளைப் பொழிந்து வேந்தனது மதிமயக்கத்தைத் தெளிவுறச் செய்து, தனது கற்பை நிலைநிறுத்திய நேரிழை சகுந்தலையன்றோ! அக்கற்புக்கரசிகளின் — வீர நாரீமணிகளின் — வழித்தோன்றிய தற்கால பாரத பெண்மணிகாள்! ஆட்சிமுறையின் தாறுமாறான செயல்களைத் தெள்ளிதில் விளக்கிக்காட்டி நீதிமுறைகளை நேரிதில் விளக்கி உண்மை தெளியச்செய்வது மாதர் மணிகளான உங்கள் கடனன்றோ? அவ்வீர எழுச்சி இந்நாட்களில் ஏன் உங்கள்பால் சிறிதும் தோன்றவில்லை? அரசியல் விஷயங்களில் ஆடவரைமட்டும் புகுத்திவிட்டு, வீரர்வழித் தோன்றிய நீவிர் வீணே காலத்தைக் கழிப்பது அழகாமோ? சகோதரிகாள்! இவ்விவேகானந்த சுவாமிகளது மொழிகளைச் சிறிதே கவனியுங்கள்:—

"Oh ! India ! Forget not that the ideal of thy womanhood is Sita, Savitri, and Damayanthi; forget not that thy marriage, thy wealth, thy life are not for sense-pleasure, are not for thy individual personal happiness ; forget not that thou art born as a sacrifice to the mother's altar. (ஏ ! இந்தியாவே! உனது பெண்தன்மையின் நோக்கம் சீதை, சாவித்ரி, தமயந்தி என்பதை மறந்துவிடாதே ; உனது மணம், செல்வம், வாழ்க்கை முதலியன இந்திரிய சுகபோகத்திற்காக அல்ல என்பதை மறந்துவிடாதே ; நீ அன்னையினுடைய பீடத்தில் இடப்படுவதற்கு ஒரு பலியாகப் பிறந்திருக்கின்றாய் என்பதை மறந்துவிடாதே !")

பின்னும், சங்ககாலத்திலே, இக்காலத்தார் நெஞ்சம் நடுங்குமாறு, அரும்பெரும்வீரச் செயல்கள் வாய்ந்த அன்னைமார் பலர் இருந்தமை புறநானூற்றுச் செய்யுள்களாற்புலனாகும். இவற்றுள் 'தன் மகன் போரிற் புறமுதுகிட்டு ஓடினன்' என்று கேள்வியுற்ற நரைமயிர்க்கிழத்

தாய் ஒருத்தி, 'அஃது உண்மையாயின், அவனுக்குப் பாலூட்டியகொங்கைகளை அறுத்தெறிவேன்' எனச் சூளுரை கூறி, களஞ்சென்று தேடுங்கால், அவன் வெட்டுண்டு மாண்டு கிடத்தலைக் கண்டு, அவனை ஈன்ற நாளினும் பேருவகை எய்தினாள் என்பதூஉம் 'முதல்நாள், தனது கணவனையும், மறுநாள் தன் தந்தையையும் போரிலே சாகக் கொடுத்த மற்றொருத்தி, சிந்தை கலங்காது போர்ப்பறைகேட்டு இன்றும் தனது ஓர் மகனாஞ் சின்னஞ்சிறுவனைச் சிங்காரித்துச் செருக்களத்திற்குச் செல்ல விடுத்தாள்' என்பதும் குறிப்பிடற்பாலன. சென்ற இரண்டொரு நூற்றாண்டுகட்கு முன்புகூட, வடநாட்டிலே பகைவனும் அலாவுதீன் கையிற்சிக்கிய சித்தூர் அரசனும், தனது கணவனுமான பீமசிங்கை விரோதிகளிடத்தினின்றும் தந்திரமாக விடுவித்த "பத்மினி" என்ன! சித்தூர்க்கோட்டையைக் கைப்பற்ற முனைந்து, அருஞ்சமர்புரிந்த அக்பரோடு, ஆணுடை அணிந்து அமர்க்கெழுந்து, பல மொகலாயர்களையும் வதைத்து, படைத்திறம் மிகப்படைத்த அச்சேனையோடு உயிர்போகும்வரை வீரவெறிகொண்டு போராடிய 'கிருஷ்ணகுமாரி' என்ன!—பதின்மூன்று பருவமே வாய்ந்த தன் மகன் வீரசிம்மனோடு பகைவனும் அஸப்கானது சேனைகளை எதிர்த்துப் போராடி, அழகிய கண்ணிலே அம்பொன்று தைக்கப்பெற்று அருந்துயர் உழந்தும் அகந்தளராது, பகைவரது படைவலியின் மிகையால், மானத்திற்குப் பங்கம் விளையும் போற்றோன்றிய வேளையில், வீர சுவர்க்கம் புக்க இராணி துர்க்காவதி என்ன!—தமிழ்நாட்டிலே தனது குடிமக்களை தருமநெறி தவறாது மிகத் திறம்பட ஆண்டுவந்த மதுரைக்கரசியாம் 'மங்கம்மாள்' என்ன! இன்னோரன்ன மங்கையர் திலகங்களின் அஞ்சா வீரத்தை என்னென்று எடுத்துரைப்பது! யாங்ஙனம் வருணித்து எழுதுவது?

சகோதரிகாள்!—இங்ஙனம் கூறுவது, நீவிரும் படைதாங்கிப் போர்புரிந்து ஆருயிர் துறத்தல் வேண்டும் என்பது குறித்தன்று; நமது தற்கால நிலையிலே—அடிமைவாழ்க்கையிலே—ஆயுத பலத்தாற் பயன்பெறல் அரிதே; ஆன்ம சக்தியே, அடிகள் உபதேசப்படி மேற்கொள்ளற்பாலது; 'உங்கள் முன்னோரின் பெருவீரத்தை நன்கு உணர்ந்து, அத்தகைய தியாக புத்தியை—அஞ்சா உறுதியை—பெற்று, வீர எழுச்சிகொண்டு சத்தியாக்கிரக நெறி கடைப்பிடித்து நாட்டு நலத்திற்கு உழைக்க முன் வருதல் வேண்டும்' என்பது பொருட்டேயாம். இவை சகோதரிகளாகிய உங்களுக்குக் காந்தியடிகள் விடுத்த விண்ணப்பமொழிகள்:—"ஆண்மக்களுக்கு அஞ்சாமை எவ்வளவு அவசியமோ, பெண்மக்களுக்கும் அஞ்சாமை அவ்வளவு அவசியமேயாகும்; இந்த (ஒத்துழையா) இயக்கத்தில் அவர்கள் வந்துசேர்ந்தால்தான் அன்னார்க்குஇயற்கையாகஉள்ள வீர உணர்ச்சிஎழுந்து நிற்கும். உலகிலே உண்மை அல்லது அறம் என்று ஒன்று இருக்குமாயின் பெண்மணிகள் தங்கள் கற்பைக் காத்துக்கொள்ளத் திறனுடையவர்கள் என்று உறுதியாக உரைக்கின்றேன். "நான் தூய்மையோடும் கற்பைக் காத்துக்கொள்ளும் உறுதியோடும் இருக்குமாறு அருள்புரிக" என்று பரிசுத்தமான உள்ளத்தோடும், ஆண்டவனை வேண்டும் ஒவ்வொரு பெண்மணியையும் கடவுள் காப்பாற்றுவார் என்பதில் ஐயமில்லை" ("நவஜீவன்" பிப்ரவரி 1922 ஹூ). இப்பொன்னுரைகளை உற்று நோக்குங்கள்; உணர்ந்து ஒழுகுங்கள்; உய்வீர்கள்.

பாஞ்சாலியின் வழிவந்தபாரதபுத்திரிகாள்! கண்ணகியின் வழித்தோன்றிய காரிகைகாள்!!

வாசுகி அம்மையார் வழியினுதித்த நாரீமணிகாள்!!! உண்மைக்கல்விப் (தெய்விக, சுதந்தர, தேசியக்கல்வி) பயிற்சியை ஆடவர் ஒரு சிலர் மட்டும் பயில்வது போதுமோ? பெண்மக்களும் அத்தெய்விகத் தேசியக்கல்வி பயின்றாலன்றோ முன்னோரது வீர எழுச்சியையும், இந்நாட்களில் நமது கடமையையும் நன்கு உணர இயலும். கல்வியிற் பெரியராங் கம்பரும்,

"பெருந்தடங்கட் பிறைநுதலார்க்கெலாம்—பொருந்து
செல்வமும், கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க் கீதலும்—வைகலும் விருந்துமன்றி
விளைவனயாவையே"

என்று கூறுவதால், அறத்தையும் அருளையும் வளர்க்குங்கல்வி பெண்மணிகட்குப் புதிதன்று என்பது புலனாகின்றதன்றோ! சகோதரிகாள்! அதனைமறந்து 'தற்கால நவீன 'நாகரிக' மேலையர் முறையில் பயில்வதுதான் உயர்தரக் கல்வி என்று கருதினீர்களோ!' 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது' எனும் மொழியை நினையுங்கள். "அலகுசால்கற்பின் அறிவுநூல்கல்லா துலகநூல் ஓதுவதெல்லாம் கலகலகூஉந் துணையல்லாற்கொண்டுதடுமாற்றம் போகுந்துணையறிவாரில்" எனும்நாலடியை நன்கு கூர்ந்து நோக்குங்கள். அயல்நாட்டுப் பெண்களின் ஆழ்ச்சியில் சிக்கிச் சீரழியாதீர்கள்! உங்கள் முன்னோராம் ஆரியநாரீமணிகளின் அஞ்சா உறுதியை—வீர எழுச்சியை, தெய்விகக் கல்வியை, அருட்பயிற்சியை—ஆழ்ந்து கூர்ந்து சிந்தித்துப் பார்த்து, அறநெறி கடைப்பிடித்து, ஒழுகுங்கள். ஒரு சிலர்—மிகச் சிலர்—சர்வகலாசாலைகளில், B.A., M.A. முதலிய பட்டங்களைப் பெற்று வெளிக் கிளம்புவதில் பயன் மிகவிளையாது என்பதை உணருங்கள்.

நமது பாரத மணித் திருநாட்டு அன்னை தனது உரிமைஇழந்து, உவகை ஒழிந்து,விரிந்த குழலும், குலைந்த உளமும், கந்தைக் கலையும், நீர் பொழியுங் கண்களும் உடையளாய் பெருந்துயர்க் கடலின் கரைகாணாது வருந்திக் கிடக்க, பற்பல ஆண்மக்களும் அவளது உயர்வு கருதி உழைத்துவரும் இந்நாட்களிலே அன்னையின் அருந்தவப் புதல்வியராம் நீவிர் நவீனநாகரிகமயக்கப்பித்தேறில்நல்லுடையிலும்,நல்லணிகளிலும் கருத்தைச்செலுத்தி 'நமக்கென்ன' என்றுவீண்காலம்போக்குவதுவீரத்தாய்மாரின் வழித்தோன்றிய உங்கட்கு அழகாமோ! முறைதானோ!! இதுகாறும் கொண்ட பேருறக்கம் இனியும் வேண்டாம்; முன்னோர் முறைகளைப் பின்பற்றி, 'சக்தி' அம்சங்களாய் நீவிரும் சத்தியாக்கிரகப்போரில் சரோஜினி தேவியைப் பின்பற்றி, பாரதநாட்டு ஏழைச் சகோதரிகள் பாலும் பல்லாயிரக் கணக்காக ஆண்டுதோறும் மாண்டுவரும் சிசுக்கள் பாலும் இரக்கங் காட்டி வீர எழுச்சிகொண்டு உழைக்க முன் வருவீர்களாகுக. பாரத தேவி அருள் புரிக.

வந்தேமாதரம்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

செலிமாபேகம் அல்லது மொகல்மன்னரின் அந்தப்புரம்.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(163ம் பக்கத் தொடர்ச்சி.)

சிறையிலடைபட்ட நாள்முதல் தன்னையும் செலிமாவையும்பற்றிய சிந்தை அவனது மனதை விட்டு க்ஷணநேரமேனும் விலகவில்லை. யாரிடமாவது ஒருவன் தன் துக்கத்தை வெளியிட்டுச் சொல்லும்பக்ஷத்தில், துக்கங் கொஞ்சங் குறையும். ஆனால் மாஹரூனுக்கு அவ்விதம் செய்யச் சமயமே வாய்க்கவில்லையாகையால், இருக்க இருக்க அவனது துக்க மதிகரித்துக்கொண்டே வந்தது. அவ்வேளை மாஹரூன் சயனித்திருந்தான். மனதைப் பேதிக்கும்படியான குரலில், "தயாநிதி ! இன்னுமெவ்வளவு நாட்கள் நானிக்கஷ்டத்தைச் சகித்துக்கொண்டிருப்பேன் ? நாகத்தின் தலையிலிருக்கும் இரத்தினமும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதின் தீவிர விஷத்தால் மிகவும் கஷ்டப்பட்டு நானிறந்துகொண்டிருக்கின்றேன். நிர்த்தோஷியான செலிமாவின் கதியென்னவாயிற்றோ ? செலிமா ! சுந்தரி ! என்னைப்போலவே நீயும் காராக்கிருகத்தில் அடைபட்டு அவஸ்தைப்படுகின்றாயோ ? இவ்வுலகில் நியாயமென்பதில்லை பிரேமையில்லை, விசுவாசம் நிலைக்கவில்லை, யாதொன்றுமில்லை. செலிமா! நீ உயிருடனாவது இருக்கின்றாயா ? யாருமறியாத ஒரு பாதாள அறையில், குரூர ஸ்த்ரீயின் கூர்மையான வாளுக்கு நீ யுன் பிராணனைத் தத்தஞ் செய்திருப்பாயெனத் தோற்றுகிறதே ! செலிமா ! செலிமா ! கடைசியாக இப்பாவியா உன் மரணத்திற்குக் காரணமாயிருக்கவேண்டும் ?"

ஒன்பதாவது அத்தியாயம்.

மறுநாள் மாஹரூன் இருள்மிக்க சிறையில் சிந்தையிலாழ்ந்துட்கார்ந்திருந்தனன். வெளிச்சம் இருக்கஇருக்கக் குறைந்துகொண்டுவரவே, சூரியன் அஸ்தமனமாகும் வேளையாயிருக்க வேண்டுமென எண்ணினன்.

அவ்வறையிலோர் மூலையில், மாஹரூனுக்காக வந்திருந்த ஆகாரம் அப்படியே வைக்கப்பட்டிருந்தது. மிகவும் கொஞ்சமே அவனன்று உண்டான். ஆகாரம்முதலியவைகளைக்கொண்டு வரும்பொருட்டு காலை மாலை இருவேளைகளிலும் ஒரு வேலைக்காரன் வந்துகொண்டிருந்தான். ஆனால் மாஹரூன் அவனிடம் ஒரு வார்த்தையேனும் பேசுவதில்லை.

பேசப்பேச மாஹரூனது நேத்திரங்களினின்றும் நீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. மிக்க வேதனைக்குட்பட்டவனாய் ஓர் பைத்தி

யக்காரனைப்போல், "ஆஹா ! செலிமா ! செலிமா!" என்று உரக்கக் கூவினான். நிச்சத்தமாயிருந்த அக்காராக்கிருகத்தில் அவனது சத்தத்தின் எதிரொலி, 'செலிமா!' வென்று ஒரு புறங் கிளம்பியது.

சற்று நேரங் கழித்தபின்னர், கதவருகிற் சத்தங்கேட்டு, உணவு கொண்டுவரும் வேலைக்காரனாயிருக்கலாமென மாஹரூன் நினைத்தவண்ணமே, பாராக்காரன் உள்நுழைந்து, கையிலிருந்த விளக்கைக் கீழே வைத்தபின், நிதமும் வைத்து வந்த இடத்தில் ஆகாரத்தை வைத்தனன். விளக்கின் வெளிச்சத்தைக் காணவே, மாஹரூன் கண்களை மூடிக்கொண்டான். ஏனெனில் எப்பொழுதும் இருளிலிருப்பவனுக்கு விளக்கின் பிரகாசத்தைக் காணக் கண்கள் கூசுவது சகஜமே.

பாராக்காரன் சிரித்துக்கொண்டே, "மாஹரூன்! சௌக்கியந்தானே ?" என்றனன்.

பாராக்காரன் சாதாரணமாகக் கேட்ட இக்கேள்வியானது மாஹரூனது மனதைப் பிளந்தது. கோபங்கொண்டவனாய், "நான் துக்கத்திலாழ்ந்திருக்கும்பொழுது என்னை இப்படிப் புண்படுத்துவது நியாயமா ? கேவலம் ஒரு புழுவும் மனிதனின் காலடியிற் சிக்குங்கால், கோபம்வந்து துள்ளுகிறது. அப்படியிருக்க, நீ என்னைப்போலுள்ள ஒருவனுக்கு வீண் சங்கடத்தை யுண்டுசெய்கின்றாய். உன்னிடந் தயை யென்பது எள்ளளவுமில்லையா ?" என்றனன்.

இதைகேட்ட பாராக்காரன், "மாஹரூன் ! வீணிற் கோபங்கொள்ளவேண்டாம். உன்னிடந் தயை காட்ட என்னிடமென்ன சாதனமிருக்கின்றது ? நான் ஆக்ஞைப்படி நடக்கவேண்டிய வேலைக்காரன். உனக்கு அன்னமும் நீரும்கொடுக்கக்கூடாதென்று பாதுஷாவினது கண்டிப்பான ஆக்ஞையாயிருந்தும், உன் மேலிரக்கங்கொண்டே நானிவைகளைக் கொணர்ந்துகொடுத்து வருகின்றேன்" என்றனன்.

இவனது பேச்சைக் கேட்டு மாஹரூன் அலக்ஷியமாகச் சிரித்து, "நீ கொணர்ந்த ஆகாரத்தை எடுத்துச் செல். எனக்கு அது தேவையில்லை. நீ காலையிற் கொண்டு வந்ததுகூட ஏறக்குறைய அப்படியே யிருக்கிறது. அதையுமெடுத்துச் செல்" என்றனன்.

"என்ன? இதுவரை நீ ஆகாரமுட்கொள்ளவில்லையா ?"

"எதற்காகச் சாப்பிடவேண்டும்? யாருக்கு உலக வாழ்க்கையிற் சுகமுண்டோ, அவனல்லவோ உண்ணவேண்டும். எனக்கு மரணத்திற் சுகமிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாகாரமல்லாது எனக்கு விஷங்கொணர்ந்து கொடுப்பாயாகிற் பெருத்த உபகாரமாயிருக்கும்."

அச்சமயம் வெளியே செல்லக் கருதி அவ்வேலைக்காரன் காராக்கிருகத்தின் இரும்புக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, மத்தியில் நின்றபடியே, மாஹரூனைப் பார்த்த வண்ணம் தலையை அசைத்துச் சிரித்துக்கொண்டே, "விஷத்தையுண்டு அவள் ஆத்மஹத்தி செய்துகொண்டதுபோல், நீயும் செய்துகொள்ளாவிடில் நீ யவளை இச்சித்ததற் கென்ன பலன்?" என்றனன்.

பாராக்காரன் அதிகமாகப் பேச அவகாசமில்லை. அவனது உன்மத்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், கோபங்கொண்ட புலியைப்போற் பாய்ந்து, பாதி திறந்திருந்த கதவை விரைவாகச் சாத்தினன். பாவம்! அப்பாராக்காரன் கதவிற் கிடுக்கிற் சிக்கி, ஒரு க்ஷணத்திலிறந்தான். கொஞ்சநேரங் கழித்து மாஹரூன் கதவைத் திறக்கவே, துரதிர்ஷ்ட

பாராக்காரனது தேகம் திடீரென காராக்கிருகத்தில் விழுந்தது.

மாஹரூன் மெய் மறந்தான். ஆவேசத்திற் செய்த பயங்கர காரியத்தால் பின்னுற் செய்வது யாதெனத் தெரியவில்லை. ஞான சூனியனானான். கொஞ்சநேரஞ் சென்றபின், ஆவேசங் கொஞ்சம் குறையவே, தன் ஞாபகத்திற்கு வந்தான். வெகு விரைவாகப் பாராக்காரனது உடுப்புகளைக் கழற்றித் தானணிந்து கொண்டான். வாளுறையில் அத்துர்ப்பாக்கியனான பாராக்காரனது பெயர் வரையப்பட்டிருந்தது. விளக்கு வெளிச்சத்தில் அதை நன்றாய்ப் படித்துப் பார்த்து, ஞாபகத்திலிருத்திக்கொண்டனன். பிறகு கையில் விளக்கை யேந்தி பாராக்காரன் வேஷந் தரித்திருந்த மாஹரூன் காராக்கிருகத்தை விட்டு வெளிக்கிளம்பினான். வெளியே வந்து கதவைத் தாளிட மாஹரூன் மறக்கவில்லை.

மூன்று கதவுகளையுங் கடந்து மாஹரூன் ஒரு மலைக் குகையின் முகத்துவாரத்திற்கு வந்துசேர்ந்தான். இம்மூன்று கதவுகளையும் இறந்த பாராக்காரன், தான் கிகாராக் கிருகத்திற்குட் செல்லுங்கால், திறந்து வைத்திருந்தான். மாஹரூன் வெளியிற் செல்லும்பொழுது எல்லாவற்றையுந் தாளிட்டுச் சென்றனன். பிறகு கற்படிகளின் வழியாக மேலேறிச் சென்றமாத்திரத்தில், வெளியில் சுத்தமான காற்றடிக்கவே மாஹரூன் மிக்க ஆனந்தமடைந்தான்.

அப்பாராச் சேவகன் செலிமாவைக் குறித்துச்சொன்ன வார்த்தைகள் மாஹரூனின் மனதிற்கு மிக்க துக்கத்தை விளைவித்தது. "செலிமா! செலிமா! நீ விஷத்தை யுண்டு வாஸ்தவமாகவா பிராணத்யாகஞ் செய்துகொண்டாய்! எனது அபராதத்தால் உனக்கு மரணம் வந்ததே! இந்த ஜன்மத்தில் இனி ஒருமுறைகூட உனது தரிசனங் கிடைக்காதே. ஆஹா! என்ன செயவேன்?" என்று கதறினான்.

எதிரில் ஒரு மைதானமிருந்தது. மெதுவாக அந்த மைதானத்தைக் கடந்து செல்ல, மற்றொன்று தென்பட்டது. அதன் வழியாகப்போய்க்கொண்டிருக்க, யாரோ ஒருவன், "யாரங்கே?" எனக் கேட்கவே, மாஹரூன் சாந்தமுடன், "பாராக்காரன் மகமத் உசேன்" என உத்தரமுரைத்தனன்.

மறுபடியுமிவனை யாரும் யாதுங் கேட்கவேயில்லை. சமீபத்திற் செலிமாவின் அந்தப்புரமிருந்தது. இதுவரை ஒவ்வொரு ஜன்னலிலும் ஒவ்வொருவிளக்கெரிந்துகொண்டிருந்தமஹால் அச்சமயம்இருளால்மூடியிருந்தது. மெதுவாய் மாஹரூன் அந்தப்புரத்தின் கதவருகிற் சென்றான். போகும்பொழுதே மனதிற்குள், "செலிமா! வாஸ்தவமாகவே நீ இவ்வுலகிலில்லையா? என்னைப் பரிகசிக்கும்பொருட்டு ஒருவேளை அப்பாராக்காரன் பொய் புகன்றிருக்கலாமோ! இப்பொழுது ஒரே ஒருமுறை தரிசித்து, நேத்திரானந்த மடைந்தாலல்லவோ எனக்கிப் பிறவியின் கடைசி இச்சை பூர்ணமாகும். பிறகு உனது சுகத்தைக் கெடுக்க நானென்றும் வாரேன். நீயும், பாக்கியனான உனது பர்த்தாவும் நீடூழிகாலம் வாழ்க! இந்த அதமன் எப்பொழுதும் உங்கள் சுகத்தைக் கெடுக்கமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டான்.

கதவருகிற் சென்றமாத்திரத்தில், மாஹரூன் தனக்கெதிரில் ஒரு காட்சியைக்கண்டு ஸ்தம்பித்து நின்றான். அவனது மனம் பிளந்தது. தலை சுழன்றது. அக்காட்சியைக்கண்ட நேத்திரங்கள் ஆச்சரியத்தால் அப்படியே உற்று நின்றன. நூறு நூற்றைம்பது ஜனங்கள் கையிற் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்த தீவட்டிகளை ஏந்தி, வெளிப்புறத்திலிருந்த சிம்மதுவாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். ரஸ்

தாக்களிலெல்லாம் சிப்பாய்கள் வியாபித்திருந்தனர். மத்தியிற் சிலர் நீளமான பெட்டியொன்றைத் தோளில் தாங்கி வந்தார்கள். எங்கும் நிச்சத்தமாகவேயிருந்தது. இவ்வளவு ஜனங்கள் கூடிய விடத்தில் ஒருவிதமான சத்தமுமுண்டாகவில்லை—பிரேதத்திற்கு முன்னும் பின்னும் போய்க்கொண்டிருந்த சிப்பாய்களது கரங்களிற் கத்திகளிருந்தன. தீவட்டிகளுடன் வந்தவர்கள் சமீபத்திலேயே இருந்தார்கள். சிப்பாய்கள் கரத்தில் தாங்கிய சஸ்திரங்களிலும், பெட்டியின்மேற் போட்டிருந்த இரத்தினகசித வஸ்திரங்களிலும் தீவட்டி வெளிச்சம்பட்டு எங்கும் ஜ்வலித்தது.

மாஹரூன் ஒரு நிமிஷத்தில் எல்லாவற்றையுமறிந்துகொண்டான். செலிமா இத்துஷ்டமிருத்யுலோகத்தை விடுத்து முன்னாலேயே சுவர்க்கத்தைச் சேர்ந்தனள். வீணாகத் தன்மேலுண்டான கோர அபவாதத்தினின்றுந் தப்ப ஆத்மஹத்தி செய்துகொண்டனள். ஆனால் அவளது அகால மரணத்திற்குக் காரணம் யார்?

மாஹரூனது மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதைப்பற்றி யாரால்தான் சொல்ல முடியும்? பித்தர் தலைக்கேறிப் பிரேத யாத்திரைக்குப் பின்னால் மெதுவாக மாஹரூன் சென்றுகொண்டிருந்தான்.

எல்லோரும் ரஸ்தாக்களைக் கடந்து, கம்பீரத்துடன் சப்தித்துக்கொண்டிருந்த மலை நதியின் தீரத்தைக் கிட்டினார்கள். அப்பொழுது கிட்டத்தட்ட இரவு பத்து மணியிருக்கும். அவ்வேளையில் இருள் மயமாயிருந்ததால், அவ்விடமெங்கும் மிக்க அழகாயிருந்தது. சிருஷ்டி சுந்தரி உவமையில்லாச் சௌந்தரியத்தையடைந்திருந்தனள். நாலா பக்கங்களிலுமிருந்து புஷ்பங்களின் சுகந்தம் வீசியது. பர்வதத்திலிருந்து மெதுவாக வீசி வந்த சீதளமான காற்று ஒவ்வொரு விருக்ஷங்களிலுமிருந்த புஷ்பங்களின் வாசனையை நிச்சத்தமாகச் சேர்த்து எல்லோருக்கும் அர்ப்பணஞ் செய்துகொண்டிருந்தது.

அன்று கிருஷ்ணபக்ஷம் இராத்திரி. சந்திரோதயம் இன்னுமாகவில்லை. ஆகாயத்திலடிக்கடிசிறுமேகங்கள் ஒன்றுகூடிக்கொண்டிருந்தன. நக்ஷத்திரங்கள் ஒன்றுகூடக் காணப்படவில்லை. சந்திரனது பிரகாசமு மில்லை. எங்கும் இருள் வியாபித்திருந்தது. செலிமா இறந்த விசனத்தால் அவ்விரவு மிக்க உக்கிர சொரூபத்தோடு இருள் மூடியிருந்தது. பனித்துளிகள் விழுவது கண்ணீர் வடிப்பதை யொத்திருந்தது. வாயு ரூபத்தில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது. கருப்பு வஸ்திரந்தரித்திருந்த செலிமாவை அழைத்துக்கொண்டு போகவே அன்று அவ்வண்ணமிருந்ததுபோலும்.

தீவட்டி தூக்கிவந்தவர்கள் நதி தீரத்தில் விசாலமான ஓர் இடத்தை யடைந்து அங்கே நின்றார்கள். சஸ்திரங்களைத் தாங்கி நின்ற சிப்பாய்களும் அவ்வண்ணமே செய்தனர். பெட்டியைத் தூக்கிவந்தவர்கள் அதை மிக்க மெதுவாகக் கீழேவைத்தார்கள். பிரேதத்தைச் சுற்றிக்கொஞ்சம் இடம் விடுத்து, ஜனங்களெல்லோரும் நின்று மிக்க விசன முகத்துடன் யாரையோ எதிர்நோக்கியவண்ணமிருந்தார்கள்.

மிக்க நேரஞ்சென்றபின் சந்திரன் உதயமானான். உடனே மோத்திமஹாலின் ஒரு ஜன்னலில் ஒரு தீவட்டியின் வெளிச்சந்தென்பட்டது. சரியான வேளை வந்துவிட்டதென எல்லோருமறிந்தார்கள். சிப்பாய்களும், மற்றுமுள்ளோரும் தத்தமக்குரிய இடத்தில் நின்றார்கள். உடனே நான்கு மௌல்விகளுடன் ஷாஜஹான் பாதுஷா அங்கே வந்து சேர்ந்தான். சிப்பாய்கள் தங்கள் சஸ்திரங்களைக் கீழே தொங்கவிட்டு 'சலாம்' செய்தார்கள். எல்லோரும் நிச்சத்த

மாகவே நின்றார்கள். எப்பொழுதும் உண்டாகும், "பாதுஷாவிற்கு ஜயமுண்டாகட்டும்!" என்ற வாழ்த்துக்களெல்லாம் அன்று கேட்கப்படவில்லை.

பிரேதத்தைச் சமாதியில் வைக்க எல்லா ஏற்பாடுகளும் முன்னாலேயே செய்யப்பட்டிருந்தன. அதிக கம்பீர ஸ்வரத்தில் கொரானிலிருந்து சில சுலோகங்களை நிச்சத்தம், சாந்தம் இவைகள் குடிகொண்டிருந்த இடத்தில் ஒரு மௌல்வி சொல்லலுற்றார். பிரேதப் பெட்டியின்மேல் நானாவித வர்ணங்களில் வாசனை மிக்க புஷ்பமாலைகள் போடப்பட்டிருந்தன. சமாதிக்குள்ளும் எண்ணிறந்த புஷ்பமாலைகளிருந்தன. கணக்கில்லா வாசனைத்திரவியங்களும் அதற்குள் ஊற்றப்பட்டன. அம்மலைப்பிரதேச முழுவதும் வாசனை பாவியிருந்தது.

தாதிமார்கள் செலிமாவின் மிருதுவான தேகத்தை வெளியே யெடுத்து, வாசனைமிக்கப் பன்னீரால் ஸ்நானஞ்செய்வித்தார்கள். பிறகு சந்தனம், கஸ்தூரி முதலிய வாசனைப் பதார்த்தங்களை அழகிய உடலில்தடவினார்கள். கடைசியாகச்செலிமாவின் பிரேதத்தைப் பூமிக்குள் வைக்கும்வேளையில் துக்கம் மேலிடப் பாதுஷா மிக்க உரக்க அழத்தொடங்கினான். துக்கமேலிடத் தொண்டை அடைக்க அடைக்கச் "செலிமா! போய்விட்டாயே இந்த அபாக்கியனை விடுத்து! இனி உன்னைச் சுவர்க்கத்திலென்று பார்ப்பேனோ? நானுனக்குச் செய்துள்ள அபராதத்திற்குப் பிராயச்சித்தமாக என்னைத் தூக்கிலிட்டபோதிலுந் தீராதே!" எனக் கதறியழுதான்.

பாஷாவின் நேத்திரங்களினின்றும் வடிந்த நீர்த்துளிகள் செலிமாவின் சமாதியில் விழுந்தன. பிரேதத்தை மூடியபின், எல்லோருந் துக்கத்தோடு திரும்பினார்கள்.

சுவர்ண மோத்தி மஹால் சூனியமாயிற்று. அங்கே இதுவரை தங்கியிருந்த ஜோதியும் சுவர்க்கத்தை யடைந்தனள்.

(தொடரும்.)

பதினாறுபேறும் பெருவாழ்வும்.

ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள்.

அறநெறிகளும் தவநெறிகளும் தழைத்தோங்கும் ஞான நாடாகிய நம் பரதகண்டத்திலே "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வின் வாழ்ந்திரு" என மக்களை வாழ்த்துதல் பண்டைக்காலந் தொடங்கி வழங்கப்பட்டு வரும் வழக்கமாயிருக்கின்றது. இச்சொற்றொடரின் உண்மைப் பொருளையுணர்ந்தவர் சிலரே.

சில நாட்களுக்கு முன் ஒரு நாள் ஒரு சிறு பையன் வயதில் முதிர்ந்த ஒருவருக்கு ஏதோ ஒரு சிறு பணி புரிந்ததன் காரணமாக அப்பெரியார் அப்பையனை "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வின் வாழ்ந்திருப்பாய்" என வாழ்த்தினர். ஆங்கதைக் கவனித்த யான், அப்பெரியாரை நோக்கி, "ஓ பெரியவரே! பதினாறுபேறு என்பதென்ன? பெருவாழ்வு என்பதென்ன?" என வினவினேன். அதற்கு அவர், பதினாறு பேறு என்பது பதினாறு புத்திரர்களைப் பெறுகவெனவும், பெருவாழ்க்கையென்பது பதினாறு புத்திரர்களையும் பெற்று வாழ்வுடனிருந்தால் அறுபதாம் வயதில் மாங்கல்யத்தைப் புதுக்கி யணிந்துகொள்ளுதலெனவும் விடையிறுத்தனர். இத்தகைய மூடத்தனமான எண்ணம் நம்மவர் பலருள்ளுமிருத்தலை யோர்ந்து

இதனை ஆராய்ந்து நமது நந்தாவிளக்கான "சிந்தாமணி"யில் வெளியிடின் நம் சகோதர சகோதரிகள் பலருக்கும் பயன்படுமென உத்தேசித்து இக்கட்டுரையை யெழுதலானேன்.

நம் நாட்டிலே ஒருவனுக்கு ஏழெட்டுப் பிள்ளைகளிருப்பினும், அவனைப்பார்த்துப் "பாவம் ஏழெட்டுப் பிள்ளைகுட்டிக்காரன்" எனப் பலருமிரங்குதல் மரபாயிருக்கின்றது. குறைந்த பக்ஷம் நாலைந்து பிள்ளைகளிருப்பினும் அவைகளுக்கு உணவு உடை முதலியன கொடுத்துப் போஷிப்பதற்கு ஒருவன் எவ்வளவு கஷ்டப்படுகின்றான். அம்மம்ம! அப்படியானால் பதினாறு பிள்ளைகளிருப்பின் அவன் கதி யென்னாகும்? "பட்டாலறிவன் சண்டாளன், மழை பெய்தாலறிவன் வேளாளன்" என்றாங்கு பதினாறு பிள்ளைகளையும் பெற்று வளர்த்தால் தெரியும் பதினாறு பேறுகளின் பயன். ஒருவனுக்கு அநேகம் பிள்ளைகளிருந்தால் அவன் அவைகளுக்காகச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து அதனால் என்னாளும் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பானேயன்றி ஒருபோதும் கடைத்தேரமாட்டான். இந்தச் சங்கடங்களுக்கிடையில் அவனுக்கு ஈச்வரஞானமுண்டாவதெங்ஙனம்? அவன் ஆன்ம லாபமான அறங்களைப் புரிவதெங்ஙனம்? எந்நேரமும் துக்க சாகரத்தில் அமிழ்ந்தியவண்ணமாகவேயிருப்பான். அநேகம் பிள்ளைகளைப் பெற்றமையாற் குசேல முனிவர் பட்ட சங்கடத்தைத் தமிழ் நாட்டாரனைவரும் அறிவர். ஆதலால் ஈண்டு குறிக்க வேண்டுவதில்லை. ஆகவே பதினாறு பேறு என்பது பதினாறு பிள்ளைகளைப் பெறுதலல்ல.

ஆங்கதனைக் காமியப் பேறு நிஷ்காமியப் பேறு என இரண்டாய் வகுக்கலாம். காமியப் பேறுவன :

கீர்த்தி, கல்வி, வீரம், வெற்றி, நன்மக்கள், துணிவு, தானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு, பெருமை, தருமம், குலம், நோயின்மை, வாழ்நாள் என்னும் பதினாறுமாம்.

நிஷ்காமியப் பேறுகளாவன:

வேதநிந்தனை சைவநிந்தனைகளைப் பொறுக்கமாட்டாத மனமுள்ளம், ஐம்புலன்களுக்குமேவல்செய்து அவற்றின் வழியொழுகாமை, அறம் புரிபவரோடு நட்புடைமை, ஈசனடியார் வேண்டியவற்றை மாறாதுகொடுத்தல், தவத்தினோர் வருத்தினாலும் அவரை வணங்குமியல்புடைமை, சிவனடியார் தீமை செய்தாலும் சிவச்செயலெனக் கோடல், மெய்யான உறுதியுடைமை, ஈசனடியாரிடத்தில் மனமும்வாக்குமொன்றுபடுதல், கனவிலும் சிவனடியார்க் கடிமையாகுமெண்ணமுடைமை, வேறொரு தெய்வத்தை வழிபடாநிலை, ஈசனுடைய புகழை நாடோறுமுரைத்தல், புறச்சமயந்தழுவாமை, பிறர்பொருள் விழையாமை, பரதாரகமனஞ் செய்யாமை, 'யான்' 'எனது' என்னும் அகங்கார மமகாரங்களை நீக்குதல் என்னும் பதினாறுமாம்.

இனிப் பெருவாழ்க்கையென்பது இப்பேறுகளைப் பெற்றுவாழ்ந்திடுதல்.

ஈண்டுக்கூறிய இருவகைப் பேறுகளிலும் நிஷ்காமியப்பேறே சிறந்தது. காமியப்பேறுகளால் யாம் பெரும்பயனடைதலருமை.

அத்தமும்வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப் புண்ணியபாவமுமே

எனப் பெரியாரும் பணித்திருக்கின்றனர். ஆகவே நமக்கு இம்மையிலும் நலனை விளைத்து மறுமைக்கும் மோக்ஷானந்தத்தைக் கொடுக்கக் கூடியது நிஷ்காமியப்பேறே ஆதலால் நாம் இவற்றையே விரும்பிப்பெற்று உய்வடைவோமாக.

சுபம்.

நூர்ஜஹான் அல்லது
பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(145-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாவது அத்தியாயம்.

அச்சமயம் அயாஸுக்குத் துணை யார்? ஆகாயத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்த நக்ஷத்திரங்களே சிறிது ஒளியைக் கொடுத்தன. கொஞ்சங்கொஞ்சமாய்க் கிழக்குதிசை வெளுக்க ஆரம்பித்தது. நக்ஷத்திரங்களின் ஒளியுங் குறைந்துகொண்டேவர, அருணோதயமாயிற்று. தினகரனதுபிரகாசத்தைக்கண்ட இரவு லஜ்ஜைகொண்டு இருக்குமிடந்தெரியாது மறைந்தது. பாவம் ஒழிந்தது, புண்ணியம் உதயமாயிற்று. இருள் ஒழிந்தது, ஒளி உதயமாயிற்று. தன் மார்க்கத்திலுள்ள சர்வத்திற்கும் பிரபையை யுண்டாக்கித் தினகர மகாராஜன் உதயாசலத்திற் கிளம்பினான். அவ்வேளைவரை நேத்திரமிருந்தும் குருடாயிருந்த சகலமும் திருஷ்டியைப் பெற்றது. அயாஸ் இரவு முழுவதும் கண்களைக் கொட்டாமல் விழித்துக்கொண்டே இருந்தனன். ஆனால் சிரமத்தால் இரவெல்லாம் நித்திராதேவியின் பாசத்திற்குக்கட்டுபட்டிருந்த அவனது அர்த்தாங்கி அமீனாவும், சூரியோதயமாகவே விழித்துக்கொண்டனள், அவளுடன் குழந்தையும் கண்களைத் திறந்து தன் தாயின் முகத்தை நோக்கிற்று. உடனே வேறொன்றையும் பற்றி விசாரப்படாமல், தமது பிரயாணத்தைக் குறித்து யோசிக்க ஆரம்பித்தார்கள். பிறகு அமீனா குழந்தையை யெடுத்துக்கொள்ள, அயாஸ் சாமான்களின் மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு, இருவரும் வழியை நோக்கி நடந்தார்கள். நேற்றுப் பிரசவித்த ஸ்திரீ குழந்தையைக் கரத்திலேந்திக் காலால் நடந்து செல்வதென்றால் அசாத்தியமான காரியமெனச் சொல்லுவது அனாவசியமே. ஆனால் விதிக்கு முன் என்ன முடியும்? பாவம், யாதுசெய்வாள். மதியே உருவாய்வந்த அமீனா அம்மணல் வனத்தில் தன் கணவனுடன் மெதுவாக நடந்து வந்ததால் சுவாசம் மேலுங்கீழுமிழுத்தது அந்தியகாலத்தின் அநுபவமோ வெனச் சந்தேகிக்க நேரிட்டது. மணலில் நடந்ததால் கால்கள் நோவெடுத்தன. முன்னாலிருந்த குதிரையும் இப்பொழுதில்லாதிருக்கவே, என் செய்வாள் பாவம்! அயாஸும் வேறொரு உபாயமுமில்லையெனக் கண்டனன். தலையில் சாமான்கள் நிறைந்த பெருத்த மூட்டையைச் சுமக்க நேரிட்டதால் மிக்க கஷ்டத்திற்குள்ளாயினன்.

இவ்விதமாக இவ்விருவரும் மிக்க தூரஞ் சென்றபின்னர், அந்நாள்வரை இவர்களிடம் நிஷ்டூரமாகவே யிருந்த அந்த ரணப்பிரதேசம் கொஞ்சந் தயைகாட்ட ஆரம்பித்தது. உற்று நேராக நோக்க ஒரு பிரம்மாண்டமான நதி இவர்களது நேத்திரங்களுக்குத் தென்பட்டது. அந்நதியின் நீர் நிர்மலமாயிருந்ததுமன்றி, அதன் கரைகளைச் சுற்றி விருக்ஷங்கள் வரிசை வரிசையாகத் தென்பட்டன. அம்மரங்களுக்கிடையில் ஆடுமாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அடிக்கடி கன்றுகள் தங்களது தாயைத் தேடிச் சென்று ஸ்தனபானஞ் செய்துகொண்டிருக்கக் கண்டனர். அவ்விருக்ஷங்களினின்றும் பற்பல வர்ணப்பக்ஷிகள் கிளம்பி ஆகாயத்தில் உயரப் பறந்துகொண்டிருந்தன. அப்பக்ஷிகளது மதுராலாபம் அப்பிரதேச முழுவதும் எதிரொலித்தது. இவ்விதமாக ஈச்வரனது லீலைகளைக்கண்ட இவ்விருவரும் ஆனந்தக்கடலிலாழ்ந்தார்கள். இவர்கள் சரீரத்திலும் ஒருவிதமான சக்தி உற்பவித்தது. இவர்களது கால்களும் முன்போலல்லாது மிக்க விரைவாகவே சென்றன. பயங்கரமான பாலைவனத்தில் இவ்விதமான அபூர்வக்காக்ஷியைக் கண்ணுற்றதால், இன்னுங் கொஞ்சநேரத்திற்குள் நாம் மிருத்யுலோகத்தின் சுகத்தை அனுபவிக்கப் போகின்றோமென இருவரும் ஆனந்தமுற்றனர். துக்கக்கடலிலாழ்ந்து கஷ்டப்படும்பொழுது, மத்தியில் சுகம் உதயமாவதைக்கண்ட இவ்விருவர்களது நேத்திரங்களும் ஆனந்தபாஷ்பத்தால் ததும்பின. அமீனா ஆகாயத்தை உற்று நோக்கியவண்ணம் மிக்க உரத்தகுரலில், "தயாபதியே! இவையெல்லாம் உனது கிருபையின் நிலனே. உனது மாயையை யார்தானறிய வல்லர்? உன்னை நாங்கள் வீணாய்த் தூஷித்தது அபராதமே" எனப் பகர்ந்தபின் தனது பதியை நோக்கி "பிராணநாதா! இவையெல்லாம் அவரது கிருபையின் பிரசாதமே! நிராதாரமான இப்பயங்கர மணல்வனத்தில் இக்குழந்தையை நிர்மாணிக்க, அவரைத்தவிர வேறு யாராற்சாத்தியமாகும்? வாருங்கள், பிராணநாதா! நாம் அந்தரத்திற் காணப்படும் விருக்ஷத்தின் சீதளமான நிழலுக்குச் சென்று, சிரமபரிகாரஞ் செய்துகொண்டு, அவரது குணாதிசயங்களைக் கொண்டாடுவோம்" என்றனள்.

தாம் சீக்கிரத்தில் அனுபவிக்கப்போகும் சுகத்தின் ஆசையால் உற்சாகமதிகரிக்க, இருவரும் விரைவாக நடந்தனர். மிக்கதூரஞ்சென்றபின் அயாஸ் தன் பத்தினியை நோக்கி, "பிரியே! அதோ பார் அக்காட்சியை! என்ன ரமணீயமா யிருக்கின்றது. அந்நதிக்கப்பாற் காணப்படும் நகரத்தினழகைப் பார்! முகத்தில் உற்சாகமும், ஆசையும், நேத்திரங்களில் ஆனந்தமும் பிரேமையும் வகித்த எண்ணிறந்த ஜனங்கள் தம் தம் காரியங்களை நாடிச் செல்லுகின்றனர். பரதேசத்தினின்றும் வந்துள்ள வழிப்போக்கர்களை ஆதரித்துப் போற்ற மிக்க உற்சாகத்தோடிருப்பதைப் பார்! நாம் சீக்கிரம் போய்ச்சேருவோம் வா!" என்றனன்.

"வாருங்கள், பிராணநாதா! வாருங்கள்! நாம் அப்பவித்திர நதிதீரத்திலுட்கார்ந்து, கொஞ்சநேரமாயினும் நமது துக்கத்தைப் போக்கடிக்கலாம்" எனப் பகர்ந்தபின் அமீனா தன் கணவனது கரத்தைப் பிடித்து, மிக்க விரைவாக நடக்க ஆரம்பித்தனள். வேகமாகச்சென்றதால் அவளது மார்பு படபடவென்று துடித்தது. க்ஷணநேரம் சிரமபரிகாரஞ் செய்துகொள்ளும் பொருட்டு மத்தியில் கொஞ்சந் தாமதிக்க இஷ்டப்பட்டாள். மிக்கக் கஷ்டத்திற்குள்ளானபோதிலும், தனது பதிக்கு அதைக் காட்டிக்கொள்ளாமல், அவனுடன் நடந்துகொண்டிருந்தனள். அச்சமயம் அவளது அங்கத்தில் தங்கியிருந்தசொற்பசக்தியும் அதிகரித்துக்கொண்டே வந்தது. மிக்க நேரம் நடந்தபின்னரும், அந்நதிதீரம் அதிக தூரத்திலேயே தோன்றக் கண்டு பீதியடைந்தனள். உடனே உடல் வியர்த்தது. மார்பு துடித்தது. நேத்திரங்கள் மங்கலடைந்தன. பேச நாவெழவில்லை. ஆயினும் மிக்க கஷ்டத்துடன், "நாதா! நாம் பாதிவழி வந்தும் அந்நதி தீரம் வந்தபாடில்லையே! இன்னுமெவ்வளவு தூரஞ் செல்லவேண்டும்?" என வினவினாள்.

அயாஸ் மிக்க உற்சாகத்துடன், "பிரியே! தைரியமது கைவிடேல். இதோ சீக்கிரத்தில் நாம் அவ்விடம் போய்ச் சேர்ந்து விடுவோம்" என்றனன். அயாஸின் வாயினின்றும் வெளிவந்த உற்சாக பூர்ண உத்தரத்தைக் கேட்ட மாத்திரத்தில் அமீனாவுக்குக் கொஞ்சந் தைரி

யமுண்டாயிற்றென்பது வாஸ்தவமே. ஆயினும் வெகு சீக்கிரத்தில், "நாம் இவ்வளவு தூரம் வந்ததும், நமது பிரயாணம் முடியவில்லை. நதி தீரமும் இன்னும் அதே தூரத்தில் காணப்படுகின்றது," எனப் பகர்ந்தனள். தனது பத்தினி பயத்தோடும் நிராசையோடும் சொன்ன சொற்கள் காதில் விழுந்தமாத்திரத்தில் அயாஸ் திடுக்கிட்டான். எதிரில் உற்று நோக்கினான். திடீரெனப் பின்புறம் பார்க்கவே, தனது பத்தினி அழகிய குழந்தையைக் கரத்திலேந்தி, மிகவும் மெதுவாக வந்துகொண்டிருக்கக் கண்டான். தனது நிராதாரஸ்திதியை யோசித்து அயாஸ் ஒரு முறை பெருமூச்செறிந்தான். அப்பெருமூச்சில் நிராசையே பூரணமாய் நிறைந்திருந்தது. உடனே அவனது உடலில் ஓடிக்கொண்டிருந்த ரத்தமும் மெதுவாகச் செல்ல ஆரம்பித்தது.

அமீனா தனது பதியின் முகத்தைக் கண்டு திடீரெனத் திடுக்கிட்டு, "பிராணநாதா! தற்சமயம் தங்கள் மனதில் என்ன விசாரம் உற்பவித்துள்ளது? நானே உமது அர்த்தாங்கி! பவித்திரப் பிரேமையால் உமக்குப் பந்தப்பட்டுள்ளேன். தாங்களே எனக்கு ஆதாரம்! தங்களது முகத்தைக் கண்டு அகத்திலுள்ளவற்றை அறிந்துகொண்டேன். சொல்லுங்கள்! நாதா! சொல்லுங்கள்! நாம் இக்கஷ்டத்தினின்றுந் தப்ப வழியுமுளதோ? பேசப் பீதியேன்? வாஸ்தவத்தைச் சொல்லுங்கள். நான் தமது பிரியதமை, தாசி, சிஷ்யை, தர்மபத்தினி, மற்றுமெல்லாம்! பீதி வேண்டாம். தைரியத்தை இழக்கவேண்டாம். அதோ பாருங்கள்! எதிரில் நீரால் நிரம்பிக் கரைகள் புரண்டோடும் நதி காணப்படுகின்றது. ஆகா! அந்நதி தீரங்களில் காணப்படும்விருக்ஷங்கள் எவ்வளவு அழகாயும் மனோரம்மியமாயும் இருக்கின்றன! இவ்வளவு சீக்கிரம் அதைரியமடையக் காரணம் யாது? தைரியமுடன் காலை விரைவாக வையுங்கள். சீக்கிரம் நாம் அம்மனோகர நதி தீரத்தை யடைவோம். அது வாஸ்தவமாகவே நம்மை அழைப்பதாகத் தோன்றவில்லையா" எனப் பகர்ந்தனள்.

இவளது வார்த்தைகளைக் கேட்ட அயாஸின் முகம் கொஞ்சமேனும் மாறுதலடையவில்லை. நிராசையும் அவனை விட்டு விலகாதிருக்கக் கண்ட அமீனா உரத்த குரலில், "நாம் இவ்வளவு தூரம் நடந்துவந்த பின்னரும் நதி தீரம் மிக்க தூரத்திலேயே யிருக்கின்றதே! நாமிதுவரை நடந்து வந்ததும் வாஸ்தவந்தானோ? பிரியகரா! இது ஈச்வரனது மாயையாகவும் லீலையாகவும் இருக்குமோ?" என்றனள். 'மாயை' என்னும் சப்தம் அமீனாவின் வாயினின்றும் வெளிவந்தமாத்திரத்தில், 'மாயை' என்று மறுபடியும் ஒரு தொனி அவ்வனமுழுதும் எதிரொலித்தது. அத்தொனியைக் கேட்டமாத்திரத்தில் அயாஸ் திடுக்கிட்டு, "ஆமாம், இது மாயையே!" என்றனன். மறுபடியும், 'இது மாயையே!' என்றஅத்தொனி எதிரொலிக்க, மனோகரமாக நதியின் தீரங்களிற் காணப்பட்ட விருக்ஷங்கள், நதிக்கப்பாற் தென்பட்ட நகரம் எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் இருந்த இடந்தெரியாது மறைந்தன. க்ஷணநேரம் இவர்களடைந்த உற்சாகமும், ஆனந்தமும், அதே க்ஷணநேரத்தில் இவர்களை விட்டு விலகின. அயாஸ் இருந்த இடத்திலேயே ஒரு கற்பதுமையைப்போல் அசைவற்று நின்றனன். விசாரத்தால் அவனது தலை சுழன்றது. அமீனாவின் நேத்திரங்கள் மங்கலடையவே, கரத்திற் குழந்தையைத் தாங்கிய வண்ணம் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தனள்.

(தொடரும்.)

பகவத் கீதையிலுள்ள சில போத வசனங்கள்.

ஸ்ரீமதி மங்களாபாயி.

(167-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிதாவின் கட்டளையை மீறாத புத்திரர்கள் தான் தன்னியராவார்கள்.

* *

சிற்றின்பங்களின்மீது பற்று வைப்பது ஆத்மாவின் பந்தனத்திற்குக் காரணமாகிறது. ஆதலால் சற்புருஷர்களுடைய சகவாசம் செய்யவேண்டும். எவன் சற்புருஷர்களுடன்சகவாசம் செய்கின்றனனோ அவனுக்கு மோக்ஷத்துவாரம் திறந்தேயிருக்கிறது என்று நினைக்க வேண்டும். சற்புருஷர்கள் மிக்க தயாளகுணமுடையவர்களாகவும், பொறுமை யுள்ளவர்களாகவுமிருக்கின்றனர். அவர்களுடைய சுபாவம் சாந்தமாயிருக்கின்றது. அவர்கள் எல்லோருடனும் மித்திரபாவத்துடன் நடந்துகொள்ளுகிறார்கள். சாஸ்திரத்தின்படி நடந்துகொள்ள மிகத் திறமைவாய்ந்தவர்களா யிருக்கின்றனர். சுசீலம்தான் அவர்களுக்கு பூஷணம். அவர்கள் மிகப்பணிவுடன் கடவுளுடைய பக்தி பண்ணிச் சகல கர்மங்களையும் அவருக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். ஈசுவரனுடைய கதையைச்சிரவணம் செய்வதன்கண் அவர்களுடைய உள்ளம் சதாகாலமும் நாடுவதனால் அவர்களுக்கு யாதொருவிதமான தாபமும் ஏற்படுவதில்லை. இத்தகைய சாது ஜனங்களுடைய சகவாசத்தினால் மனிதர்களுடைய சகல தோஷமும் இல்லாமற்போகின்றது. என்றும் நீ சற்சமாகமத்தை விரும்பு. அந்த சாதுஜனங்களுடையசமாகமத்தினால்தான் மனிதனுக்கு ஈசுவரனுடைய பராக்கிரமத்தின் யதார்த்தமான ஞானம் உண்டாகிறது. அவனுடைய கதை சிரவணம் செய்யக் கிடைக்கின்றது. அதனால் அவனுடைய அஞ்ஞானம் நஷ்டமடைகின்றது. அஞ்ஞானத்தின் நிவர்த்திதான் மோக்ஷமாகும். ஈசுவரனை அடையும் மார்க்கமும் இதுதான்.

* *

இவ்வுலகத்தில் மனிதன் பூரணமனதுடன் ஈசுவரனின் பக்திசெய்வதுதான் அவனுடைய கல்யாணத்தின் உத்தமமான மார்க்கமாகும்.

* *

மனமானது மிகவும் சஞ்சலமுள்ளது. அது சிற்றின்பங்களின் சகவாசத்தினால் மலினமடைந்திருந்து, புலன்களுடைய சிற்றின்பரூபமான குறுக்கு வழியாய் ஓடுகிறது; என்று சாதக தசையிலிருக்கும் புருஷன் 'இவ்வழியாலும்' (பக்திமார்க்கம்) விரதம், தானம் முதலிய இதர உபாயங்களாலும், குறுக்கு வழியில் செல்லும் மனதை புத்தியின் உதவியால் ஈசுவாஸ்வரூபத்தில் ஸ்திரப்படுத்தவேண்டும்.

* *

"என்னுடைய லீலைகளைச் சிரவணம் செய்து எவனுடைய உள்ளம் பக்தி என்னும் ரஸத்தினால் பொங்கி, கங்கையின் பிரவாகம் சமுத்திரத்தை நாடிச் செல்லுவதுபோல் எவனுடைய உள்ளத்தின் பிரவாகம் என்னை நாடுகிறதோ, அவனுடைய அந்த நிஷ்காமமான உள்ளம் அவ்விடத்திலேயே ரமித்துவிடுகிறது. இதற்குத்தான் நிர்குண பக்தி என்கிறார்கள்; இத்தகைய நிஷ்காம பக்தர்களுக்கு நான் சதுர்வித (நான்கு வித) முக்தியைக் கொடுத்தபோதிலுங்கூட அவர்களுக்கு என்னுடைய சேவையைத் தவிர எதுவும் ருசிப்பதில்லை. பிறகு இவ்வுலகத்திலிருக்கும் வஸ்துக்களின்பேரில் இச்சை எங்கிருந்து வரும்? அதனாற்றான் பக்தி மார்க்கத்திற்கு ஒருபோதும் அழியாத மார்க்கம் என்று

சொல்லுகிறார்கள். இதன் மூலமாய் மனிதன் இந்தத் திரிகுணாத்மகமான ஸம்ஸாரமென்னும் கடலைக் கடந்து என் ஸ்வரூபத்தை வந்தடைகிறான்."

* * *

" சகல ஜீவராசிகளின் உள்ளத்திலும் நான் வசிக்கின்றேன். இதை உணராமல் எவன் கேவலம் தேகத்தின் பேரிலேயே ஆதம திருஷ்டிவைத்து என் மூர்த்தியின் பூஜை செய்கிறானோ அவன் வெறும் வேஷக்காரனாவான். நான் ஸர்வாந்தர்யாமி யானவன். என்னை அறிந்துகொள்ளாமல் எவன் மூர்த்திபூஜை செய்கிறானோ, அது வெறும் பஸ்மத்தில் ஓமம் செய்வதற்குச் சமானமாகும் என்றால் பஸ்மத்தில் ஓமம் (ஹோமம்) செய்வது எப்படிப் பயனற்றதோ அதைப்போல் சகல ஜீவராசிகளின் பேரில் பேதபுத்தியை வைத்து என்மூர்த்தியின் பூஜையைச் செய்வது பயனற்றதாகும். தேகாதிகளின்பேரில் அபிமானத்தை வைப்பவன் சகலப் பிராணிகளின்பேரிலும் வைரம் (வைர பாவம்—பகைமை) பாராட்ட, அவைகளின் உள்ளத்தில் வசிக்கப்பட்டவனாகிய என்பேரில் துவேஷம் பாராட்டும் மனிதனுடைய மனம் ஒருபோதும் சாந்தமா யிருக்கமாட்டாது. எவன் பிராணிமாத்திரத்தின்பேரில் பகைமை பாராட்டுகிறானோ அவன் ஸர்வோபசாரத்துடன் என்னைப்பூஜித்தபோதிலும் நான் எம்மாத்திரமும் சந்தோஷமடையேன்."

* *

தன்னைவிடச் சிரேஷ்டமாயிருப்பவரை பகுமானம் பண்ணவேண்டும். தனக்குச் சமானமாயிருப்பவர்களுடன் சிநேகமாயிருக்க வேண்டும். ஸர்வபூதங்களிடத்தும் (சகலப் பிராணிகளிடத்தும்) சமதிருஷ்டி வைக்கவேண்டும்.

* *

" சகல கர்மத்தையும் எனக்கு அர்ப்பித்து, 'நான்' என்கிற அபிமானத்தைவிட்டு, சகல ஜீவராசிகளின்பேரிலும் சமதிருஷ்டி வைக்கப்பட்ட மனிதனைத்தவிர வேறு யாரும் எனக்கு உத்தமமாகத் தோன்றுவதில்லை."

* *

பிராணிகளுக்குத் துன்பத்தைக் கொடுக்கப்பட்டவனும், சாதுஸந்தர்களுடைய சாபத்தினால் தக்தமானவன், நாகத்திற்குப் போனாலுங்கூட அங்கும் அவன்பேரில் இரக்கம் பாராட்டுவதில்லை.

* *

பதிபத்தினியின் அன்பு நன்றாயிருந்தால், அவர்களுக்கு ஆகும் பிரஜைகளும் நன்றாகவிருக்கும்.

* *

எந்தப் பிராணியின் கர்மம் தர்மத்திற்கு உதவுவதில்லையோ, எது வைராக்கியப் பிராப்தமாவதற்குச் சாதனமாவதில்லையோ, அல்லது பகவத்சேவைக்கு உபயோகப்படுவதில்லையோ, அந்தப்பிராணி உயிர் தரித்திருந்தாலென்ன செத்தாலென்ன? இரண்டும் ஒன்றுதான்.

* *

தகப்பன் கட்டளையை மீறாத புத்திரர்கள் தான் தன்னியராவார்கள்.

* *

உலகத்தில் நான்குவிதஜனங்கள் இருக்கின்றனர். எவர் பிறருடைய அதிசொர்பமான குணத்தையுங்கூடப் பெரிதாக பாராட்டுகின்றனரோ அவர்கள் சிரேஷ்டராவார்கள். எவர் பிறருடைய குணத்தைமாத்திரம் எடுத்துக்கொண்டு, தோஷத்தைப்பற்றிமௌனமாயிருப்பார்களோ அவர்கள் சற்புருஷர்கள் ஆவார்கள் ; எவர் ஸாராஸாரவிசாரம் செய்து, குணத்திற்கு குணம், தோஷத்திற்குதோஷம் என்கின்றனரோ அவர் சாமான்னிய புருஷர்களாவார்கள்; எவர் குணத்தையும் தோஷதிருஷ்டியுடன் பார்க்கின்றனரோ அவர்கள் நீசர்களும், அதமர்களும், துஷ்ட புத்தியுடையவர்களுமாவார்கள்.

* *

குபுத்திரனுவதைவிட மக்கட் பேறில்லாமலிருப்பது மிகவும் நல்லது. காரணம் குபுத்திரர்களால் உண்டாகும் துன்பங்களாவது அவர்கள் அநுபவிக்காமலிருக்கலாம்.

* *

ஆத்மா எப்படி தேகத்திற்குச் சம்பந்தமில்லாமலிருக்கிறது என்பதைப்பார். ஆத்மா விகாரமற்றதாயும் ஒன்றேயாகவு மிருக்கின்றது. தேகம் அநேகமாயிருந்து அதற்குப் பாலியம், இளமை, முதுமை முதலிய விகாரங்கள் உண்டாகின்றன. ஆத்மா சைதன்னிய ரூபமாயிருக்கிறது; தேகம் ஜடமாயிருக்கின்றது. ஆத்மா நின்மலமாகவும், சரீரம் மலினமாகவுமிருக்கின்றன. ஆத்மா குணமில்லாததாயிருந்து, குணங்களுக்கு ஆதாரமாயிருக்கின்றது ; தேகம் குணயுக்தமாயிருந்து, குணங்கள் அதற்கு ஆதாரமாயிருக்கின்றன. தேகம் மட்டுக்கடங்கியதாயிருக்கின்றது. ஆத்மா எங்கும் நிறைந்திருக்கின்றது. ஆத்மா எதாலும் மூடப்படாததாயிருக்கிறது. தேகமானது கிருகம், வஸ்திரம் இவைகளால் மூடப்படுகிறது. ஆத்மா கண்களுக்குப் புலப்படாமலிருந்து தேகத்தைப் பார்க்கக்கூடிய சக்தியையுடையது. தேகம் திருச்யமாயிருந்து அதற்கு ஆத்மா புலப்படுவதில்லை. இவ்வாறாக எவன் ஆத்மாவைப்பற்றி விசாரித்திருக்கின்றனனோ, அவன் ஸம்ஸாரத்திலுள்ள கர்மங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும், அதனால் உற்பவிக்கும் சுக துக்கத்தினால் அவனுக்கு யாதொரு துன்பமும் ஏற்படாது. அவன் இந்த சரீரம் அழிவுடையதென்று அதற்கு உண்டாகும் துன்பத்தைப்பற்றி நினைப்பதுமில்லை.

* *

" எக்ஞம், தபஸ் முதலியவைகளைச் செய்து என்னை வசப்படுத்திக்கொள்ளப் பார்ப்பவர்களைவிட உள்ளம் சமமாயுள்ள சாதுக்கள் எனக்கு அதிகமாய்ப் பிடிக்கிறார்கள்."

* *

பிருது சொன்னான்:—பிரஜைகளுக்கு அறிவு புகட்டவேண்டும்; அவர்களை அவரவர்களுடைய தர்மத்தின்படி நடக்கும்படி செய்ய வேண்டும்; அவர்களுக்கு நிர்வாகத்திற்கு வேண்டிய சாதனங்களைக் கொடுத்து அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டு என்னை அரசனாக நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த ராஜ தர்மத்தின்படி நான் நடந்துகொண்டாற்றான் எனக்கு உத்தமமான லோகம் கிடைக்கும். என்றும் எனக்கு விண்ணுலகத்தில் கல்யாணமுண்டாக வேண்டுமென்று உங்களுக்கு இச்சையிருக்குமானால் நீங்கள் பகவானை நினைத்து ஸ்வதர்மத்தை நல்லபடி ஆசரித்து வாருங்கள் ; என்றும் என்பேரில் பெரும் அநுக்கிரகம் செய்தீர்களென்று நான் நினைப்பேன். ஓ தேவர்களே, ரிஷிகளே, பிதுர்க்களே, இதற்கு நீங்கள் அநுமோதனம் கொடுங்கள். ஏனென்றால் தர்மாசரணம்செய்பவன், செய்யச் சொல்பவன், செய்ய அநுமோதனம் கொடுப்பவன் இம்மூவருக்கும் ஓரேவித பலன் கிடைக்கின்றது.

* *

எந்த வீட்டு எஜமானன் தன் சகல பரிவாரத்துடன் சாதுக்களுடைய சேவையை முழு மனதுடன் செய்கின்றனனோ, அவன் கிருகஸ்தாச்சிரமியாயிருந்தபோதிலும் தன்னியனாவான். அவனை சாதுஎன்றுதான் சொல்லவேண்டும். மேலும் சகல சம்பத்தும் நிறைந்திருந்தும் எதில் கடவுளுடைய பக்தர்களின் சரண தீர்த்தம் விழுவதில்லையோ, அவ்வீடு சர்ப்பங்களால் சூழப்பட்ட சந்தன விருக்ஷத்தைப்போல் உபயோகமற்றதாகும்.

* *

பொருள் தேடுதல், புலன்களை திருப்தி செய்தல் இவ்விரண்டின் படாடோபத்திலேயே மூழ்கிக் கிடக்கும் ஜனங்களுடன் சகவாசம் செய்யலாகாது. அந்த விஷயங்களை அங்கீகரிக்கவும் கூடாது.

* *

ஸம்ஸாரமானது ஒரு சமுத்திரம். காமம், குரோதம், லோகம், மதம், பொருமை, அகங்காரம் இவைகள் இந்த சமுத்திரத்தில் வசிக்கும் பயங்கரமான முதலைகளாகும்.

* *

இந்த பவ சமுத்திரத்தைக் கடந்து போவதானுல் ஈசுவரனுடைய சரண கமலம் என்னும் படகின் ஆதாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். அதன் ஆதாரமின்றி யோகம் முதலிய கிலேசத்தைக் கொடுக்கும் சாதனங்களின் உதவியால் இதைக் கடந்து போக இச்சிக்கிறவர்களுக்கு அபரிமித கஷ்டமுண்டாகிறது.

* *

இந்த கிருகஸ்தாச்சிரமத்தின் பெருமை எவ்வளவென்று சொல்லலாம்? இதில் தேவர், பிதுர்க்கள், ரிஷிகள், மானிடர்கள் அன்றி இதரப் பிராணிகள் இவைகளுக்கெல்லாம் சுகத்தைக் கொடுக்கப்படுகிறது என்பது உண்மைதான். இவைகளன்றித் தானும்கூட சாசுவதமான சுகத்தை அடைய முடிகிறதென்று மகான்களாகிய வேதமோதியவர்கள் சொல்லுகின்றனர்,

* *

பற்று இல்லாமற்போவது, பற்றுண்டாகும் விஷயங்களினின்றும் விலகிஇருப்பதனுல் சாதிக்கிறது என்று நினைக்காதே. காரணம், அஜிதேந்திரியர்கள் (ஐம்புலன்களை அடக்காதவர்கள்) காட்டில் போய் வசித்தபோதிலும் அவர்களுடைய காமக்குரோதாதி ஷட்விகாரங்கள் ஜாக்கிரமாயிருப்பதனுல் அங்கும் அவர்களுக்கு விஷயாதிகளின் இச்சையுண்டாகாமலிருப்பதில்லை; ஆனுல் ஜிதேந்திரியனுன மனிதன் கிருகஸ்தாச்சிரமத்திலிருந்தபோதிலும் அவனுக்குக் காமக்குரோதங்களால் உபத்திரவம் உண்டாவதில்லை. இதற்காக, அரசன் எப்படிக் கோட்டையின் உதவியால் பிரபலமான சத்துருக்களை ஜயித்து, சத்துருக்கள் நாசமான பிறகு குசாலாக எங்குவேண்டுமானுலும் போவதுபோல, புத்திமானுனவன் ஷட்ரிபுக்களை ஜயிக்கும்பொருட்டு முதல் கிருகஸ்தாச்சிரமத்தை ஸ்வீகரித்து மெல்ல மெல்லக் காமக் குரோதாதிகளை ஜயிக்க முயலவேண்டும். அவைகளை ஜயித்த பிறகு அவன் வேண்டுமானுல் கிருகஸ்தாச்சிரமத்திலிருக்கலாம். இல்லாவிட்டால் இதர ஆச்சிரமத்தை எடுத்துக்கொள்ளலாம்.

* *

மனன மாலா.

N. V. R.

எவ்வளவு கம்பீரமும், பெருந்தன்மையும் மரியாதையு முடையவனுய்க் காணப்பட்டாலும் ஒருவன் அவன் காதற் கிழத்தியாகிய ஒரு பெண்பாலிடத்தில் — அவள் விஷயத்தில்— சர்வ சாமானியமான மனிதனுகவே காணப்படுகிறுன். வெளிக்குமட்டும் படாடோபம், மதிப்பு, ஆடம்பரம். இவையாவும் வெளிவேஷமே. உள்ளுக்குள் மனைவிக்கு அடிமையாயிருப்பதை யாரறிவர் ?

* * *

ஒருவருக்கொருவர் சிநேகம் முற்றும்வரையில் 'தாங்கள்', 'நீங்கள்' என்னும் மரியாதை வார்த்தைகளை வழங்குகிறுர்கள். நேசம் முதிர்ந்து, உள்ளன்பு உறுதியாக நெருங்கி ஏற்பட்டுவிட்டால், பழய மரியாதை வார்த்தைகள் எல்லாம் ஓடி ஒளிந்துகொள்ளுகின்றன. பரஸ்பரம் 'நீ', 'நான்' என்று பேசத்தலைப்பட்டுவிடுகிறுர்கள். அப்படிப் பேசுவதே அவர்களுக்குச் சந்தோஷகரமா யிருக்கிறது. இது நட்பின் இரகசியம்.

* * *

நாம் பல புத்தகங்களை அடுக்கு அடுக்காய் வாசித்துத் தள்ளிக்கொண்டே செல்லுகிறோம். முன்னுல் படித்துக்கொண்டு செல்லச் செல்லப் பின்னுல் விஷயங்கள் மறந்துகொண்டே வருகின்றன. இவ்விதம் எத்தனையோ புத்தகங்களைப் படித்திருப்போம். இன்று அப்புத்தங்களிலுள்ள விஷயங்கள்யாவும் நமது ஞாபகத்திலிருக்கின்றனவா ? இல்லை. ஆயினும் அப்புத்தகங்களைப் படித்தவை என்று அலக்ஷியம் செய்கின்றோம். அவ்விதமின்றி, மீண்டும் அவற்றை ஒரு முறை வாசிக்கப் புகுந்தால், முன்பு நாம் கவனிக்காத—கண்டறியாத—புதிய புதிய விஷயங்கள் தோன்றி நம்மை ஆச்சரியப்படச் செய்யும். இது படிப்பின் பரம இரகசியம்.

* * *

ஒருவர் தமக்கு வந்த கடிதத்திற்குப் பல தினங்கள் தாமதித்துப் பதிலெழுதத் தொடங்குகிறுர். அவ்விதம் தாம் பதிலெழுதிய பின்னர், மறுநாளே குறிப்பிட்டவரிடமிருந்து பதில் வாராதோ என்று எதிர் பார்க்கிறுர். பதில் வாராமைக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாக வெண்ணிக் கழிக்கிறுர். அவ்விதம் நாலைந்து தினங்கள் கழிந்தவுடன், உடனே தமக்குப் பதிலெழுதாமைக்கு எதிரியைச் 'சோம்பேறி', 'கவனமில்லாதவர்' என்றிகழத் தலைப்படுகிறுர். இச்சமயத்தில் முன்னர் தாம் கடிதமெழுதத் தாமதம் செய்த விஷயம் ஞாபகத்திற்கு வருவதில்லை. இப்படிப்பட்டது பலரது செய்கை.

* * *

ஒருவர்முன்னர் நேரில் நாம் எவ்விதம் பேசினபோதிலும் அதை மறைத்து மாற்றிக் கூறிவிடலாம். கடிதத்தில் எழுதி யனுப்பிவிட்டாலோ மீண்டும் அக்கடிதத்திலுள்ள ஒரு எழுத்தையேனும் மாற்றமுடியாது. ஆதலின் கடிதமெழுதுமுன்னர் எழுதவேண்டியவற்றை எண்ணிப்பார்த்து ஜாக்கிரதையாய் எழுத வேண்டும். இன்றேல், நம்மையறியாமல் கடுமொழிகளும், வரம்பு கடந்த வாக்கியங்களும் கோணல்களாய்க் கடிதத்தில் பதிந்துவிடும். கடிதமெழுதி முடித்து ஒருமுறை அதைப் படித்துப் பார்க்கையில் நம்மையறியாது நம் எண்ணத்திற்குக் கோணலான மொழிகள் பதிந்துள்ளதைக் கண்டு நாம் திடுக்கிட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு.

* * *

கற்புடைமை என்பதைப் பற்றிப் பேசுகையில் பெண்கள் அப்படி யிருக்கவேண்டும், இப்படி இருக்கவேண்டும் என்று ஆடவன் சாமாரியாகப் பேசத்தலைப்பட்டு விடுகிறுன். அவனே, ஆடவனும் அப்படியே மனைவியிடத்துக் கற்புடையவனுய் நடந்துகொள்ளவேண்டுமென்ற விஷயத்தைப் பற்றிப் பேசப் பின் வாங்குகிறுன். தர்ம நூல்கள் பலவும் பெண்களின் கற்பைப் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றனவே யன்றி, ஆடவரின் கற்பைப் பற்றிப் பேச அஞ்சுகின்றன. அறநூல்கள் பலவும் ஆடவரியற்றியவையாம். இஃது ஆடவரிடத்தமைந்துள்ள சுயநலமென்பதற்கு ஐயம் வேறுண்டோ ?

* * *

ஆடவன் உலக விவகாரத்தை ஒரு சிறிதும் அறியாமல் விளையாட்டுத் தனமாகத் திரிந்து கொண்டிருக்கக்கூடிய அதே வயதில், ஒரு பெண்பிள்ளை உலக இரகசியங்களனைத்தையுமறிந்து, இரண்டொரு மக்களையும் பெற்று, ஒரு குடும்பத்திற்குத் தலைமை வகித்து, அதை நடத்தத் தொடங்கி விடுகிறுள். இது பெண்களிடத்துள்ள அற்புத சக்தியாம்.

* * *

நமக்குக் கடன் கொடுத்த கடன்காரனை சிநேகம் செய்துகொள்ளவேண்டும். ஆயினும், நண்பனிடத்திற் கடன் வாங்கி, அவனைக்

கடன்காரனுக்குக் கொள்ளக்கூடாது. பணம் மிகக்கொடியது. எவ்வளவு முதிர்ந்த நட்பையும் ஒரு சமயம் முறித்துவிட வல்லது.

* * *

வேண்டும் வேண்டும் என்கிற வரையில் துக்கமும் கவலையும். வேண்டாமென்றாலோ சந்தோஷம்—திருப்தி. ஒன்றை வேண்டும் என்று விரும்பும் வரையில் அதைத் தேடவும், அதைக் காப்பாற்றவும் பலவிதக் கவலை ஏற்படுகிறது. மேன்மேலும் வேண்டும் என்ற விருப்பமின்றேல் யாதொரு கவலையுமில்லை; சமாதானமும், சந்தோஷமும் நிலை கொள்ளுகிறது. இது சந்தோஷமாயிருக்கச் சாதகமான வழியாம்.

தன் கணவன் அதிக அழகுள்ளவனென்று பிறர் புகழக் கேட்பதில் பெண்களுக்கு அதிக விருப்பமாம். குமாரன் புத்திசாலி என்று பிறர் சொல்லக் கேட்பதில் தந்தைக்குச் சந்தோஷமதிகம். மக்கள் சுகமாக வாழ்வதைக் காணத் தாயாருக்கு ஆர்வமதிகம். சீடன் பண்டிதனெனப் பெயரெடுப்பது குருவுக்கு ஆனந்தகரமாம். குடிகள் செல்வவான்களாய் வாழ்வது அரசர்க்கு மகிழ்ச்சி பயப்பதாம். மக்கள் சன்மார்க்க வழியில் நடந்து வருவது கடவுளுக்கு விருப்பமாகும்.

* *

பர்வத குமாரி.

இரண்டாம் பாகம்.

ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.

(155-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காம் அத்தியாயம்.

திவான்.

இராஜகுமாரனுடைய வாத்தியார் தம் சுயகாரிய சித்தியின் பொருட்டுக் கையாண்ட உபாயம் பலித்துவிட்டது. அவருடைய போதனையால் இராஜகுமாரன் எவ்விதமான நல்லுபதேசத்தையும் பெறவில்லையென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்; ஆனால் கெட்ட பழக்கங்கள் எவை எவையுண்டோ அவற்றை அவன் நிச்சயமாய்க் கற்றுக்கொண்டான். இராஜகுமாரன் யுக்த வயதை அடைந்து தன் ஜமீனுரிமையை ஏற்றுக்கொண்ட காலத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே இருள் சூழ்ந்திருப்பதாக அவனுக்குத் தோற்றியது. வாத்தியார் விரும்பி முயன்றிருந்தால், இராஜகுமாரனை அவனது காரிய நிர்வாகத்தில் அதி சமர்த்தனாகச் செய்திருக்கலாம்; ஆனால் அவர் வேண்டுமென்றே அவ்வாறு செய்யாமலிருந்துவிட்டார். காரிய நிர்வாகத்தில் புகுந்திருப்பவரின் வாழ்க்கை மிகக் கவலை நிறைந்ததாயும் துக்கமயமாயும் போய்விடுகிறதென்ற ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் ஏற்கெனவே மேலாடி நின்றது. இப்பொழுது வாத்தியாரின் போதனை விசேஷத்தால் செல்வம் படைத்தவர்களின் வாழ்க்கை சுகபோகத்தின் நிமித்தமே ஏற்பட்டதென்றும், ஆகையால் பிரபஞ்ச சுகபோகங்களை அநுபவியாமல் லௌகிக விவகாரங்களில் முழுகியிருப்பது அநுசிதமென்றும் அவன் நம்பலானான். இராஜகுமாரன் இப்படிப்பட்ட எண்ணங்களில் வயப்பட்டுத் தன் வாத்தியாருக்கே ஜமீன்தாரியின் சகல விவகாரங்களையும் ஒப்படைத்துவிட்டு, அவரையே தனக்குத் திவான்ஜியாயிருக்கும்படி நியமித்துக் கொண்டான்.

திவான் இப்பொழுது முழு ஜமீன்தாரிக்கும் ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் நடாத்தும் முழுமுதல் இறைவனாய் விட்டபடியால் அவர் சிறுகச் சிறுக இராஜகுமாரனையும் தம் வசப்படுத்திக்கொண்டு தம் சொற்படி ஆடுமாறு செய்துவிட்டார். இராஜகுமாரன் தன் இஷ்டமித்திரர்களுடன் கூடி இரவும் பகலும் வேடிக்கை விநோதங்களில் முழுகியிருந்தான்.—சுயமாய் ஒரு தடவையாகிலும் எந்தக் காரியத்தையும் கவனிப்பதில்லை. ஆனால் இப்படி அநவரதமும் வேடிக்கை விநோதங்களில் முழுகியிருந்தும், அவனுக்கு முகமலர்ச்சி யென்பது லவலேசமும் இல்லாதிருந்தது. ஜனங்களுக்கு அவன் எப்போதும் சிந்தையில் ஆழ்ந்தவனாகவும் சோர்வுற்றவனாகவுமே காணப்பட்டான். திவான்ஜி இராஜகுமாரனுடைய இஷ்டமித்திரர்களுக்கு இந்த மனச்சோர்வின் காரணத்தைச் சாமர்த்தியமாய்த் தெரிவித்துத் தம் இரகசியமாகிய ஒரு உத்தேசத்தைச் சாதித்துக் கொள்ளுவதில் கருத்தைச் செலுத்தினார்.

திவான்ஜி அடிக்கடி இராஜகுமாரனுடைய அறைக்கு வந்து பற்பல விஷயங்களைப் பற்றி அவனுடன் ஆலோசிப்பதுண்டு. இப்பொழுது சில நாளாக இடைக்கிடையே அவர் பால்ய விவாக விஷயமாய் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியிருந்தார். இவ்வாராய்ச்சி வாயிலாக அவர் மாதர்களின் சுபாவம் மகா மர்மமானதென்றும், அதை அறிந்துகொள்வது மிகவும் கஷ்டமென்றும் இராஜகுமாரன் மனதில் பசுமரத்தாணிபோல் பதியச்செய்தார். நம் ஆரிய சாஸ்திரங்களை எழுதியவர்கள் மாதர்களின் இந்தக் குடிலத்தன்மையை நன்றாய் உணர்ந்தே சமூக பரிசுத்தத்தைப் பாதுகாக்கும்பொருட்டு பால்ய விவாகத்தை ஏற்படுத்தினரென்றும், ஆகவே ஒருகாலும் மறந்தும் அவ்வேற்பாட்டை மீறி நடத்தலாகாதென்றும், அப்படி மீறுகிறவர்கள் வாழ்நாள் முழுதும் துக்கம் அநுபவித்து மறுமையிலும் நிரந்தர நரகவாசம் செய்யவேண்டிய துர்க்கதிக்குள்ளாவார்களென்றும் அவர் எடுத்துக்காட்டினார். ஒரு தடவை அவர் பிரதிபையின் விஷயத்தைக் குறிப்பிட்டு,—"இதுவரையிலும் பிரதிபையின் ரூபத்தைப்பற்றியும் குணங்களைப் பற்றியும் நமக்குத் தெரிந்தமட்டில், அவள் அசாதாரணமானவளென்றும் சாமானிய நியமங்களுக்குப் புறம்பானவளென்றும் தோன்றுகிறது. ஆனால் மாதர்களின் சுபாவம் அறிவதற்கரிதானபடியால், இளம்பிராயத்தில் அவளுடைய மனோபாவங்களை எப்படி அநாயசமாய் உமக்கு அறியமுடிந்ததோ அப்படி இப்பொழுது அறியமுடியாதென்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும். அவளுடைய மனம் இந்தசமயம் எந்த ராஜ்யத்தில் சஞ்சரிக்கிறதோ அதைச் சர்வாந்தர்யாமியாகிய பகவானைத் தவிர வேறொருவராலும் அறியமுடியாது," என்றார். மாதர் சுபாவத்தின் இந்த மகா சூக்ஷ்ம தத்துவத்தை திவான்ஜி சொல்லக்கேட்டு இராஜகுமாரன் சற்றுத் திடுக்கிட்டான், அவன் பிரதிபையின் இளம்பிராயத்து நடத்தையையும் இப்போதைய நடத்தையையும் ஒப்பிட்டுப் பார்த்து, திவான்ஜி சொல்லியது முற்றிலும் பொய்யல்லவென்று கண்டான். அதிலிருந்து அவன் மனதில் ஒரு சிறிது சம்சயம் ஏற்பட்டபோதிலும், பிரதிபையினிடம் கொண்டிருந்த மோகம் அவன் உள்ளத்தை அவ்வளவு கவர்ந்திருந்தபடியால், திவான்ஜியால் மாதர் சுபாவத்தை

ப்பற்றிப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அருமையான தத்துவத்திற்கு அவன் மனதை நிரந்தரமாய் அடக்கியாளும்படியான ஆற்றல் உண்டாகவில்லை. ஆகவே பிரதிபையுடன் தன் விவாகம் விரைவிலேயே நடைபெறவேண்டுமென்று தன் விருப்பத்தை அவன் திவான்ஜியுடன் இரண்டு மூன்று தடவை பிரஸ்தாபித்தான். அதற்கு உத்தரமாக திவான்ஜி சொன்னார்,—"கலியாணத்தை விமரிசையாய் நடத்துவதற்கு ஏராளமான பணம் வேண்டியிருக்கும். ஜமீன் விவகாரங்கள் இதுவரையில் சர்க்கார் வசம் இருந்தபடியால், தங்கள் தகப்பனார் இராஜா பஹதூர் ஈட்டி வைத்த தனம் பெரும்பாலும் அவ்வளவும் கரைந்துபோய்விட்டது. இப்பொழுது கலியாணத்தின் பொருட்டுக் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் வருகிற வருஷத்தில் ஜமீனின் வரும்படியிலிருந்தே விவாகத்தை விமரிசையாய் நடத்தலாம். ஆகவே தாங்கள் இன்னும் ஒரு வருஷம் பொறுத்திருக்கவேண்டும்."

இராஜகுமாரனும் திவான்ஜியின் வார்த்தையை மதித்து ஒரு வருஷம் பொறுத்திருந்தான்.

ஜமீனைச் சேர்ந்த பழைய உத்தியோகஸ்தர்களில் எவரெவர் காலஞ்சென்ற பாபு நவகுமாரரைப் புகழ்ந்து கொண்டாடினார்களோ அவர்களை யெல்லாம் புதிய திவான் ஒவ்வொரு விதத்திலும் உபத்திரவிக்கத் தொடங்கினார். உபத்திரவிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இராஜகுமாரனிடம் சென்று தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளலானார்கள். ஆனால் இராஜகுமாரன் செவியில் ஒன்றும் ஏறவில்லை. அவன் திவான்ஜி எது செய்தாலும் சரியாகவே இருக்குமென்று சொல்லியனுப்பி விட்டான். உத்தியோகஸ்தர்கள் வேறு வழியின்றி மிக்க கஷ்டத்துடன் ஒவ்வொருவராய் விடைபெற்றுக்கொண்டார்கள்.

ஸபா பண்டிதர்களில் விசார சீலர்களாயும் தூரதரிசிகளாயும் இருந்தவர்கள் அரமனையில் இராஜ லக்ஷ்மியில்லை யென்றும், ஆகையாலேயே இவ்வெல்லா அநர்த்தங்களும் உண்டாகின்றனவென்றும் நிச்சயித்து ஒருநாள் இராஜகுமாரனிடம் சென்று, "தமக்கு நிச்சிதார்த்தமாயிருக்கிற பிரதிபையைத் தாம் விரைவிலேயே விவாகம் பண்ணிக் கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். இராஜகுமாரனுக்கு விவாகம் செய்து கொள்வதில் யாதொரு ஆக்ஷேபமும் இல்லாமையால், "நான் என்னவோ விவாகம் பண்ணிக்கொள்வதற்குத் தயாராகவே இருக்கிறேன் ; ஆனால் திவான்ஜிதான் இந்த சமயம் இராஜாங்கக் களஞ்சியத்தில் பணம் இல்லையென்றும் ஆகையால் இன்னும் ஒரு வருஷத்திற்கு விவாகத்தை நடத்த முடியாதென்றும் சொல்லுகிறார்," என்றான்.

இராஜகுமாரனிடம் வந்து அவரவர்கள் பேசும் பேச்சுக்களெல்லாம் அவ்வப்பொழுதே திவான்ஜிக்குத் தெரிந்து கொண்டிருந்தது. பண்டிதர்கள் விவாக சம்பந்தமாய்ப் பிரார்த்தித்ததும் அவருக்குத்தெரியாமலில்லை. பண்டிதர்களின் அந்தரங்கமான உத்தேசியத்தையும் அவர் அறிந்துகொண்டு அதை நிஷ்பலமாக்கும் பொருட்டு ஒரு சூழ்ச்சி செய்வதில் புத்தியைச் செலுத்தினார்.

ஐந்தாம் அத்தியாயம்.

திவான்ஜியின் தந்திரம்.

மதியூகிய திவான்ஜி இவ்வாறு யோசிக்கலாயினார். "இராஜகுமாரனுடைய மனதில் பிரதிபையின் விஷயமாய்க் கொஞ்சம் குழப்பம் உண்டாயிருந்தபோதிலும், அவளை அவன் மறந்து போகமுடியாது ; அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளும் எண்ணத்தையும் விட்டுவிட முடியாது. பிரதிபையோ பேரழகு வாய்ந்தவள், புத்திசாலி, பேரிளம் பெண்.

அவள் அரமனையில் இராணியின் பதவிக்கு வந்துவிட்டால், ஒரு சில நாட்களுக்குள்ளேயே இராஜகுமாரன் மீது தன் முழு அதிகாரத்தையும் செலுத்துவாள். அப்பொழுது இராஜகுமாரனுடைய கருத்தும் காரியமும் மாறிவிடுவதில் அதிக நேரம் செல்லாது. இதில் சந்தேகமில்லை. ஒருவேளை இப்படியே நடந்து, இராஜகுமாரன் கண் விழித்துக்கொண்டால், பிறகு என்னுடைய 'ஏகச்சத்திர' ராஜ்யாதிகாரம் நிலைப்பது முடியாத காரியம்." திவான்ஜி இவ்வாறு தனக்குள் எண்ணியாலோசித்துப் பிரதிபையை அடியோடு அழித்துவிட ஆயத்தமானார்.

இராஜகுமாரன் விவகாரதசையடைந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் ஒருநாள் திவான்ஜி சமயம் பார்த்து இராஜகுமாரனுக்கு ஜமீன்தாரியின் வரவு செலவு கணக்கை விளக்கிக்காட்டி, எல்லாவகைச் செலவும்போக மூன்று லக்ஷம் ரூபா கையிருப்பாய் இருப்பதாகச் சொன்னார். இராஜகுமாரனுக்கு இந்தச் சிக்கலான கணக்குச் சிறிதாகிலும் விளங்கிற்று இல்லையா என்று எம்மால் கூறமுடியாது ; ஆனால் ஒரு வருஷத்தில் மூன்று லக்ஷம் ரூபா லாபம் வந்ததைக் கேட்டு அவனுக்கு அளவற்ற ஆநந்தம் உண்டாகவும், அவன் திவான்ஜியின் உழைப்பு, வினைத்திறம் முதலியவற்றைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினான்.

திவான்ஜி இராஜகுமாரன் வாயிலிருந்து புகழ்ச்சியைக்கேட்டு வெட்கினவர் போல் காட்டி, "இராஜகுமாரரே, தங்கள் இப்படி புகழும்படிக்கான யோக்கியதை என்னிடத்தில் இல்லை. நான் என் கடமையைச் செலுத்தினதன்றி அதிகமாய் ஒன்றும் செய்துவிடவில்லை. தங்கள் காரியத்தில் என் சரீரத்தை விடவேண்டுமானாலும் விடத்தயாராயிருக்கிறேன். சரி, இந்த விஷயம் இப்படி இருக்கட்டும். இப்பொழுது நான் தங்களிடம் சொல்ல வந்ததாவது, கஜானாவில் சேர்ந்திருக்கும் மூன்று லக்ஷம் ரூபாயில் ஒன்றரை லக்ஷம் செலவழித்துத் தங்கள் விவாகத்தைச் செய்து முடித்துக்கொள்ளலாம்."

இராஜகுமாரன் இதைக் கேட்டுக் களிப்படைந்து, "தங்கள் இஷ்டப்படி நான் கலியாணம் செய்துகொள்ளத்தயாராயிருக்கிறேன். இனிப்பண்டிதர்களை அழைத்து விவாகத்துக்கு முகூர்த்தம் வைக்கச்சொல்லி, மற்றும் அவசியமான காரியங்களுக்கும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, பிரதிபையின் திவ்விய ரூபலாவண்யம் இராஜகுமாரனது மனக்கண்முன் ஒளியிடத்தொடங்கவே, அவன் நெஞ்சம் ஆநந்த மேலீட்டினால் படபடவென்று அடித்துக்கொள்ளலாயிற்று.

திவான்ஜி கூறினார்—"ஏற்பாடு செய்ய எவ்வளவு நேரம் செல்லப்போகிறது? தாங்கள் கட்டளையிடவேண்டியதுதான் தாமதம். தாங்கள் வாயை அசைத்தால் இரண்டு நாட்களில் எல்லாம் முடிந்துவிடும்." இப்படிப் பேசிவிட்டு திவான்ஜி சற்றுநேரம் கழித்து, "பிரதிபையைத்தானே விவாகம் செய்துகொள்வதென்று நிச்சயமாயிருப்பது?" என்று கேட்டார்.

இராஜகுமாரன் சிரித்துக்கொண்டே கூறினான்—"இதில் புதிதாய் நான் நிச்சயிப்பது வேறென்ன இருக்கிறது? இதை என் பிதாதாமாகவே வெகு காலத்துக்கு முன் நிச்சயித்து வைத்துப் போய்விட்டாரே."

திவான்ஜி ஒரு வரட்டுச் சிரிப்பு சிரித்து,—"ஆமாம், அது எனக்குத் தெரிந்தே இருக்கிறது. மேலும் பிரதிபை தங்களுக்கு எவ்விதத்திலும் பொருத்தமுள்ளவளே என்பதிலும் எனக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால் இதைப்பற்றி நான் மறுபடியும் கேட்பதன்

காரணம், இந்த விவாக சம்பந்தமாக நமக்கு யாதொரு கஷ்டமும் அநுபவிக்கும்படி நேரிடக்கூடாதென்பதே,'' என்றார்.

"எதைப்பற்றி கஷ்டம்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இராஜகுமாரன்.

"கஷ்டமா? அப்படி ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும், சமூகத்திலும் ஜாதியிலும் யாரும் அப்படி இப்படியென்று கண்டது சொல்லாமலிருக்கவேண்டுமே. இதுதான் எனக்குக் கவலையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது.''

"சமூகத்திலும் ஜாதியிலும் யார் என்ன சொல்லப் போகிறார்கள்? பிரதிபையை எனக்கு விவாகம் செய்துகொள்ளுகிறதென்று வெகு நாளைக்கு முன்னமே நிச்சயமாயிருக்கிறது. சிஷ்டாசாரப்படி அவளுடைய பிதா எனக்கே கொடுக்கிறதென்று வாக்குத்தத்தம் செய்துபோய்விட்டார். ஆகவே அவள்தான் ராஜபத்தினியாகப் போகிறவள். இதுவும் எல்லோருக்கும் தெரிந்தே இருக்கின்றது. இப்பொழுது எங்களிருவருக்கும் கல்யாணமாகவேண்டியதுதான் பாக்கி. ஆகவே இதைப்பற்றி என்ன பேச்சுக் கிளம்பக்கூடுமென்பதும் என்ன கஷ்டம் உண்டாகக்கூடுமென்பதும் எனக்கு விளங்கவில்லை.''

திவான்ஜி தன் முகத்தில் ஆழ்ந்த சிந்தைக் குறிப்பைத் தோற்றுவித்துக்கொண்டு, "இராஜகுமாரரே, இந்த சங்கதியொன்றும் தங்களுக்குத் தெரியாது. இவற்றையெல்லாம் தங்களிடத்தில் வந்து சொல்லும் சாகசம் எவனுக்குண்டு? சகலவிதமான சங்கதிகளும் சமயாசமயமின்றி என் காதில் வந்து விழுகின்றன. ஆகையினாலே தங்களிடம் சொல்லுகிறேன்,'' என்றார்.

இராஜகுமாரன் திகைப்புற்றுக் கேட்டான், "தாங்கள் என்ன கேள்விப்பட்டிருப்பது?''

திவான்ஜி விடையளித்தார்—"இராஜகுமாரரே, தாங்கள் என்னைச் சங்கட நிலையில் தள்ளுகிறீர்கள். அந்த சங்கதிகளையெல்லாம் கேட்டுத் தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அவைகளைக் கேளாமலிருப்பதே உத்தமம். எனக்கே அந்த சங்கதிகளில் நம்பிக்கையில்லை. ஆனால் தங்களுக்கு ஆவலாயிருந்தால் கேளுங்கள். ஸ்தூலமாய்ச் சொல்லுகிறேன்—(இதைத் தங்களுக்குச் சொல்வதும் என் கடமையே)—தாங்கள் பிரதிபையைக் கலியாணம் செய்துகொண்டால், பிராம்மண சமூகத்தார் தங்களைப் பதிதனாகப் பாவித்துத் தங்களுடன் சமபந்தி போஜனம் முதலிய விவகாரங்களை நிறுத்திக்கொள்வார்கள்.''

"இப்படிச் சொல்வதற்குத் தங்களிடம் ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?''

"இல்லாவிட்டால் நான் புரளி செய்கிறேனென்று நினைக்கிறீர்களா?'' என்று சொல்லி திவான்ஜீ சிரித்துக்கொண்டே தன் ஜேபியிலிருந்து சில வியவஸ்தா பத்திரங்களை எடுத்து இராஜ குமாரன் எதிரில் வைத்தார்.

இராஜகுமாரன் ஆவலாய் அவற்றையெல்லாம் படித்துப் பார்த்தான். வாக்குத் தத்தம் செய்யப்பட்ட கன்னிகையுடன்—அவள் ருதுமதியாய் விட்டிருக்கும் பக்ஷத்தில்—விவாகம் நடக்குமானால், பாதித்திய ஜநக (பதிதத் தன்மையை உண்டாக்கும்) தோஷம் ஏற்படுமென்று பட்டபல்லி, நவத்துவீபம், காசி முதலிய பிரதேசங்களிலுள்ள பண்டிதர்கள் வியவஸ்தை அளித்திருக்கிறார்கள். இராஜகுமாரன் சற்று நேரம் சும்மா இருந்து விட்டுப் பிறகு திவான்ஜியை நோக்கி—"தாங்கள் இந்த வியவஸ்தாபத்திரங்களையெல்லாம் எப்போது திரட்டினீர்கள்?'' என்று கேட்டான்.

திவான்ஜி சிரித்த வண்ணமாய்ச்சொன்னார்: "இராஜகுமாரரே, இந்த திவான் உத்தியோ

கம் மகா கஷ்டமானது. இதில் நாலா பக்கமும் ஜாக்கிரதையாய்ப் பார்வையைச் செலுத்தி நடக்காவிட்டால், அடிக்கடி இடரிவிழ வேண்டி வரும். தங்களுடைய இந்த இராஜ வம்சம் வெகு பிராசீனமானது. இந்த வம்சத்தை நான் ஹிந்து சமூகத்தின் சிரோபூஷணம் என்றால், சிறிதும் உயர்வு நவிற்சியாகாது. நான் இங்கே வந்தது முதல் பிரதிபைக்கும் தங்களுக்கும் நடக்கப் போவதாயிருக்கும் விவாக சம்பந்தமாய் விதம்விதமான செய்திகள் என்காதில் விழுந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் கேட்டு நான் யோசித்தவளவில் அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்வது சரியல்லவென்னும் முடிவுக்கு வந்தேன். நீதி நூலாரும் सहसा विदधीत न क्रियाम्— "ஸஹஸா விததீத நக்ரியாம்'' என்று கூறியிருக்கிறார்கள். தாங்கள் விவகார திசைக்கு வந்தவுடனே விவாக விஷயத்தை வற்புறுத்தத் தொடங்கினீர்கள். எனக்குப் பெருத்த விசாரம் உண்டாய்விட்டது. இன்னது செய்வதென்று தோன்றவில்லை. ஆகையால் அப்பொழுது விவாகத்துக்கு வேண்டிய பணம் இல்லையென்று சொல்லித் தங்களைச் சமாதானப்படுத்தினேன். ஆனால் அப்படிச் செய்தும், நான் நிச்சிந்தையாய் இருக்க முடியவில்லை. ஒருவரிடமும் ஒன்றும் சொல்லாமலும் கேட்காமலும் நான் சகஜமாக ஒரு பிரசினத்தை எழுதிப் பட்டபல்லி, நவத்துவீபம், காசி முதலிய இடங்களிலுள்ள பிரசித்தி பெற்ற சாஸ்திரஜ்ஞர்களுக்கு அனுப்பினேன். இப்பொழுது அவர்களெல்லோரிடத்திலிருந்தும் இந்த உத்தரங்கள் கிடைத்திருக்கின்றன. தாங்கள் பிரசினம் உத்தரங்கள் இவை இரண்டையும் படித்து எது உசிதமென்று தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள்.''

இராஜகுமாரன் வியாகுலமுற்றவனாய்ச் சிந்திக்கத் தொடங்கினான்; ஆனாற் சிறிதும் சிந்திக்க முடியாமற் போகவே சற்று நேரங் கழித்து திவான்ஜியுடன் சொன்னான்—"இன்று இந்த சங்கதியெல்லாம் இப்படியே இருக்கட்டும். இரண்டுமூன்று நாட் கழித்துச் சிந்தித்து ஆராய்ந்து தங்களிடம் பேசுகிறேன்.''

தன்னுடைய தந்திரம் பெரும்பாலும்பலித்து விடுவதாயிருப்பதைக் கண்டு திவான்ஜி தனக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

(தொடரும்.)

கற்றவருக்கு ஒரு விண்ணப்பம்.

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்.)

நான் சில நாட்களாய் இரவுதோறும் நடைபெறும் இராமாயணப் பிரசங்கத்திற்குச்சென்று வருகிறேன். பன்முறை இப்பண்டை காலத்து நூலைக்கேட்டும் வாசித்தும் இருப்பினும் ஒவ்வொரு இரவும் அப்பொழுதுதான் புதிதாய்க் கேட்பதுபோலச் சில விடங்களில் இருதயம் பூரித்து வரும் பேரானந்தமும், சில விடங்களில் மனங் கரைந்து உருகி வெதும்பும் துயரமும், சில விடங்களில் கொதித்தெழும் கோபமும் உண்டாகி அதே சிந்தனையோடு வீடு திரும்புகிறேன். இவ்வித எண்ணங்கள் எழுவதற்குக் காரணம், கவியின் எண்ணத்திறமல்லாத அற்புத சக்தியோ? அவர் எடுத்துரைத்திருக்கும் மகா புருஷனின் ஒப்புயர்வு அற்ற குணத்தின் ஆற்றலோ? அல்லது கேட்பவரின் பக்தியின் அதிசயமோ? இவைகளில் எது வென்று நன்கு புலப்படவில்லை.

(1) சுக்ரீவாஞ்ஞையின் கட்டளையும், கைகேயியின் வேண்டுகோளுமன்றியே, தனது சகோதரனுக்கு முன் கையில் வில்லேந்தி, சகல

7/15 ... N25.2.4
207604
சென்னை-600 008

ராஜ்ய சம்பத்தையும், பெண்ணென்னும் ஆசையையும், மனையாளென்ற அன்பையும், தன்னை அடைந்தவள் என்ற தயையையும் அறவே ஒழித்துத் தன் மனைவியை விட்டுக் காட்டிற்குத் தான் முன் செல்லக் கிளம்பிநின்ற இலக்ஷ்மணனின் சகோதர வாஞ்சையைக்கண்டு நாம் மனம் கரைவதைவிட, தனது அருமைத் தாயால் யாதொரு வில்லங்கனமுமின்றித் தனக்கே உரிமையாய் அளிக்கப்பட்ட ராஜ்ய லக்ஷ்மியைப் புறக்கணித்து ஆரண்யத்தை நோக்கிச் சென்ற சகோதரனே நினைவாய், அன்ன ஆகாரமின்றி விரைந்து சென்று ராஜ்யத்தைக் கொள்ளவும் மீண்டும் அயோத்திமாநகரத்தை நோக்கித் திரும்பவும் இராமனின் பாதத்தில் விழுந்து வேண்டிநின்ற பரதனின் சகோதர வாஞ்சையே நம் இருதயத்தைஅதிகம் ஊடுருவிச்செல்வதேன் ?

(2) அருமைப் புதல்வன் வனவாசியாய்ப் போவதை நோக்கிப் புலம்பித் தவித்து உள்ளம் நொந்து, புத்திரனை மாற்புறத்தழுவி தன்னை விட்டகலலாகாது என்று வேண்டிய தாயின் சொல்லை மறுத்து, தன் பிதாவின் கட்டளையையே மேன்மையாய்க் கொண்டு இராமன் வனத்திற்குச் சென்றதேன்? நமது தர்ம நூல்படி பிதாவைவிடத் தாயன்றோ முதன்மையானவள்! அவளை மீளாத் துயரத்தில் வீழ்த்திச் சென்றது புத்திரனின் கடமையாகுமோ?

(3) நூறு யோஜனை தூரம் கடலைத்தாண்டி மானிடப்பூண்டும் புலப்படாத அசோகவனத்திற் கணவனை விட்டுப் பிரித்து இராவணன் மலர்போன்ற மேனியாளை அரக்கிகள் மத்தியில் வைத்துப் பலவிதமான துன்பத்திற்கு உள்ளாக்கிய போதும், சீதை மனம் தளரவில்லை. கடலைத் தாண்டித் தன் நாயகன் கணையாழியையும் அடையாளமாய்த் தந்து, அவர் தனக்காகப்படும் பெரும்துயரையும் எடுத்து விரித்துரைத்து அக்கணமே சிதாப்பிராட்டியாரை இராமனிடம்சேர்த்து விடுவதாய் உறுதிமொழி கூறி அதற்கேற்ற தனது இச்சைபோல் வளரக்கூடிய அற்புத உருவை அநுமான்காண்பித்தும் மனம் தளராமல் இன்னும் சிலகாலம் அரக்கர் மாளிகையிலேயே இருப்பதாயும், மீண்டும் ஒருமுறை கணவனைக் காண்போமா வென்னும் ஆசையை அடக்கியும், தற்காலம் அநுமானுடன் செல்ல இயலாதவளாய் இருப்பதாயும் அதற்கேற்ற சிலவற்றைச் சமாதானமாய்க் கூறித் தன் கணவனே தன்னை மீட்டு அழைத்துச்செல்லட்டு மென்று மறுத்த ஜானகியின் எண்ணந்தான் என்ன? இவைபோன்ற சந்தேகங்கள் நமது நூற்களை வாசிக்கும்போதும் கேட்கும்போதும் உண்டாகின்றன.

மேல் நாட்டார் தங்கள் நூலாசிரியர் இயற்றிருக்கும் நூற்களைப் படித்து ஆநந்திப்பதோடு மட்டும் நிற்காமல், அவைகளை ஆராய்ச்சிசெய்து அவைகளில் இருக்கும் குணகுணங்களை தேர்ந்தெடுத்து ஆசிரியரின் அபிப்பிராயத்தைத் தமது புத்திக்கேற்ப இவ்விதமாயிருக்க வேண்டுமென்று வெளியிட்டிருக்கின்றனர்.

ஹாம்லெட்டில் இருக்கும் ஒபீலியா ராஸலெண்டாய் மாறியிருந்தால் காதலனின் மனவேற்றுமையின் உண்மையை அறிய இயலாதவளாய்த் தன்னைக் காதலிக்கவில்லைஎன்ற ஏக்கமே மேலிட்டுப் பைத்தியம் பிடித்து உயிர் துறந்திருக்க மாட்டாள் என்றும், ஹாம்லெட்டையும் பலவிதமான பரிகாசத்திற்கு உள்ளாக்கித் தன் மனக்கவலையை வெளியிடும்படி செய் திருப்பாள் என்றும் இருவர் குணவேறுபாட்டையும் ஒப்பிட்டு எழுதி யுள்ளார்.

ஹாம்லெட் ஒதெல்லோவாய் இருப்பின், தன் சிறிய தகப்பன் செய்த கொலையின் உண்மையை அறிவதற்குஅவ்வளவு காலம் காத்திருந்து தன் வாழ்நாட்களை எல்லாம் வீண் சிந்தனைக்குள்ளா

க்கி வீணாக்கியிருப்பானா? தன்னைக் கொன்ற பாதகன் தனது தம்பியே என்று தந்தை பேயுருவமெடுத்துக் கூறிச்சென்றபோது, உடனே அந்த நம்பிச் சிறிய தந்தையைக் கொன்றிருப்பானாயின், அரசனுமாகி ஒபீலியாவையும் மணந்து நீண்டகாலம் வாழ்ந்திருக்கலாமல்லவா ?

ஒதெல்லோ, ஹாம்லெட்டைப்போல் உண்மையை வெளியாக்கப் பிரயாசை எடுத்திருந்தால், அல்லது அவ்வளவு காலம் பொறுமையுடன் காத்திருந்தால்தன் மனைவி காஷியோவைக் காதலித்துள்ளாள் என்பதை ஒரு மூன்றாம் மனிதன் வாயிலாகக் கேள்வியுற்றுப் பேதையாகிய டெஸ்டிமோனாவைச் சிறிதும் யோசனையின்றித் தன் கரங்களாலேயே கொலை செய்திருப்பானா ? தன் அன்புக்குகந்த மனையாளுடன் டெஸ்டிமோனா மாசற்றவள்தான் என்பதை உணர்ந்து, சுகித்திருக்கலாமல்லவா ? இவ்விதம் அந்நாடகங்களின் முடிவே மாறியிருக்குமென்றும் இன்னும் இவைபோன்ற பற்பல சந்தேகங்களைக் கிளப்பி அவைகளுக்கு விடையாய்ப் பல வியாசங்களும் நூல்களும் இயற்றியிருக்கிறார்கள். நாமும் நமது நூல்களை ஆராய்ச்சி செய்து அறிவைப் பரவச் செய்யும் வியாசங்கள் ஏன் எழுதலாகாது ?

புண்ணிய கதைகள் என்பதே மேலிட்டு மௌனமாய்க் கதைகளை வாசிப்பதோடுமட்டும் நில்லாமல் அவைகளின் விசேஷங்களையும் எடுத்துச் சீர்தூக்கி வெளியிடுவோமாயின் அது நமது நாட்டிற்கே நாம் இயற்றியதோர் பேருதவியாகும்.

ஒரு பெண்பாலின் தளராத ஊக்கத்தினால் நடைபெறும் இப்பத்திரிகை, நம் சகோதரிகளிற் பலரை அதற்கு வியாசங்கள் எழுதி அனுப்பத் தூண்டுகிறது. அதில் வரும் வியாசங்களிற் பெரும்பான்மையும் பெண்மக்களாலேயே வரைந்துள்ளனவாகவே இருக்கின்றன. நம்மைப்போன்ற சகோதரி ஒருத்தி அதற்குப் பத்திராதிபர் என்பதே ஒவ்வொரு சகோதரிக்கும் ஊக்கத்தையும் திடத்தையும் அளித்து அவர்கள் கல்வியின் முன்னேற்றமடையும் வியாசங்கள் எழுதுவது என்ற ஓர் அற்புத சக்தியை அளிப்பதுமாய் இருப்பது நமக்கு எவ்வளவு பெருமையாய் இருக்கின்றது !

முன்னைவிட தற்காலம் எழுதுவோரின் தொகை அதிகரித்திருக்கின்றதல்லவா? கணவன் மனைவி சச்சரவுகளையும், தினந்தோறும் வீடுகளில் நடைபெறும் காரியங்களையும் வியாசங்களால் வெளியிடுவதைவிட அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றிச் சிந்தனை செய்து எழுதுவார்களாயின் நாம் கற்ற கல்விக்கும் நம் நாட்டிற்கும் பெருமையாய் இருக்கும். வாசிப்பவரின் மனதிலும் உற்சாகத்தையும் அறிவையும் பரவச் செய்யும். உலகம் தோன்றிய நாள் முதல் நிலைத்திருக்கும் நூல்களை இயற்றிய நூலாசிரியரின்தொகையில் நாமும்ஒருவராய்ச் சேர ஆசைப்படுவது, ஆசைக்கோர் தகாதகாரியமல்லவாயினும், பிறவியின் விசேஷமில்லாமல் ஒவ்வொருவரும் விரும்பி அடையக்கூடிய சாதனமல்ல. புதிதாய்க் கற்பனை செய்து சுவை குன்றாத கதைகள் இயற்ற ஆசைகொள்வதோடுமட்டும் நிற்காமல் அடியிற்கண்ட சந்தேகங்களைப்பற்றி விசாரிப்பதின் மூலமாய் எதைப்பற்றிஎழுதுவது என்றெழுதுகிற கவலையை ஒருவாறு தீர்த்துக்கொள்ளலாம். நம் நாட்டிற்கு எவ்வளவோ சீர்திருத்தங்களுக்கும், அதன் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு மேன்மை அளித்துச் சென்ற நம்மவரின் திவ்விய ஜீவிய சரித்திரங்களை எடுத்துரைக்கலாம்.

ஆங்கிலேயரைப்போல், தாங்கள் செய்யும் காரியங்களையும் தம்மைபற்றிப் பிறர்கூறியுள்ள புகழ்ச்சிகளையும்தினசரிக்குறிப்புப்புத்தகத்தில் எழுதி வைப்பது என்ற வழக்கம் நமக்கில்லாமையால் ஒருவர் சரித்திரத்தை பிறர் எடுத்

துக்கூறுவது பிரயாசையாய்த்தான் இருக்கும். நம்மைப்பற்றி நாமே சொல்லிக்கொள்வதும், கூறியதைக் குறித்து வைப்பதும் தற்புகழ்ச்சி என்ற வசைச்சொல்லுக்குஇடமாகிவிடுமென்ற அச்சமே அவ்விதம் நடந்துகொள்ள இடம் தராமற் செய்துவிட்டது. அவ்விதம் எண்ணுவதை விட்டுத்தங்கள் சரித்திரங்கள் பிறருக்குப்பயன் படுமாறு செய்யவேண்டும். அவர்கள் சரித்திரங்களே பின்வருபவருக்கு வெளிச்சம் கொடுக்கும் ஒரு தீபம்போலவும், நம் தேசத்தின் பெருமை குன்றாமல் இருப்பதற்கு ஓர் ஆதாரமுமாகும்.

சுபம்.

ஏகாந்தமும் சிந்தனையும்.

ஸ்ரீமதி ஸுமதி தேவி.

“இனிது, இனிது ஏகாந்த மினிது” என்னும் தெய்வப்புலவராம் திருவள்ளுவரின் உடன் பிறந்தவளாகிய ஔவையாரின் முதுமொழியை வியந்துரைக்க யாரால் கூடும்? ஏகாந்தமே சிந்தனையை யுண்டு பண்ணுவதாயும், அழிப்பதாயு மிருக்கிறது. தனித்திருந்தாலல்லாது சிந்தித்தல் கூடுமானதன்று. சிந்தித்தலினாலேயே மனிதன் தன்னை யறிகிறான். தன்னை யறிந்தவனே பண்டிதனாவான். தனிமையாயிருக்கும்பொழுது, சிந்தனை தானாகவே யுண்டாகிறதென்பது பிரகிருதத்தில் யாவருமறிந்த விஷயம். எண்ணங்கள் தோன்றும் வயது வந்த சிறு பாலர்கள்முதல் சில நிமிஷங்களுக்குள் மரிக்கப்போகும் கிழவர்கள் வரையில், அவரவர் உள்ளங்களில் சிந்தனைகள் உதித்துக் கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், வெவ்வேறு உலகங்கள் சஞ்சரிப்பதற் கேற்ப அவரவர் மனதில் தோன்றும் கருத்துக்களும் பலதிறப்பட்டனவாகவே யிருக்கின்றன. வயது, தன்மை, குணம், ஆரோக்கியம் இவைகளுக்குத் தக்கவாறே அவர்கள் கருதும் எண்ணங்களுமிருக்கின்றன.

இவற்றில் பாலர்கள் மனதிலுதிக்கும் எண்ணங்கள் ஒருவிதமான நோக்கங்களும் அரியவைகளாயிராமல், பெரும்பாலும் விளையாட்டுப் போக்கானவைகளாக இருப்பதனாலும், விருத்தர்களது சிந்தனை ஒன்றிலும் இடமாகப் பற்றாமல் சலித்துக்கொண்டிருப்பதினாலும் சிறிதும் பலனற்றவைகளாக ஆகின்றன. நடுத்தரத்தினருக்குச் சிந்திப்பதற்கேதுவான தனிமையை யனுபவிக்கக் கூடாதபடி, சித்தவிர்த்திகள் சமுத்திர அலைகள்போலக் கிளைத்துக்கொண்டேயிருக்கின்றன. தன்னைப் பற்றி ஆழ்ந்து ஆலோசிப்பவனே தன் கடமையை யுணர்வானவான். தன்னிடம் குடிகொண்டிருக்கும் நன்மை தீமையைப் பகுத்தறிய அவனே தகுந்தவன். உலகை யறியத் தொடங்கும்வயதினாகிய யௌவனபருவத்தின அக்கு உண்டாகும் விருப்பு வெறுப்புகள் அவர்கள் சாகுமளவும் மாறாதனவாக இருக்கின்றன. உலகமே இவர்கள் இஷ்டப்படி சஞ்சரிக்கவேண்டியதாக ஆகிறது. மனிதருள்ளத்தில் வேறொன்றும் கருத்துக்களை முடிக்கவல்ல ஆற்றலும், அதைவிட முக்கியமான நம்பிக்கையும் அந்த யௌவனபருவதினுக்கே உண்டு. வார்த்திகசுபாவத்திற்குச் சிந்தித்தலே தொழிலானபடியால் அதற்கு யாதொரு மகிமையுமில்லை. ஆனால், இளமையிலுதிக்கும் சிந்தனைகள், ஒரு வருஷத்தின் யௌவன பருவமான வசந்தகாலத்திற் புஷ்பித்த மலர்போல் மணமுறுகின்

றன. பலவித மனோபிரவிர்த்திகளால் அலைப்புறும் அப்பருவத்தில் ஏகாந்தத்தின் இனிமையை மிகச் சிலரே அறிந்திருப்பார்களென்று நம்புகிறேன். தன் மனச்சாட்சியை யறியவும், எங்கும் நிறைந்த கடவுளது எல்லையற்ற பிரபாவத்தை யுணரவும் அவ்வேகாந்தமே உதவி புரிகின்றது.

வாழ்க்கை யென்னும் ஆண்டின் இலையுதிர் பருவமாகிய என் முதுமைக் காலத்திலும், என் வாழ் நாட்களின் சென்ற தினங்களைப் பற்றிய நினைவு எனக்குதிக்காமலிருக்கவில்லை. இன்றுவரை என் சிந்தனையில் இலங்கிய கணக்கிலடங்காக் கருத்துக்களை எடுத்துரைக்க எனக்கு சிறிதும் வன்மையில்லை. அனுபவம் முற்ற முற்ற அவைகளுக்கு முந்திய சம்பவங்கள் சுகமானவையோ, கஷ்டமானவையோ, அவையாவும் அல்பமானவைகளாக நமக்குத் தோற்றுகின்றன. வாழ்நாட்களின்சென்றபாகம் இனிவரப்போகும் காலத்தை விடச் சிறந்ததாகவிருக்குமென்றே நான் கருதுகிறேன். பாலர் பருவம் நம்மை விட்டகன்ற பிறகு அக்காலத்தின் எல்லையற்ற ஆனந்தமும், களங்கமற்ற மனதும் மீண்டும் வரப்பெற்றிலோம். எவ்வளவோ சிறந்ததாக அக்காலம் நமக்குத் தோற்றுகிறது. கடவுளின் சொரூப மென்று கூறத்தகுந்த பேதமையும், பரிசுத்தமும் மிகுந்த பாலர்களின் திருவுருவம் உலகதத்துவத்தை நமக்கு வெளியிடுவதுபோலுமிருக்கிறது. அதன் பிறகு என்ன? அவரவர் பிறவித்தன்மை, விதையிலிருந்து முளைகிளம்புவதுபோல், தமக்கேற்றவாரான ஆசை ஆவலாதிகளுடனும், கோபதாபங்களுடனும் வெளிக்கிளம்புகிறது. அப்புறம் அவரவர் அனுபவத்திற்கும் சக்திக்கும் தக்கவாறு உலகம் நடைபெறுகிறது.

என் அத்தைபெண் கல்யாணியும் நானும் பத்து நாள் வித்தியாசத்திற் பிறந்தவர்கள். அவள் தாய் அவள் பிறந்த எட்டாம்மாதம் இறந்துவிட்டபடியாலும், அவள் தந்தை எளியவரானபடியாலும் கல்யாணி எங்கள் வீட்டிலேயே வளர்க்கப்பட்டு வந்தாள். நாங்கள் இருவரும் ஒன்றாக வளர்ந்து, ஒன்றாகப் படித்து, விளையாடி, உடலிரண்டும் உயிரொன்றுமாக அன்புமிகுந்திருந்தோம். சிறுவயது முதல் தைரியமும் பொறுமையும் கல்யாணியிடம் தலைகாட்டலாயின. நான் பயந்த சுபாவமுடையவளாய் எக்காரியத்திலும் கல்யாணியை ஆசிரயித்தே நடப்பது வழக்கம். எங்களிருவருக்கும் ஒன்றாகவே விவாகம் நிறைவேறியது. என்னை யொரு பிரபுவின் செல்வப்புதல்வனுக்கும் கல்யாணியை வெகு சாதாரண குடும்பத்திற் பிறந்த ஒரு யோக்கியனென மதிக்கப்பட்ட ஒரு சிறுவனுக்கும் மணம் செய்துகொடுத்தார்கள். அப்பொழுது, என்னைப்போல் கல்யாணிக்கு உயர்ந்த நகை புடவைகளில்லையே யென்று நானவளிடம் கூறி அழுதபொழுது “அசடே! இதற்கெல்லாம் வருத்தப்படுவார்களோ?” என்று சிரித்துக்கொண்டு அவளுரைத்தது இன்றைக்குத்தான் போலிருக்கிறது. எல்லாவற்றையும் சகிக்கவல்ல பொறுமையை ஈசன் அவள் விதியை யுணர்ந்தே அவளுக்கு அளித்திருந்தாரோ? அல்லது சிறுவயது முதல் தெய்வபக்தி மிகுந்து தான் அநாதை என்பதினால் தனக்கு பகவானே துணையென அவள் பாவித்து அவரிடம் தன் முழு நம்பிக்கையையும் வைத்திருந்ததினால் தான் ஈசன் கல்யாணிக்கு மனோதிடத்தையும் பொறுமையையும் அருளியிருந்தாரோ?

நாங்களிருவரும் நேர் விரோதமான அதிர்ஷ்டத்துடன் புவியிற் பிறந்ததுபோல் எங்கள் வாழ்க்கையும் முற்றும் மாறாகவே யிருந்தது. அதிர்ஷ்ட தேவதை என்னைக் கடைக்கண்ணால் கடாக்ஷிக்க, அவளுடைய மூத்தசகோதரி கல்

யாணியிடம் தன் முழு விட்சணியத்தையும் செலுத்தலானாள். கல்யாணியின் புருஷன் ஸிம்லாவில்வேலையாயிருந்தான். அவனுடன் அவன் குடும்பத்தார் அனைவரும் வசித்திருந்தனர். கல்யாணியைச் சில காலத்திற்கெல்லாம் அவ்விடம் அழைத்துச்சென்றார்கள். கல்யாணியுடைய பொறுமையையும், தைரியத்தையும் பரிசோதிக்கவென்றே போலும்! பல துன்பங்கள் அவளுடைய சிறிப்பும் களிப்பும் குடிகொண்ட இருதயத்தை வாட்டலாயின. கல்யாணி புக்ககம்சென்ற சிலகாலத்திற் கெல்லாம் பல இம்சைகளுக்கு அவள் உள்ளானாள். அவளிடம் அடிக்கடி குற்றம் கண்டுபிடித்து அவள் கணவனிடம் குறை கூறுவதே அவள் மாமி முதலிய பெண்டுகளுக்குத் தொழிலாயிருந்தது. குற்றம் கண்டு பிடிக்கவேண்டுமென்று ஆரம்பித்துவிட்டால் அப்புறம் அப்படிப்பட்ட மனிதரிடத்தில் வாழ்வது மிகவும் சிரமம். "வேண்டாத மருமகள் கால்பட்டாலும் குற்றம், கைபட்டாலும் குற்றம்" தான். ஏதோ கல்யாணி அவர்கள் முகத்தில் விழித்த வேளை. அவர்களைத்தான் குறை கூறுவானேன்! உலகில் குற்றம் குறைவுகளற்ற மனிதர் அகப்படுவது துர்லபம். எப்படிப்பட்ட பெரியவருக்கும், கண்டுபிடிக்க வேண்டுமென்ற கருத்துடன் அவர்களை ஆராயப் புகுந்தால், சந்திரனிடம் களங்கம்போல் சிறுகுறைவு தென்படாமலிருக்கவில்லை. அதிலும் தந்நலம் கருதாத ஹிந்து மருமகள் பிறர் பொருட்டுத் தான் வாழ்பவளாகக் கருதுவாள். தன் கணவனைச் சந்தோஷிக்கச் செய்வதே தன் வாழ் நாட்களில் தான் பெறும் பேறெனக் கருதப்பட்டவள். கல்யாணியிடம் நற்குணங்களெல்லாம் அடைக்கலம் புகுந்திருந்தன. அவள் கணவன் நல்லவன்தான். ஆயினும், தாய், சகோதரிகளின் வார்த்தையைக் கேட்டு அவளைத் துன்புறுத்துவானாயினன். அவளிடம் பிரியமாகப் பேசுபவராவது, அனுதாபப் படுவராவது ஒருவரும் அவளருகில் இல்லை, அக்கம் பக்கத்தவர் வீடுகளுக்குப்போதல் தவறெனக் கருதப்படுமாகையால், ஒருவரையும் அவ்வூரில் அவளறியாள். அவள் தன் நம்பிக்கையாலும், தைரியத்தாலும் எல்லாவற்றையும் சகித்து வந்தாள்.

நாளடைவில் கல்யாணிக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அவைகளும், கல்யாணியின் துன்பத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவே விரைவிலிறந்தன. அப்பொழுது நானெழுதிய கடிதத்திற்கு பதில் கடிதம் பின்வருமாறு கல்யாணி எழுதியிருந்தாள் :—

"ஈசன் திருவுளப்படி நடக்குமேயல்லாது வேறென்ன? அழுவதினாற் பயனில்லை யென்றறிந்தும், என் கண்கள், அனுதாபத்தை வேண்டும் மானிடத்தன்மையால் கண்ணீர் சொரிந்தன. அத்தறுவாயில் "அதிர்ஷ்டக்கட்டை ஆத்திற்கு வந்தது முதல் அழுகைதான். ஐயோ! அவனுக்குத்தான் என்ன சுகம்" என்று என் மாமியுரைத்தது என் காதில் விழுந்தது. உண்மைதான். சோற்றுக்குக் கேடாக, பூமிக்குப்பாரமாக, நான் எதற்காக உயிர் வாழவேண்டும்? யோசித்து, யோசித்து என் மூளை வாண்டது. ஒருநற் சொல்லுக்கும், பிரியமான ஒரு பார்வைக்கும் ஏங்கி ஏங்கி என்மனம் விண்டது. ஐயே! எவ்வளவு இரவுகளில், பகற்கால முழுதும் இவ்வுடலை உழைத்து விட்டு அம்முப்பது நாழிகைகளையும் சிந்தனையிற் கழித்திருக்கிறேன். என் வீட்டவர்கள் என்னைப் புறம்பாக ஒதுக்கித் தங்களுடன் சேர்த்துக் கொள்ளாததால் எனக்குச் சிந்திப்பதற்குப் போதிய அவகாசம் கிடைத்தது. அவற்றை வீண் போக்காது என் அறிவுக் கெட்டியவரை ஆராய்ந்ததில் என்கடமை எனக்குத் தெளிவாக விளங்கியது. அதை வழுவாது செலுத்திவர பகவான்

எனக்குத் தைரியத்தைக் கொடுப்பாராக. என் கவலைகளை யெல்லாம் உனக்குத் தெரிவித்து உன் மனதை சந்தோஷக் குறைவுள்ளதாகச் செய்வானேன்?"

இக்கடிதம் கிடைத்த அன்று நான் மனம் விண்டு அழுதேன். அதுதான் என்னால் முடிந்தது. "உன் உடன் பிறந்த தைரியமும், நம்பிக்கையும் உன் உயிர்த்தோழிகளாக விருக்கட்டும். உன்னிடம் குடிகொண்ட பொறுமை ஒரு நாளும் உன்னை விட்டகலாதிருக்குமாக" என்றுதான் என்னால் அவளுக்குப் பதில் எழுத முடிந்தது.

கல்யாணியின் கஷ்டங்கள் இவ்வளவுடன் நிற்கவில்லை. நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தன. பலமுறை தற் கொலை செய்து கொள்ளலாமா வென ஆலோசித்தாள். ஈசனிடம்நம்பிக்கைகொண்ட அவளால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அவரளித்த ஜீவனை அவரே கொண்டு போகட்டுமென்று திடம் கொண்டாள். ஆடும் ஊஞ்சலைப்போல் அவள் மனம் தத்தளித்தது. ஈசனிடம் அன்பு மிகுந்தாள். அவரது பிரபாவத்தை உணர்ந்து அனுபவிப்பதற்கு ஏகாந்தமே வேண்டியதாகையால் தனிமையை மிகுதியாக விரும்பினாள். அவள் கருத்துக்கள் யாவும் மிகப் புனிதமானவையாகவிருந்தன. பகவான் தன் பக்தர்களைப் பரிசோதித்து, அவர்களது மலங்களைப் போக்கித் தூயராக்குதல் இயல்பாதலால்கல்யாணியைப் பின்னும் பரீக்ஷிக்கவென்று தான்போலும், அவள் கணவன் துடர்வியாதி என்னும் ப்ளேக்கால் மரண மடைந்தான்.

கல்யாணி ஸிம்லா சென்ற பிறகு என் தந்தை பலமுறை அழைத்தும் அவர்கள் கல்யாணியை அனுப்ப வில்லை. இப்பொழுது என் தந்தை அவளை அழைத்துவரக் கல்யாணி அவள் பிறந்தகத்திற் புகுந்தாள். அன்று வீடு பட்ட அலங்கோலம் சொல்லத் தரமன்று. கல்யாணி முதல் முறை இவ்வீட்டை விட்டுப் புருஷனகம் சென்ற காலத்திற் அவள் தன் மனதில் சித்திரித்து வைத்திருந்த அவளது வாழ்க்கையின் விவரம் யாவும் அருங்கானகத்திற் கண்ணுற்ற கானல் நீராயினவே! இவ்விடம் விட்டு அவள் சென்ற காலத்தில் உற்சாகத்திற்கும் ஆசை ஆவலாதிகளுக்கும் இருப்பிடமாயிருந்த அவள் மனமானது இப்பொழுது சூன்யமாக விருந்தது. முன்பு சுறு சுறுப்பும், நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியம் வாய்ந்தவளுமான கல்யாணி இப்பொழுது ஒன்றிலும் மனம் செல்லாது, தனியளாய்த் தானிருக்கும் அரை விட்டகலாதிருந்தாள். பேசுவதில் தடையற்றவளும், அழகாய்ப் பேசுபவளுமான அவளதுசொற்கள் இப்பொழுது மிகச் சொர்ப்பமானவையாகவேயிருந்தன. ஒன்றிலும் பற்றற்றவளாய் அவள் நிச்சலமான மடுவைப் போன்ற நிம்மதியையடைய ஆவல் கொண்டாள். அவள் அங்கங்கள் மெலிந்து, அழகு குன்றியிருந்தன. அவள் கண்களில் மாத்திரம் குதூகலமும் ஊக்கமும் முன்போல் விளங்காவிட்டாலும், அபூர்வமான சாந்தமும் பொறுமையும் பிரதிபலித்தது. அவளது தைரியமும், பகவானிடத்தில் நம்பிக்கையும் அவளை விட்டகலவில்லை. ஈசன் திருவடித் தியானத்திலேயே தன் கருத்துக்களையும், அவகாசத்தையும் கழித்தாள்.

அவளுக்கு அடைக்கலமாக விருந்த என் பெற்றோர்கள், சில காலத்திற்கெல்லாம் இவ்வுலகை நீத்து விண்ணுலகேகினர். அவள் அப்புறம் எங்கள் வீட்டில் வசிக்க சம்மதப்படவில்லை. சந்நியாசிகள் மடத்திற்குச்சென்று அங்கேயே தானுமொருவளாகச்சேர்ந்து வசிக்கத்தொடங்கினாள். அங்கிருந்த சந்நியாசினிகளுடன் இவளும், பாரதநாடு முழுமையும் சுற்றி

வந்து, ஆங்காங்குள்ள புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து மீண்டும் ஊர்வந்து சேர்ந்தாள். அவளை ஊரார் பலவிதமாகத் தூற்றினர். உலக அபவாதத்தால் கிலேசமுற்ற நாங்கள், அவளை எங்களிடம் வந்து வசிக்கும்படி மன்றாடினோம். அவளை மாற்ற எங்களால் முடியவில்லை. "எங்கும் நிறைந்த பரம்பொருள் தான் தவறாக நடக்கவில்லையென்பதை யறிவாராதலால் தனக்கு உலக அபவாதம் ஒரு பொருட்டல்ல" என்று மறுத்துவிட்டாள். அவள் வாழ்க்கை நிர்மலமாகவிருந்தது. உலக ஆசைகளொன்றும் முற்றுப்பெறாத அவள் தன்மனதைச் சிந்தனையிற் செலவிட்டதினால், கல்யாணி அதிக துக்கத்தினால் அஞ்ஞானத்தை யடையாது, தனிமையின் இன்பத்தையும், பகவானிடம் பக்தியையும் பெற்றாள்.

உலக வாழ்க்கை யென்னும் சமுத்திரத்தை, நம்பிக்கையாகிற ஓடத்தின் உதவியாற் கடக்க விரும்பும் மாந்தர்கள், சுகதுக்கங்களாகிற அலைகளினால் மோதுண்டு, நிலை தடுமாறுகிறார்கள். பலர் அஞ்ஞானமென்னும் ஆழியில் அமிழ்ந்துவிடுகிறார்கள். மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ள பாக்கியசாலிகள் தைரியத்தினால் மீட்சியடைகிறார்கள். தாமரையிலையில் தண்ணீர்போல் ஒய்ச்சலொழிவற்ற இவ்வுலகில் ஏகாந்தமானது உலவிவருகிறது. அதன் முடிவு எம்மட்டுமென்றுகூற யாரால்தானியலும்? முதலில் நன்மை தீமையை யறிகிற சிந்தனையானது தனிமையினின்றும் தோன்றி அதிலேயே மறைகிறது. மனிதனது அறிவானது ஜடமாக ஒன்றையும் அறியாது வெறுமையாயிருப்பதைவிடத் தன் மனச்சாக்ஷியை யறியச்செய்யும் சிந்தனையுடனிருப்பது மேலாகக் கருதப்படுகிறது. அதற்குப்பின் அவைகள் நம்வழியிற் செலுத்தப் படுதலே சிறந்ததாகக் கூறுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலானவையும், மனிதனுக்கு இன்பமளிக்கக்கூடியதுமானவை, மனத்தூய்மையும், நிம்மதியுமேயாம். அதைப் பெற, நமக்கு உதவிசெய்வன ஏகாந்தமும் சிந்தனையுமே யாகும். அத்தகைய பரிசுத்தமும் அமைதியும் பார்முழுதும் பரவி நின்றால்—ஆகா! அத்தருவாய் எப்பொழுதோ?

மதியந்திரி.

ஸ்ரீமான் எம். எஸ். சுப்ரமணிய அய்யர்.

நமது தமிழ்நாடு மூன்றுபிரிவுகள்கொண்டது. அவை சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனப்படும். அச்சேரநாட்டுக்குக் கேரளதேசம் எனவும் ஒரு பெயருண்டு. அது மேலைக் கடற்கரையில் உள்ளது. பல்லாண்டுகளுக்கு முன் ஓர் அரசன் அதனை யாண்டுவந்தான். அவன் பெயர் இராமவர்மன். அழகினும் ஆற்றலினும் அவன் ஸ்ரீராமபிரானைப்போன்றவன்; மிக்கக் கல்விமான்; கேள்வியிலும் வல்லவன். சாத்விகம், இராஜஸம், தாமஸம் என முக்குணங்கள் மனிதருக்குள. அம்மூன்றும் மாறி மாறி மனிதரிடம் தோன்றிக் கிளம்பல் இயற்கையே. நமது இராமவர்மனிடம் மூன்றாவது குணமே சிற்சில சமயங்களில் மிகுந்து நிற்கும்.

மாந்தர்க்கு இனத்தின் இயல்பதாகும் அறிவு என்பது வள்ளுவனார் வாக்கு. சகவாச தோஷத்தினாலேயே அம்மன்னவனிடம் மூன்றாவது மிகுந்து நிற்கலாயிற்று. எனினும் சுமந்திரனை போன்ற மதிமந்திரி யொருவன் அவ்வேந்தனுக்கு வாய்த்திருந்தான். இது அவ்வரசனது அதிருஷ்ட வசமேயாம். அவ்வமைச்சன் பெயர் பக்திசாகரன். மதயானையைமாவெட்டிகொண்டு

மாவுத்தன் சீர்திருத்துவதுபோல் பக்திசாகரன் தனது மதிவன்மையினால் இராமவர்மனைத் திருத்திவந்தான். வந்துமென்ன?

செல்வச் செருக்கிலும் தமோ குணத்திலும் மூழ்கிவிட்ட இராமவர்மனுக்கு யாதொரு காரணமுமின்றி மதிமந்திரியின்மீது வர்மம் உதித்துவிட்டது. விழுந்த பின்ளைக்கு அரிவாள் மணை உதவுவதுபோல், தீய சிந்தைகொண்ட சில தோழர்கள் நரேந்திரனை இன்னும் தூண்டிவந்தார்கள். இது கொழுந்து விட்டெரியும் தீயில் நெய்யை ஊற்றுவதுபோலாயிற்று. பல சொல்லிப் பயனென்ன? எடுப்பார் கைப்பிள்ளையைப்போல் ஆகிவிட்டான் இராமவர்மன். அதனால், மதிமந்திரி ஆழ்ந்து செய்யும் நற்காரியம் ஒவ்வொன்றிலும் அவன் நூறு குற்றங் காணத்தொடங்கிவிட்டான். அத்தீயரும் இராமவர்மனது வர்மத்தை வளர்த்து வந்தனர். இதனை அம்மதிமந்திரி உணராமலில்லை. உணர்ந்தும், 'விதிவழியே எதுவும் நடக்கும்; நாம் என்ன செய்யக்கூடும்? நமதுகடமையைச் செவ்வனே நிறைவேற்றுவோம்', என்றே பக்திசாகரன் கருதி நடந்துவந்தான்.

இங்ஙனமிருக்க, ஒருநாள் அவ்வேந்தன் தனது மதிமந்திரியை யழைத்து, "அமைச்ச! தண்ணீரும் மூன்று முறையே பொறுக்கும். யானோ உனது கணக்கற்ற பிழைகளை இதுகாறும் பொறுத்துவந்தேன். இனிமேல் பொறுமையுடன் பொருமியிருக்க என்னால் இயலாது. ஆதலால், நீயும் உனது மனைவிமக்களும் அரையிற் கட்டியுள்ள ஆடையுடன் இக்கணமே இந்நாட்டைவிட்டு அகலவேண்டும்" என்று கட்டளையிட்டுவிட்டான்.

பக்திசாகரனோ மெய்த்திருவந்துற்றாலும், வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளமுடையவன். ஆதலால், அக்கட்டளை கண்டு சிறிதும் கண் மனங்கலங்கவில்லை, மனவமைதியுடன் அரண்மனையின் மேல்மாடியிலிருந்து கீழே இறங்கிவரத் தலைப்பட்டான். மாடியின் சுவர்கள் பளிங்குக் கற்களால்ஆக்கப்பட்டவை; படிகளோ சலவைக் கற்களால் செய்யப்பட்டவை. பளிங்குச் சுவரும் சலவைக் கல் தளமும் பொருந்திய மேல் மாடியிலிருந்து கீழே இறங்குகையில், "ஈசா! இது உனது திருவிளையாடலே" என்று கருதி வந்தான். உடனே திடீரென்று திரும்பிப் பார்த்து, அகமும் முகமும் மலர்ந்து புன்னகை கொண்டான்.

இதனைக் கண்ணுற்ற வர்மன், "ஈதென்ன விந்தை! இவனது உடைமை யனைத்தையும் பறித்துக்கொண்டு, இடுப்பிற் கட்டிய துணியுடன் இவனை ஓட்டியுள்ளோம். இவ்விதமிருந்தும், இவன் புன்முறுவல் கொள்கின்றான்! இதன் உண்மை புலப்படவில்லையே" என்று சிந்திக்கலாயினன். பக்திசாகரனது மனமகிழ்ச்சியை யூகித்தறிய முயன்றும் முடியாது போயிற்று. அருகிலிருந்த துர் மந்திரிகளும் அதனை விண்டுசொல்ல மாட்டாமல் வாளாவிருந்தனர். ஆதலின், இராமவர்மன் அம்மதி மந்திரியை விளித்து நகைகொண்ட காரணம் யாதென வினவினன். அதற்கு அப் பக்திசாகரன் பகர்வான்:—

"அரசே யான் புன்னகைபூத்த காரணத்தை யறியவேண்டுமோ? உப்பரிகையிலிருந்து கீழே இறங்கத் தலைப்பட்டதும், பின்னே யொருவர் தொடர்வதுபோல் தென்பட்டது. உடனே திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் தொடர்ந்து வரவில்லை. ஆனால் எனது நிழல்—எனது பாக்கியம்—என்னைத்தொடர்ந்து வரலாயிற்று. அதனை நோக்கியதும், 'எனது செல்வத்தைமட்டுமே பார்த்திபன் பறிக்கமுடியும், எனது பாக்கியத்தையோ விதியையோ அவரால் பறிக்க முடியாது; என் தலையில் எழுதிய பிரமனாலும் ஆகாது. ஆதலின் மனமே அஞ்சேல்' என்று கருதியே நகைத்தேன். வேறொன்றுமில்லை."

அமைச்சனது அரிய வசனத்தைக் கேட்டவுடனே இராமவர்மனது மனம் திடுக்கிட்டது. மதிமோசமும் விலகி நின்றது; நல்லறிவும் தலைப்பட்டது. தமோகுண வயத்தனாக ஆகிவிட்டபோதிலும் கல்விகேள்விகளில் நிரம்பியவனல்லவா? அவ்வசனத்தின் நியாயத்தைத் கண்டு, பழைய கலக்கம் விண்டு, புதிய விளக்கங் கண்டு, பக்திசாகரனுக்கு முன்போல் மந்திரிப் பதவியைத் தந்து மனமகிழ்ந்தான். அக்கணமே துர்மந்திரிகளான தீயரையும் தன்னயலிலிருந்து துரத்தினான்; சுருங்கச் சொன்னால் பக்திசாகரனது கூரிய மதியையும் தனது சுயபுத்தியையும் உற்ற துணையாகக் கொண்டு, நேர்மையாக அரசை நடத்தி வந்தான்.

சுபம்.

சம்சார சந்நியாசியின் விசாரம்.

By Zero.

விவாகம்.

மணமென்றால் என்ன, மணம் எவ்வளவு வகைப்படும், மணமென்பது எக்காலத்தில் உற்பத்தியாயிற்று என்ற இச்சங்கதிகளைப் பற்றி விசாரிக்கும் அதிகாரம் இதிகாசமெழுதுவோருக்கே உரியது. இத்தேசத்தில் விவாகம் எவ்விதமாய் நடக்கிறது, மற்ற தேசங்களில் எவ்விதமாய் நடைபெறுகின்றது? நல்லது எது? நாம் செய்துவருவது சரியா, அல்லது பிறர் செய்துவருவது சரியா என்பதைப் பற்றி யோசிப்பது அவசியமெனவே தோற்றுகிறது. இவைகளைக் குறித்து யோசிக்குங்கால், சில விநோதமான சங்கதிகளை நாம் பார்க்க நேரிடுகின்றன. ஆனால் மணஞ்செய்துகொள்ளுவோர் விவாகத்தைப்பற்றிய சரித்திரத்தைப் படித்தறிந்தபின்னரே மணஞ் செய்துகொள்ளுகின்றார்களெனத் தோற்றவில்லை. நான் மணஞ் செய்துகொண்டபொழுதும் விவாக சரித்திரத்தை அறியக் கொஞ்சமேனும் முயன்றவனல்ல. எண்ணிறந்த ஸ்திரீ புருஷர்களுக்கு இந்நாள்வரை விவாகமானவண்ணமே எனக்குமாக நான் கிரகஸ்தனானேன்.

நமது சாஸ்திரத்தில் எண்வகையான விவாகங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த எட்டுவகைகளில் என் விவாகம் எவ்வகையைச் சேர்ந்ததென என்னாற் சொல்ல இயலாது. நான் இதைக்குறித்து சொல்லக் கொஞ்சமேனும் திறமையற்றவனாயிருக்கிறேன். நானோ ஜாதியில் பிராம்மணன். பார்ப்பனக் கன்னிகையையே மணந்தேன். பிராம்மணர்களே இவ்விவாகத்தை நடத்திவைத்தார்கள். விவாகநிச்சியதார்த்தம்புராதன வழக்கப்படியே நடைபெற்றது. மற்ற விவாக ஹோம மந்திரங்களும் புராதன சம்பிரதாயப்படியே நடைப்பெற்றன. வேதசாஸ்திரங்களில் விற்பத்தியுள்ள புரோகிதர் சூழ்ந்திருக்க,எங்களது குலகுருவே இதற்குப் 'பிரம்மவிவாகவிதி' எனப் பெயர் கொடுத்து ஹோம ஔபாசனங்களுடன் நடத்திவைத்தார். அருகிலுருந்த வேதியர்களும் தலையை அசைத்தே வந்தார்கள். விவாக சமாரம்பங்களுக் கழைக்கப்பட்டிருந்த உற்றார், உறவினர், சிநேகர் முதலானோர் வந்திருந்து, விவாக மகோர்ச்சவத்தைக் கௌரவப்படுத்தி, தம்பதிகளை ஆசீர்வதித்து, வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம் முதலியவைகளைப் பெற்றுச் சென்றனர். விசேஷமாய் சண்டை சச்சரவுகள் உண்டாகவில்லை. விவாக தடபுடல் நாலைந்து நாட்களுக்கு இருந்தது.

எங்களது விவாகம் பிராம்மண பத்ததியுடன் நடைபெற்றதென ஜனங்கள் சொல்லுகிறார்கள். நானும் இல்லையெனச் சொல்லவில்லை. ஆனால் கொஞ்சம் சமுசயமேற்படுகின்றது. ஸ்மிருதியை யெழுதியுள்ள பெரியோர் எட்டுவகை விவாகங்களைப்பற்றிப் பகன்றுள்ளார். விவாகமாவற்கு முன்னால் நான் இவைகளைப்பற்றி நன்கு கவனித்தவனல்ல. ஆனாற் கொஞ்சநாட்களுக்குப்பிறகு ஸ்மிருதிக் கிரந்தங்களை வாசிக்கவே, என் விவாகம் எவ்வகையைச் சேர்ந்ததென யோசிக்க ஆரம்பித்தேனாயினும், யாதொரு முடிவுக்கும் வந்தவனல்ல. ஆனால் ஒன்றுமாத்திரம் உண்மை. நான் என் பத்தினியை ஏமாற்றித் தூக்கிவந்து விடவில்லை, கபடத்தாற் கொண்டுவரவில்லை, நிபந்தனைகளில் ஜயித்து மணக்கவில்லை, அல்லது லெட்டர் காரஸ்பாண்டென்ஸ் நடந்தபிறகு ஒருவரையொருவர் மனப்பூர்வமாக நேசித்து மணந்துகொள்ளவுமில்லை, அசுரன், கந்தர்வன், ராக்ஷஸன், பிசாச முதலியவர்களது விவாகங்களைப் போல் எனது விவாகம் நடைபெறவில்லை. இந்த விவாகச் சடங்குகள் யோக்கியமற்றவைகளென் நான் சொல்லவில்லை. இவைகளை நியாயமெனச் சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் அநியாயமெனவும் பகருகின்றார்கள்.

மீதியுள்ள நான்கு விவாக வகைகள் பிராம்மம், தெய்வம், ஆர்ஷம், பிரஜாபத்தியம் என்பவைகளே. இவைகளில் பிரம்மவிதியில் தீக்ஷிதர்களும் புரோகிதர்களும் கூடி எனது விவாகத்தை நடத்திவைத்தார்களென நான்முன்னரே கூறியுள்ளேன். பிரம்மவிவாகமே எல்லாவற்றிலுஞ் சிறந்தது, சிரேஷ்டமானது என்று தொன்று தொட்டு வழங்கி வருவது. இந்த தர்மங்கள் தழைத்தோங்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் விவாக மகோர்ச்சவங்களைக் கொண்டாடுவதாக ஸ்மிருதிகளிற் பெரியோர்கள் கூறியுள்ளார். ஆனால் வரதக்ஷிணை கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் இதனாற் சண்டை சச்சரவுகளுண்டாக, வாயில் வந்தபடி நிந்தித்து நிஷ்டூரமாகப் பேசுவதற்கும், முடிவில் ஒருவரையொருவர் பகைப்பதற்குங் காரணமாய் நிற்கும் இவ்விவாகத்தைப் பிரம்மவிவாகமென அழைப்பதற்கு எனக்கு வெட்கமாகவே யிருக்கின்றது. வியாபாரம், நிபந்தனை முதலியவைகளாற் பந்தப்பட்டுள்ள விவாகத்தைப் பிரம்ம விவாகமெனச் சொல்லுவதும் நியாயமாமோ?

விவாகச் சடங்குகள் வேண்டியது அனாவசியம். விவாகங்களை இந்த இந்த விதமாய் நடத்தும்பக்ஷத்தில் வீண்செலவு ஏற்படாது என்று பிரமாதமாகப் பேசிவரும் பெரியோர்களும் மற்றும் பிரபுக்களும் இதைக் குறித்து இன்னும் யோசித்தவண்ணமே இருக்கிறார்கள். நமது புராதன வழக்கங்களே சிரேஷ்டமானவைகளெனச் சொல்லிவரும் பெரியோர்களும் பலருண்டு. விவாகங்கள் வருஷா வருஷம் நடைபெற்று வருகின்றன. சென்ற இரண்டு மாதங்களாய் விவாக வாத்தியமாகிய நாகஸ்வரத்தின் மங்களத்தொனி காதில் விழுந்தவண்ணமாகவே இருக்கிறது. இவ்வருஷம் சிம்மஹஸ்தம் என்று விவாகங்கள் நடைபெறாதிருக்கின்றனவா? சர்க்காரதிகாரிகள் விவாகங்கள் நடைபெறக்கூடாதெனப் போலீஸாரை யனுப்பித் தடுக்கின்றார்களா? அல்லது பீனல்கோடுக்கு விரோதமென நியாயாதிபதியாவது தடுக்கின்றாரா? சாந்தமுடன் காரியங்கள் நடந்தேறின. பாட்டுக்கச்சேரி, சதிர், தமாஷாக்கள் முடிந்தன. நாகஸ்வரம், பாண்டு முதலிய வாத்தியங்கள் முழங்கின. தோழிப்பொங்கல், ஊர்வலமும் சரிவர நடைபெற்றன. பிராம்மண தக்ஷிணை, வந்தவர்களுக்கெல்லாம் பக்ஷத்துடன் நல்ல விருந்து, பழைய மாப்பிள்ளைகளுக்கு ஜோடி வேஷ்டிகள்,சம்மந்திகளுக்குப் புடவை,

ரவிக்கைத்துண்டுகள் முதலியவைகளும் அந்தஸ்துக்குத் தகுந்தவண்ணம் வழங்கப்பட்டன. பிரம்ம விவாகம் முடிவுபெற்றது. ஆனால் வாஸ்தவத்தில் இது பிரம்ம விவாகமாகுமா?

விவாகம் என்றால் தர்மசம்ஸ்காரமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் விவாகம் என்ற வார்த்தையின் பொருள் பிரீதியுடன் சம்பந்தஞ் செய்வதே எனப் பகருகின்றேன். அகம்பாவம், பொறாமை, பகை முதலியவைகள் குறைந்து, பிரீதி அதிகரித்து, சௌக்கியம், சுகம், சாந்தம் முதலியவைகள் ஜாஸ்தியாவதற்கு எந்த சம்பந்தம் காரணமாயிருக்கவில்லையோ, அது சாஸ்திரோக்தமாய் நடந்திருந்தாலுஞ் சரி, விதிப்படியே நடந்திருந்தாலுஞ் சரி, அதை விவாகமென நான் ஒருபோதும் அழைக்கமாட்டேன்! தர்மத்திற் கூறியுள்ளவண்ணம் விவாகஞ் செய்ய வேண்டும், நீதி தழைத்தோங்க வேண்டி நீதி சாஸ்திரத்தில் ஆக்ஞாபித்திருக்கும் வண்ணம் விவாகஞ் செய்யவேண்டுமென்று சொல்லுவதில் அர்த்தமில்லை. தர்ம பந்தம் என்றும் நீதி பந்தம் என்றும் இந்த விவாகத்தைச் சொல்வது நியாயமாகுமா? பிரீதிபந்தமே விவாகத்திற்குச் சரியான பொருள்.

விவாகம் என்பது பிரேமபந்தமே. தர்மமுமில்லை, கர்மமுமில்லை. பிரேமை அதிகரிக்கவே விவாகஞ் செய்கின்றோம். பிரேமையும், பிரேமையின் அபிவிர்த்தியும் உண்டாகவேண்டுமெனக் கருதி, சம்பந்தஞ் செய்தும் பலனில்லாவிடில் அதை விவாகமெனக்கூறுவது யோக்யமா? சிருஷ்டியில் பிரேமையுண்டு. ஈச்வரன் பிரேம மயமாகவே வியாபித்திருப்பதால், எல்லாவற்றையுஞ் சிருஷ்டி செய்துள்ளார். விவாகத்திலும் சிருஷ்டி என்பதுண்டு. விவாக சிருஷ்டியில் பிரேமை யில்லாவிடில், இச்சிருஷ்டியில்லாதிருப்பதே சிரேஷ்டமாகும்!

விவாகம் என்னும் பதத்தின்பொருள் எப்படியிருந்தபோதிலுஞ் சரி, எனது அர்த்தம் வியாகரணத்திலில்லை. தத்வஞானத்திலில்லை. சாஸ்திரங்களிலுமகப்படாது. பிரேமைமேலிட்டால் இரண்டுகுலங்கள் ஒருமித்துச் சம்பந்தஞ் செய்வதே விவாகத்தின் பொருளென நான் எண்ணுகின்றேன். ஆகவே விவாகத்தைப் பிரேமபந்தமெனப் பகர்ந்தேன், ஆனால் பதத்தின் தாத்பரியம் வேறொன்றுயிருக்கலாம். தாத்பரியத்தைக் கவனித்து நான் என்ன செய்ய விருக்கின்றது! சுகத்தைக்கொடுக்கக்கூடிய மார்க்கமுண்டோவெனவே அறியவேண்டும். வியாகரணமும் சாஸ்திரமுமெதற்காக? விவாகம் என்ற பதம் எதிலிருந்து பிறந்துள்ளது, எப்பதத்தின்றும் வந்துள்ளது, இதன் வியாகரணமென்ன என்று யோசித்துக்கொண்டிருப்பது என்னால் முடியாதகாரியமே. பசி அதிகமாயிருக்கிறது. இலையில் அன்னமும் படைக்கப்பட்டிருக்கிறது. அச்சமயம் இடத்தைவிட்டெழுந்து, நான் இலை, அன்னம் என்ற பதங்களின் அர்த்தத்தையும், பிறப்பு வளர்ப்பையும்பற்றி யோசித்துக்கொண்டிருந்தால், நீங்களென்னை என்ன நினைப்பீர்கள்?

சரி—விவாகம் என்பது பிரேமபந்தம். ஆனால் நான் என் பத்தினியிடம் பிரீதியுடனும், அவள் என்னிடம் பிரீதியுடனு மிருந்தால்மாத்திரம் போதாது. பதிபத்தினிகள் பரஸ்பரம் ஒருவரையொருவர் நேசித்திருப்பது சகஜமே. ஆனால் எந்த இரண்டு குலங்களிலும் இச்சம்பந்தமேற்பட்டதோ, அவ்விரண்டு குலங்களிலும் பிரேமைஅதிகரிக்கவேண்டும். சுகம்விர்த்தியாகவேண்டும்; சந்தோஷம் பூர்த்தியாகவேண்டும். கீர்த்திவளரவேண்டும். விவாகத்தால் இவையொன்றும் ஏற்படாவிடில், அதைப் பிரேம பந்தமென ஒருபோதுஞ் சொல்ல இயலாது. நான் என்பத்தினியிடம் பிரீதிகொண்

டும், அவள் என்னிடம் பிரீதிகொண்டுமிருப்பதிலுமென்னவிசேஷம்! இதென்ன பிரமாதமான காரியமா? பிரேமை மிகுதியால் இரண்டு குலத்தோர்கள் சம்பந்தஞ்செய்து, அவ்விரண்டு குலத்திலும் பிரேமை அதிகரிப்பதற்குக் காரணமாயிருக்கும் நாம் அதைக்குறித்துக்கொஞ்சமேனும் சிரமப்படாதிருந்தால், நமது விவாகத்தில் அவ்வளவு மங்களகரமான காரியமென்ன விருக்கிறதெனக் கேட்க நேரிடுவது நியாயமல்லவா?

பத்தினியோ தனது பதியினுடைய வீட்டின் க்ஷேமத்தை நாடித் தன் உடல், பொருள், ஆவி முதலியவற்றைத் துறக்க, பதியானவன் பத்தினியின் குலத்தைச் சார்ந்தவர்களிடத்தில் ஏன் அப்பிரேமையைக் காட்டக்கூடாது? பத்தினி பதியின் வீட்டிலுள்ளவர்களுக்கு ஊழியஞ் செய்து கொண்டிருக்கப் பதியானவன் அப்பத்தினியைச் சேர்ந்தவர்களை ஏன் அபிமானியாதிருக்கவேண்டும்? இரண்டு குலத்தையும் பதிபத்தினிகள் ஏன் ஒரே மாதிரியாகக் கவனிக்கக்கூடாது? இரண்டு குலத்தின் நன்மையை நாடி, சிநேக பாவத்தை அதிகரிக்க வேண்டி, பதிபத்தினிகள் ஏன் முயற்சி செய்யக் கூடாது?

வரதக்ஷிணை வியாபாரத்திலும், சீர்கள் கொடுப்பதிலும், பெறுவதிலும், சண்டை மனஸ்தாபங்களுண்டாக இரண்டுகுலங்களிலும் பகை உற்பவிக்கப் பெண்ணைப் பாழுங் கிணற்றில் தள்ளியாய்விட்டதென்றும், இனிக்கவலைகொள்ளுவதிற் பலனில்லையெனவுங் கண்ட பெற்றோர்களது மனம் என்ன பாடு படும்? மணமகனும் அவன் வீட்டிலுள்ளோரும் பணப்பிசாசு பிடித்து அசாத்தியமாய் ஆடிக்கொண்டிருக்கும் பொழுது, அதை விவாகம், பிரம்ம விவாகம், பிரேமசம்பந்தம் என்று எப்படிச் சொல்லக்கூடும்? விவாகம் பிரேமையாலா அல்லது பணத்தாலா? இரண்டு குலத்திலுள்ளவர்களும் சுகத்தை யடையாவிடில், அது கேவலம் சந்தான விருத்திக்கோ? விவாகம் பிரேமபந்தமா அல்லது கர்மபந்தமா?

இடுப்பொடிய வேலையும், ஊழியக்காரி, போகிக்கத் தகுந்தவள், சந்தான விருத்தி செய்யும் யந்திரம், தனத்தை அபகரிக்கச் சரியான சாதனம் இவைகளோ பத்தினியின் யோக்கியதைகள்? இதுவோ விவாகத்தின் பலன்? பதிக்காகப் பத்தினியும், பத்தினிக்காகப் பதியுமா விவாகம் என்பதின் அர்த்தம்? சீ! சீ!! எதற்காக இவ்விவாகம்?

சகோதர சகோதரிகாள்! விவாகம் மங்களகரமான காரியம். இம்மங்கள காரியம் இரண்டு குலங்களிலிருந்துஉற்பத்தியாகின்றது. தனத்தாலல்ல, தர்மத்தாலல்ல, பிரேமையினாலேயே! பிரேமை சிருஷ்டியை அலங்கரிக்கின்றது. சிருஷ்டியை விருத்தியாக்குகின்றது. நீங்களும் உங்கள் குலங்களை ஒன்று சேர்த்துப் பிரேமையை விருத்தி செய்யுங்கள். ஆசைக்காளாக வேண்டாம். பணத்தைக் கருதவேண்டாம். எண்ணிறந்த ஆசைகளுக்குள்ளாகிக் குருடர்களாயிருக்க வேண்டாம். குலத்தின் பெயரையுங் கீர்த்தியையும் முன்னுக்குக் கொண்டுவரும் பக்ஷத்தில், விவாகத்தாலுண்டான மங்களகாரியம் அபிவிருத்தி யடைவதுமன்றி, ஈச்வரனது பிரேமையும் உங்களுக்குக் கிட்டும்.

ஈச்வரன் புதிய பதிபத்தினிகளை ஆசீர்வதிப்பாராக!

(தொடரும்.)

பேயுலாவிய மனை.

வாணி.

எங்கள் பாட்டியினது போன்ற மனோதைரியமும், சமயோசிதபுத்தியும் எங்கும் காண்பது அரிதென்றே நினைக்கிறேன். புருஷர்களுக்குச் சரியாய் ஸ்திரீகளும் ஒவ்வொன்றிலும் முன் வந்து நிற்கும் இந்நாளில், அவள்மட்டும் இருந்திருப்பாளாயின், எவ்வித மிருந்திருப்பாளோ வென்று என்னால் எண்ணாமலிருக்க முடியவில்லை. பெண்டுகள் அடங்கி ஒடுங்கி உள்ளுக்குள் அடைந்துகிடந்த நாளிலேயே அவள் காலம் முற்றுப்பெற்றுவிட்டதால், அவளை விசேஷமாய் ஒருவரும் அறிய முடியாமற் போய்விட்டது. ஆனால் ஐயம்பேட்டையில் மட்டும் அவளைப்பற்றித் தெரியாதார் மிகச்சிலரே இருப்பார்களென்று நிச்சயமாய்க் கூறலாம். சோற்றுக்கும் விதியற்றிருந்த அவள் கணவர், அவளைக் கலியாணம்செய்து கொண்டது முதல் நெல்பிடித்து வியாபாரம்செய்து லக்ஷ்மீமானாகி விட்டது யாருக்குத்தான் தெரியாமலிருக்கும்? "ஏர்பிடித்தவன் என்னசெய்வான், பானை பிடித்தவள் பாக்கியசாலி" என்னும் பழமொழிக்கு எங்கள் பாட்டியாகிய லக்ஷ்மிஅம்மாள் நிதர்சனமாகிவிட்டாள். ஒரு மஞ்சள்கயிற்றில் அரைப்பவுன் திருமங்கல்யத்தை யணிந்திருந்த கழுத்தில், இருபத்தைந்துபவுனில் செய்யப்பட்ட தங்கக்கொடியில் கல்லிழைத்த திருமங்கல்யம் ஏறிற்றென்றால் அது எங்கள் பாட்டியின் அதிருஷ்டமன்றோ! கணவருடைய ஏராளமான வரும்படியைக்கண்டு மிதமிஞ்சிச் செலவுசெய்யாமல், அவள் செட்டும்கட்டுமாய்க் குடித்தனம் செய்ததினாலல்லவோ ஏராளமான சொத்துச் சேர்த்து, நிலங்களும் மெத்தைவீடுகளும் வாங்க முடிந்தது! எங்கள் தாத்தாவின் வியாபார விஷயங்களிலும் அவள் நடுவில் கலந்துயோசனை சொல்லித்தருவாளென்றும் சொல்வதுண்டு. அது எதுவாயினும், வீட்டிற்குள் அவளிட்டது சட்டம் தான்.

அவன் கணவர் அவளுக்கடங்கி நடந்தது போலவே, அவள் பிள்ளை பெண்களும் இருந்தனர். சிறு பிள்ளைத்தனமான நடவடிக்கைகளொன்றையும் அவள் பார்க்க விரும்பமாட்டாளென்பதால், வேடிக்கை விநோதத்திற்காகவும் கூட அவளொவ்வாத காரியத்தை அவர்கள் செய்யார்கள். ஊராரே அவள் வாய்க்கு அஞ்சி நடந்தார்களென்றால் வேறென்ன சொல்லவேண்டும்? வயிற்றிற் பிறந்த பெண் பிள்ளைகள் அவ்விதமிருக்கும்பொழுது, நாட்டுப்பெண்களைப்பற்றிக் கேட்கவேண்டுமோ? "ஐயோ மாமியாருக்குப் பாம்புச் செவி" யென்று அவர்கள் குசுகுசுவென்றுகூட பேசப்பயப்படுவார்களாம். எங்கள் தாத்தாஇறந்த பிறகு, இந்த ஆதிபத்தியம் இன்னும் அதிகரித்ததே யொழியக் குறையவில்லை. "குடித்தனமோ, துரைத்தனமோ"வென்று எங்கள் பாட்டி இருந்து

பார்த்ததனால்தான் இன்றும் நாங்கள் ஏக குடும்பமாய் வாழ்ந்து வருகிறோமென்பது எங்கள் அபிப்பிராயமட்டுமல்ல, அவ்வூராரும் அவ்வண்ணம்தான் நினைத்தார்கள். நடுக்கூடத்தில் நார்மடியுடுத்தி விசுபலகையின்மீதுட்கார்ந்து அவள் அதிகாரம் செய்ததை, சிங்காதனத்திலிருந்து செங்கோல் செலுத்தும் அரசனுக்குச் சமமாய்க் கூறலாம். இதோடுகூட சிறு வயதுமுதல் அவள் வெளிக்காண்பித்த மனவுறுதியும், தீர்க்காலோசனையும் அவளிடம் யாவரையும் மரியாதையுடன் நடக்கும்படிச் செய்தது. இருபத்தைந்து வயது சிறுபெண்ணாயிருக்கும்பொழுதே, தன் கணவர் வாங்கிய பெரிய மெத்தை வீட்டில் அவள் தனியே குடித்தனம் செய்ததும், மற்றும், அதில் நடந்த ஓதிசய சம்பவத்தில் அவள் நடந்துகொண்ட மாதிரியையும் இன்னும் அவ்வூரார் மறக்கவில்லை. ஐயம்பேட்டை சென்றிருக்கும் ஒவ்வொருவரும் அச்சம்பவத்தை யறிந்திருப்பார்களெனினும், அதை எங்கள் பாட்டியே சொல்லும்பொழுது உண்டாகும் உணர்ச்சி பிறரிடமிருந்து கேட்பதினால் உண்டாகாததும் தவிர பலபேர் வாய்ப்பட்ட விஷயம் உண்மைக்கு அவ்வளவாக ஒட்டியிராதென்பதினால், எங்கள் பாட்டி எனக்குச் சொன்னவிதமே, அவ்வார்த்தைகளைக் கொண்டே நானும் சொல்லுகிறேன்.

"இந்த வீடு என்னால்தான் உங்களுக்குச் சொந்தமாகியது. இப்பொழுது பெயர்கூடச் சொல்லாமல் "பெரியாத்துவர்கள்" என்று சொன்னாலே இவ்வையம்பேட்டைமுழுவதும் தெரிந்துகொள்ளும்படியான கௌரவமும் என்னாலன்றோ வந்தது! உங்கள் தாத்தா இவ்வீட்டை வாங்க ஆயிரம் யோசனை செய்தார். இதில் கடைசியாக இருந்தவன் பிள்ளையில்லாமலிறந்து போனதும் தவிர, அவனிறந்து சில வருஷங்கள் இவ்வீடு குடியில்லாமலும் கிடக்கவே இதிலொரு பேய் குடிகொண்டுவிட்டதாக ஒரு வதந்திகிளம்பிவிட்டது. இதொன்றையும் அக்காலத்திலும் நம்பாத நான் "ஆமாம்; முன் ஜன்மத்தில் செய்த பாபத்தினால் அவன் பிள்ளையில்லாமலிறந்துபோனால், அதற்கு இவ்வீடா பிணை? பேயுமிராது பூதமுமிராது. இவ்வளவுபெரிய வீட்டைச் சொற்பக்கிரயத்திற்கு வாங்கிவிடுகிறார்களென்ற பொறாமையினால், இருக்கிறவர்கள்கட்டிவிட்டகதையாகவிருக்கு"மென்று சொன்னதன்பேரில், மெய்யோ, பொய்யோவென்று இரண்டுமூன்றுமாதம் கர்ப்பமாகவும் இருந்ததினால் என் விருப்பத்தைத் தட்ட மனமில்லாமல் உங்கள் தாத்தா இதை வாங்கினார். நாங்களிங்கு வந்து ஒரு மாதம்வரையும் என்னதான் நம்பாதபோதிலும், மிகுந்த பயமாகத்தானிருந்தது. ஆனால் நாட்கள் செல்லச்செல்ல, இப்பயத்திற் காஸ்பதமேயில்லாமற்போகவே, நாங்கள் அதை அடியோடு மறந்தே போய்விட்டோம். எனக்காவது, உங்கள் தாத்தாவுக்காவது ஒருவிதமான பந்துக்களும் கிடையாதாகையால், சமயல் முதலானது செய்யும்பொருட்டும் பெரியவீட்டில் தனித்திருக்கப் பயத்தினாலும் அப்பொழுதுதான் முதன் முதல் நம்மாத்தில் சமயற்காரிகள் அமர்த்தப்பட்டார்கள். இராக்காலத்தில் பண்ணையாட்களும், வியாபாரத்தை மேற்பார்த்துவந்த ஒரு காரியஸ்தனும் வந்து படுத்துக்கொள்ளுவார்கள். இப்படியிருக்கையில், ஒருநாள் கும்பகோணத்திலிருந்து யாரோ உத்தியோகஸ்தன் ஒருவன் இந்த ஊருக்கு வந்தான். உங்கள் தாத்தா ஊருக்குப் பெருத்தவராயிற்றே. உடனே அவனை விருந்துக்கழைத்தார். அன்று அவர் செய்த தடபுடல் எனக்கு இன்றுதான் போலிருக்கிறது. அவனோர் ராயன். பிடி மீசையும் தானுமாக வந்துசேர்ந்தான். ஆசார உபசாரமாய்ச் சிறிது பேசியிருந்து யாவரும் சாப்பிட உட்கார்ந்

தார்கள். பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது "காரியஸ்தன் ஜகந்நாதன் எங்கே? அவனும் இங்கேயே சாப்பிட்டு விடலாமே," என்று உங்கள் தாத்தா சொல்ல அவனைக் கூப்பிடச் சென்ற சமையற்கார அம்மாள் கொல்லைப்புறமாக அலறிக்கொண்டு ஓடிவந்து சமையலறையில் விழுந்தாள். எங்கு இந்த அலறலைக்கேட்டுச் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள் பாதியிலெழுந்துவிடும்படியாக விடுமோவென்று என்னபாடுபட்டும் அவளை இலகுவில் சமாதானம் செய்வது அசாத்தியமாயிருந்தது. ஏதோ "பேய், பிசாசு"என்றுளேயொழிய வேறொன்றும் கூற அவளாலியவில்லை."

"அப்படியானல் பேயிருந்ததுவாஸ்தவம்தானு"வென்று நடுவில்நான் நடுக்கத்துடன் கேட்க "அவசரப்படாதே. முழுவதும்கேள்" என்று எங்கள்பாட்டி மேலே சொல்லத்தொடங்கினாள். "பிசாசு என்று கேட்டமாத்திரத்திலேயே எனக்கு நடுக்கமுண்டாகி நெற்றியில் முத்துமுத்தாய் வியர்வை அரும்பிவிட்டது. இதற்குள் அறைகுறையாய்ச் சந்தேகம்கொண்ட உங்கள் தாத்தா விரைவில் சாப்பிட்டெழுந்து, வந்த விருந்தினரையும் தாம்பூலம் கொடுத்தனுப்பி, உள்ளேவந்து நடந்த சங்கதியை விசாரிக்க அப்பொழுதுதான் சற்றுபேச சக்திவாய்ந்த அச்சமையற்கார அம்மாள், தான் ஜகந்நாதனைத் தேடிச் சுற்றிவருகையில், கொல்லைவாயற்படியண்டை ஓர் உருவம் தலைமுதல் கால்வரை ஆட்டு மயிர்போன்ற மயிர் வழிய நின்றதென்றும், அதைக் கண்டு தான் நடுநடுங்கி யலறவே, அது அவ்விடத்திலேயே மறைந்து விட்டதென்றும் கூறி மறுபடியும் அவ்வுருவத்தைக் காண்பது போலவே நடுங்கினாள். "கொல்லை வாயற்படி யண்டைதானே, சரிதான். அது அச்சுண்ணாம்புத் தூணைத்தவிர வேறொன்றுமில்லை" என்று அவர் அலட்சியமாய்க்கூறியதைக் கேட்டதும், அதுவரையும் பயத்தினால் பீடிக்கப்பட்டிருந்த நானும், இருக்கலாமென்று சற்று நிம்மதியடைந்து பெரு மூச்சுவிட்டேன். ஆனால் அந்த அம்மாள் மட்டும் அன்று முதல் சூர்யன் அஸ்தமிக்க ஒரு நாழிகை யிருக்கும்பொழுதே கொல்லைப்புறம் செல்வதை அடியோடு விட்டு விட்டாள். சில நாட்கள் செல்லுவதற்குள், இரவில் படுத்துக்கொள்ளும் ஆட்களில் இரண்டொருவரும் அதைக்கண்டதாக ஒரு வார்த்தை கிளம்பி ஜகந்நாதன் தவிர மற்றவர் யாவருக்கும் இதே பேச்சாகி விட்டது. அவன் மட்டும் அதை உண்டென்றுவது இல்லையென்றுவது சொல்ல முன்வரவே யில்லை. அவர்கள் ஒவ்வொருவராய் நான் பார்த்தேன் நீ பார்த்தாயென்று சொல்லச் சொல்ல எனக்குப் பயம் அதிகரித்த போதிலும் நாமே மூளைந்து வாங்கின வீட்டை விட்டு நாமாகவே ஒருபொழுதும் வெளிப் புறப்படக் கூடாதென்று தீர்மானித்துச் சும்மா விருந்தேன்.

"ஒரு நாள் உங்கள் தாத்தா ஏதோ காரியமாகக் கும்பகோணம் போகவேண்டு மென்று போனார். வர ஒருக்கால் அதிக நேரமாகலாம் என்று அவர் சொல்லிச் சென்றதின் பேரில் இரவு சாப்பாடு கழிந்ததும், அவர் வருகையை எதிர் நோக்கிச் சிறிது விழித்திருக்கவெண்ணி, ஏதோ கொஞ்சம் எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியுமாதலால், குத்து விளக்கைத் தூண்டி விட்டு அதனருகில் ராமாயணத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன். கதவுகள் யாவும் சரியாகப் பூட்டப்பட்டு வேலைக்காரிகளிருவரும் அறை வாயிற்படி யண்டையே படுத்துக் கொண்டிருந்ததால் பயத்திற் கிடமில்லாமலிருந்தது. புஸ்தகத்தின் மீது மனதைச் செலுத்தி ஊக்கத்துடன் படிக்கத் தொடங்கினேன். அப்படி எவ்வளவு நேரம் இருந்தே

னென்பது எனக்கே தெரியாது. திடீரென்று பெரு மூச்சு விட்டதுபோலொரு சப்தமுண்டாகத் திடுக்கிட்டுத் தலைநிமிரவும், உடல் முழுவதும் மயிர் கூச்சலுண்டாய் வியர்வை ஆறாய்ப்பெருக, இன்ன செய்வதென்ற உணர்ச்சியற்றவளாய் ஸ்தம்பித்து விட்டேன். தலை முதல் கால்வரை வெண்மையான மயிர் வழிய முகம்மட்டும் மனித முகமாயும் கைகால்கள் ஆட்டினுடையது போலுமிருந்த ஒரு உருவம் அவ்வறையிலிருந்த பழைமையான முக்காலி யொன்றில் உட்கார்ந்து என்னை நோக்கியிருக்கக் கண்டேன். என் இருதயம் அடித்துக் கொள்ளுவது நின்று பிராணன் போகும் ஸ்திதியிலிருந்த தென்றே தோன்றிற்று. பயத்தில் என் கர்ப்பம் சிதைவுராமற்போனதும் ஆச்சரியந்தான். நான் பார்த்திருக்கும் பொழுதே அவ்வுருவம் மெள்ள எழுந்து அங்கு படுத்திருந்த வேலைக்காரிகளைத் தாண்டிச் செல்ல அதுவரையில் உயிரிழந்தவள் போலிருந்த நான் என்னுணர்வு திரும்பி, மார்பு படபடவென்று அடித்துக்கொள்ள, அவ்வுருவம் எங்கு செல்லுகிறதென்பதைச் சற்று உற்று நோக்கினேன். அது சமையலறையில் நுழையவே தற்சமயம் திடீரென்றுண்டான தைரியத்தினால் எழுந்து அது சென்ற அறையின் கதவை வேகமாய் வெளிப்புறம் தாளிட்டதும் உள்ளிருந்தும் "ஐயோ மோசம்" என்றொரு மனிதக் குரல் மெதுவாய்க் கேட்டது. அதனால் என் தைரியம் இன்னும் அதிகரிக்க ஆட்கள் யாவரையும் உள்ளே கூப்பிடச் செய்தேன். அவர்கள் மத்தியில் ஜகந்நாதனை மட்டும் காணோம். சமையலுள்ளே செல்ல அவர்கள் முதலில் சிறிது யோசித்தபோதிலும், பெண் பிள்ளையான என்னுடைய மனோ திடத்தினால் தூண்டப்பட்டு ஆளுக்கொரு தடியுடன் கதவைத் திறந்து உள் நுழைந்தார்கள். அவர்களனைவரையும் ஏககாலத்தில் தடியும் கையுமாய்க்காணவே, ஒரு மூலையில் ஒதுங்கியிருந்த அவ்வுருவம் "என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்" என்று வெகு தீனமாய்க் கதறிற்று. இவ்வார்த்தைகளைக் கேட்டு அச்சம் பறந்தோடிப்போய் அவர்கள் மிகுந்த வீராவேசத்துடன் அதனிடம் செல்வதைத் தடுத்து "நீ யார்? எதற்காக இவ்விதம் பயமுறுத்தினாய் என்பதைக் கூறினால் விட்டுவிடுவோம்" என்று நான் சொல்ல மறு நிமிஷமே மேலே போர்த்திருந்த ஆட்டுத் தோலைக் களைந்து மிகுந்த வணக்கத்துடன் ஜகந்நாதன் எனது கால்களில் விழுந்திருக்கக் கண்டேன். முதலில் அடைந்த திகிலைவிட இப்பொழுது பதின்மடங்கதிகமான ஆச்சரியமும் திகைப்பும் எனக்குண்டாயின. அவனை இவ்வபூர்வ நடத்தையின் காரணத்தை விசாரிக்க, இவ்வீட்டின் சொந்தக்காரன் பிள்ளையில்லாமலிறந்ததும், அவன் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள யாரும் முன் வாராததினால், அதை இவ்வீட்டிற்குள்ளேயே புதைத்து வைத்திருக்கலாமென்ற தீர்மானத்துடன் அதை எவ்விதமாவது அடைய ஆசையுற்றுத் தான் இரவில் அதை தேடி யறியச் சாமான்கள் வைக்கு மறைக்கும் கொல்லைப் புறத்திற்குமாக ஒரு சுரங்கவழி செய்ததாகவும், அதை ஒருவரும் சந்தேகிக்காமலிருக்க இவ்வேஷத்தையணிய, அதை ஜனங்களும் நம்பி மோசம் போகவே, சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, நாங்கள் இவ்வீட்டை வாங்கவும் தன் முயற்சி யாவும் வீணாகும்போலத் தோன்றவே எங்களைப் பயமுறுத்தி வீட்டை விட்டுப் போகச் செய்ய இவ்விதம் நேரிலேயே தென்பட்டு, முடிவில் என் தைரியத்தினால் அகப்பட்டு அவமானமடைந்ததாகவும் கூறி அவன் விம்மிவிம்மி அழுதான்.

"தானாகவே புதையலிருப்பதாய் எண்ணி அதற்காக அவன் பட்ட சிரமத்தை நினைக்க

எனக்குச் சிறிது பரிதாபமே யுண்டாயிற்று. "நீர் பாடுபட்டுச் செய்திருக்கும் சுரங்கவழியாகச் சென்றிருந்தீரானாலும், உம்மை ஒருவரும் அறிந்திருக்கமாட்டார்களே" யென்று நான் சொல்ல, "உங்கள் சமயோசித புத்தியை யறியாது நான், சாமானறையில் நுழைந்து மறைந்தால், பின்பு நீங்கள் பயம் தெளிந்து பரிசோதிக்கும்பொழுது அச்சுரங்க வழியைக் கண்டுபிடித்துவிடக்கூடுமே யென்பதற்காகச் சமையலறையில் நுழைந்து உங்களுக்குப் போக்குக் காட்டிப் பிறகு சுரங்க வழியாக ஓடிவிடலாமென்றெண்ணினேன்" என்று அவன் பதிற் கூறியதைக் கேட்டு என் முகத்தில் தோன்றிய சிறு புன்னகையைக் காண, அவன் பின்னும் அதிகமான வெட்கமும் பயமுமுற்றவனாய் யஜமானரிடம் சொல்லித் தன்னை க்ஷமிக்கவேண்டுமென்று வேண்டினான்.

"அன்றிரவு நாங்களொருவரும் சற்றும்கண் மூடவில்லை. பொழுதுவிடிந்து, வீடுதிரும்பின உங்கள் தாத்தா, நடந்தவை யாவையுமறிந்து, அவனை அவ்வூரைவிட்டுச் சென்று வேறு எங்காவது பிழைக்கும்படி சொல்லி, கையில் சொற்ப திரவியமுமுதவி அனுப்பினார். அப்புறம் அவன் என்னவானானோ தெரியாது" என்று எங்கள்பாட்டி ஒரு கதைபோன்ற இச் சம்பவத்தைச் சொல்லிமுடித்தாள்.

அதைக்கேட்கும் ஒவ்வொரு சமயமும் எங்கள் மனதிலுண்டாகும் உணர்ச்சி சொல்லத்தரமல்ல. அவள் மனோதிடத்தையும் புத்தியையும் கண்டு பெரும்வியப்பு ஒருபக்கம் தோன்ற, அவளால் எங்கள் குடும்பமனுபவிக்கும் செல்வாக்கை யெண்ணும்பொழுது என்றும் மறவா நன்றி பாராட்டலும் ஒருபக்கம் எழுகின்றது. இவையாவற்றிற்கும் பதிற் கைமாறு நாமென்ன செய்யப்போகிறோம்? ஆனால் தன் கண்முன்னிலையில் நாம் சௌக்கியமாய் வாழ்ந்திருப்பதையே அவள் பெரும் பதிலுபகாரமாய்க் கருதுவாளன்றோ! இவ்வெண்ணம் தோன்றியதும், அவள் தந்நலமற்ற அபிமானத்திற்காக நாங்கள் அவளை இன்னும் பதின்மடங்கு உயர்வாகக் கொண்டாடினோமென்றால், அதில் பெருவியப்பென்ன?

ஜோதிடம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்).

தர்ம நியாயமான 5 கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0. ஒரு வருஷம் மாதவாரி பலன் ரூ. 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமந்உபாஸி சடகோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியடிகள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—11—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்திருந்தார். அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியபானம் செய்து கொள்ளுகிறோம்). மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சனேயஸ்வாமி ஜோதிடாலயம்,

திருத்தணிகை, சித்தூர் ஜில்லா

வரதக்ஷிணை.

ஸ்ரீமதி சீதம்மாள்.

'வரதக்ஷிணை' என்னும் மாயப்பிசாசு நம்மவரை நன்றாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. இது தினே தினே விருத்தியாகிறதே யொழிய நிற்கும் வழியைக் காணோம். பெண்களைப் பெற்ற பெற்றோர்கள் படும்பாடு அம்மம்ம! ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலும் அளவிட முடியாததாயிருக்கிறது.

'ஐந்து பெண்கள் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்,' என்பதோடு, இப்பொழுது 'ஐந்து பிள்ளைகள் பிறந்தால் ஆண்டியும் அரசனாவான்' என்பதைச் சேர்க்கலாம்.

பெண்ணைப்பெற்று ஆயிரம் பாடுபட்டுக் கண்ணினுட் கருமணிபோல் வளர்த்து மாசற்ற மல்லிகைக்கொடிபோன்ற பெண்ணை சர்வாலங்கிருதபூஷிதையாய்த்தாரைவார்க்கும் பெற்றோர்களிடமிருந்து வாய்கூசாமற் கொடுத்துவைத்தவர்கள் (கடன்காரர்கள்) போலப் பணம் வாங்குகிறதற்கு 'எதிர்ஜாமீன்' என்று அதற்கு ஒரு புதியபெயரும் இட்டுவிட்டார்களே! எதற்காக ஜாமீனோ தெரியவில்லை. பெண்ணைச் சரிவர வைத்துக்கொள்ளும்படி பிள்ளை வீட்டாரிடமிருந்து ஜாமீன் வாங்கினாலாவது ஒருவாறு நியாயம். ஊன்றிப் பார்ப்போமானால், முற்காலத்திலிருந்தது எவ்வளவோ நன்றாயும், நியாயமாயுமிருந்தது. தற்கால நாகரிகம்போல விவாக முறையும் தலைகீழாக மாறிவிட்டது.

பெண்ணைப் பெற்றோர்கள் தம் கௌரவத்தை யாவையும் விட்டு, 'என் பெண்ணை, என் பெண்ணைக் கொள்ளுவாருண்டோ' என்கிறதுபோல அகந்தை பிடித்த பிள்ளைகளின் பெற்றோர்களிடம் போய்க்கேட்டு, அவர்களுடைய திரல்காரங்களுக்கும், அவர்களால் இடப்படும் நிபந்

தனைகளுக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது. அவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் கணக்கில் அவர்கள் வருகிற வண்டிச்செலவுகள், அவர்களுடைய பெண்கள், மாப்பிள்ளைகள் முதலியவர்களுக்கு வெகுமதி செய்யவேண்டிய செலவுகள், தவிரப் பித்தளை, வெள்ளி, தங்கப் பாத்திரங்கள், அதைத் தவிர மாப்பிள்ளை பெண்ணுக்குச் செய்யவேண்டிய சீர்வரிசைகள், இவை யெல்லாம் தவிர, அவர்கள் கையில் ரொக்கம், இன்னும் அவர்கள் பெண்ணைத் தன் வீட்டிற்கழைப்பார்களே, 'கிரஹப்பிரவேசம்', அதன் செலவுவரையில் குறிப்பிடப்பிட்டிருக்கும்.

வாய் கூசாமல், நாவு நடுங்காமல் கிரஹப்பிரவேசத்திற்குளன்றுகூடச்செலவு சொல்லுகிறார்களே. அவர்களுடைய மனச்சாட்சிதான் சம்மதிக்கிறதே! இவற்றையெல்லாம் கேட்பதற்கு அவர்களென்ன, கடன்காரரா !

நம்முடைய மகனுக்கு வாழ்க்கைத்துணைவியாகவும், சுக துக்கங்களைப் பாதி பகிர்ந்து அனுபவிக்க வேண்டியவளாகவும், தன் ஆயுட்கால முழுவதும் அவ்வீட்டின் குடும்ப பாரத்தை வகிக்கவேண்டியவளாகவும், எல்லாவற்றிற்கும் தயாராகவிருக்கும் பெண்ணை முதன்முதல் நம் வீட்டிற்கு மங்களகாமாய் அழைக்கும்பொழுது, அப்பெண்ணை நாம் சன்மானித்துக் கௌரவிக்கவேண்டாமா ? அந்தச் செலவிற்குக்கூட பெண்ணின் தகப்பனைக் கேட்பது என்ன நியாயமோ ; இந்த எண்ணத்தை அவர்கள் நினைப்பதேயில்லையென்று தோன்றுகிறது.

சிலருக்குப் பணம் வாங்கும் வழக்கம் சரியல்லவென்று தெரிந்திருந்தும், அக்குற்றத்தைத்தன்மீது வைத்துக்கொள்ளாமல் வீட்டிலிருக்கும் ஸ்திரீகளின்மேல் சுமத்திவிடுகிறார்கள்.

'எங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது. நாங்கள் அவ்விஷயத்தில் பிரவேசிக்கிறதேயில்லை. எல்லாம்வீட்டு ஸ்திரீகளின் பொறுப்பு' என்று சொல்லி அவர்களைத் தூண்டிவிடுகிறார்கள். படித்த பட்டதாரிகளும், பிரசங்கமேடையில் நின்று பேசுகிறவர்களும் படிப்புடனும் நின்றுவிடுகிறார்களேயொழிய செய்கைகளால் ஒன்றும் செய்யமாட்டோ மென்கிறார்கள்.

परोपदेशपाण्डित्ये शिष्टाः सर्वे भवन्ति वै ।
विस्मरन्तीह शिष्टत्वं स्वकार्ये समुपस्थिते ॥

என்பதுபோல ஒவ்வொருவரும் இப்படியேயிருந்தால் விடியுங்காலம் எப்பொழுது வருமோ !

சில தனிகர்கள், 'எங்களுடைய பிள்ளைக்கு வரதக்ஷிணையே வாங்கமாட்டோம்' என்று மிகவும் கௌரவமாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய திட்டம் முன் சொன்னவர்களைத் தோற்கடித்துவிடும். விவாகம் நிச்சயிக்கும் சமயத்தில் அவர்கள் சொல்லும் நிபந்தனைகளாவது:—

எங்களுக்குக் கையில் ஒன்றும் பணம் கொடுக்கவேண்டாம்.

பிள்ளைக்கு ரூ.3000-க்குக் குறையாமல் ஒரு ஜோடி வைரக்கடுக்கன், குறைந்தது ரூ.600க்கு ஒரு வைரமோதிரம், இன்னம் தங்கக் கெடியாரம், தங்கச் சங்கிலி, உடுப்புகள் இவைகள் இருந்தாற் போதும் என்பார்கள்.

அவர்கள் சொல்லுவதைக் கணக்குப் பார்த்தால்பிள்ளைக்குமாத்திரம்குறைந்தது ரூ.10,000 ஆகிவிடும். இதைத்தவிரப்பெண்ணிற்குநகைகள் சீர்வரிசைகள் முதலியன இருக்கின்றன. இது மாத்திரமா? விவாகத்திற்கு வாத்தியம் வாசிப்பவர்கள், பாட்டுக்கச்சேரிக்கு ஏற்படுத்துகிற வித்துவான்கள் எல்லாம் பிள்ளை வீட்டுக்காரர்கள் சொன்னவர்களைத்தான் ஏற்படுத்தவேண்டும். அவர்களுக்கெல்லாம் சன்மானம் செய்வதென்னமோ பெண் வீட்டுக்காரர்களுடையது. பணம் செலவழிப்பதற்குமாத்திரந்தான் இவர்கள் போலும்.

அப்படி எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு பிள்ளை வீட்டாரின் மனம் போல நடந்து கொண்டாலுங்கூட அவர்கள் குறை கூறுவதிற் கிஞ்சிற்றும் குறைவதில்லை. பெண்களின் பெற்றோர்களுக்கு சம்பந்திப் பெயர்களைப் பார்க்கவும், பேசவும் கூட வெறுப்பாகப் போய் விடுகிறது. விவாகச் சடங்குகள் சந்தோஷமாகவும், அன்பாகவும், ஒருவருக்கொருவர் பரிவாகவும் இருப்பதற்குப் பதிலாக இந்த 'வரதக்ஷிணை' என்னும் ஒரு பேயால் பிடிக்கப் படுவதினால் ஒருவருக் கொருவர் துவேஷமும், கோபமும் மேலிடுகின்றன. ஒரு பெண்ணிற்கு விவாகமாகிப் பிள்ளை வீட்டுக்காரர்கள் ஊர்போகுமுன் பெண் வீட்டுக்காரர்கள் அலுத்துச் சலித்துப் போய் விடுகிறார்கள். இப்படியெல்லாமில்லாமல் ஒருவருக் கொருவர் அன்போடும், ஆதரவோடும், சந்தோஷமாகவும் இருந்து விவாகத்தை நடப்பித்துச் சிறப்பிக்குங் காலமும் வருமோ என்று ஏங்கவேண்டியிருக்கிறது.

எல்லோரையும் சமனாக பாவிக்கவேண்டும், சுதந்திரம் வேண்டும், சுய ஆட்சி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் கேவலம் 'பெண்ணைப் பெற்றவர்கள் தாழ்வு, பிள்ளையைப் பெற்றவர்கள் உயர்வு' என்று சிலர் அடிக்கடி 'பெண்ணைப் பெற்றவர்கள் தாழ்ந்துதான் போகவேண்டும்' என்று சொல்லுகிறார்களே. என்னே! இவர்கள் சொல்லுவதின் தாத்பரியமோ! பெண்ணைப் பெறுகிறவர்களென்று ஒரு வகுப்பு, பிள்ளையைப் பெறுகிறவர்களென்று ஒரு வகுப்பு இருக்கிறதா? அப்படியிருந்தாலும் அவர்கள் சொல்லுவது கொஞ்சம் நியாயம். பெண்ணைப் பெறுகிறவர்கள் பிள்ளையையும், பிள்ளையைப் பெறுகிறவர்கள் பெண்ணையும் பெறவில்லையா? இதை ஏன் யோசிக்கமாட்டோமென்கிறார்களோ ? இந்த 'வரதக்ஷிணை' ஒழிந்து நாமும் கண்ணுற் காணுவோமா? நமக்குள் இவற்றை யெல்லாம் ஒழித்து, நம் முன்னோர்கள் முறைமையை அனுஷ்டித்து, பவித்திரமான விவாகத்தை நடப்பித்துப் புனிதமாகும்படி எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக!

சங்கீதம்.

(மிஸ் கே. குணரத்தினம் நாயுடு.)

எல்லா சுகானுபவம் இவ்வுலகத்திலிருந்து சங்கீதமெனப்படும் இனியதோர் செல்வமில்லாவிடில் உலகம் சிறப்பிக்கவே சிறப்பிக்காதென வித்வான்களும் கலைஞர்களும் கூறியுளர். சங்கீதத்தில் ஒருவித இரட்சாபந்தனமிருக்கிறதென உலக கவிராய விக்கியாதராகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) "Music hath charm" யென எழுதியிருக்கிறார். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த செல்வத்தை யாவரும் கைப்பற்றி அதனுள்ளடங்கியிருக்கும் மதுரமான தத்துவத்தைமேற்கொள்ளவேண்டியது. சங்கீதம் மானிடர்களுக்கு மாத்திரமே இசைவானதென்றில்லை. சுவாமிகட்கும் தேவர்கட்கும் மிக்க ஆவசியகமான பொருளிதுவே. நம் மனம் எவ்விதத் துயரத்திலும், சங்கடத்திலும் கலக்கமுற்றிருந்தால் சிறிது சங்கீதம் செவிக்கெட்டினால் எச்சங்கடத்திலமிழ்ந்திருந்தபோதிலும் அச்சங்கீத ஒலியானது தக்ஷணமே யாவற்றையும்

போக்கித் துன்பப்பட்டிருக்கும் மனதிற்கு மகிழ்ச்சியும் களிப்பும் தருகிறது. சங்கீதத்தின் மகிமையும் சுபாவத்தையுமென்னென்றெழுதுவது? இவ்வித அரிய குணங்கள் பொருந்திய செல்வத்தைச் சிருஷ்டித்த இறைவனுக்கு நாமெவ்வாறு கைம்மாறு செய்வது?

சகல வைபவத்திற்கும் சங்கீதமே அலங்காரமாயிருக்கிறது.

ஒவ்வொரு வகுப்பினருக்கும் வெவ்வேறு மாதிரியான சங்கீத ருசியிருக்கிறது. அன்னியருடைய வாத்தியம் நமக்குப்பிரியவீனமாயிருக்கும். அவ்வண்ணமே நம்முடையதும் அவர்களுக்குத் தோன்றும். தற்போது ஆங்கிலேயர்கள் சங்கீதம் வாசித்து Wireless யென்னும் கம்பியில்லாத் தந்தியின் மூலமாக வெளியாக்குகிறார்கள். ஆகா! உலக வியப்புக்கேற்றவாறு இந்நவீன அதிவினோத கருவிக்கு ஒருகண நேரத்திற்குள் பரவும்படியான சக்தி ஏற்பட்டுளது. எத்தனை மைலுக்கப்பாலிருந்தாலும் அவரவர்கள் இல்லத்திலேயே சங்கீதம் கேட்கிறது. என்ன விபரீதம்! தற்கால விந்தைகள் யாவற்றையுந் திரட்டி. எழுதுவோமானால் எத்தனை "சிந்தாமணி"யின் இதழை விழுங்காது?

சங்கீத வாத்தியத்தில் உலகத்திற்கே தேர்ச்சியடைந்தவர்கள் இட்டாலியர்கள் (Italians) என்றும், கீதத்தில் இனிமையான தொனியுடையவர்கள் அத்தேசத்து ஸ்திரீகளேயெனவும் ஆங்கிலேயர்கள் மதிப்பிடுகிறார்கள். நமக்கோ அங்ஙனம் விளங்கவில்லை. நம்மவருடைய சங்கீதமும் இந்திய ஸ்திரீகளினினிய குரலோசையும் வெகு இன்னிசையாயும் மேன்மையாயுமிருக்கிறது.

இவ்வுயர்ந்த குணாதிசயங்களமைந்திருக்கும் சங்கீதம் மானிடர்களுக்கு மனோற்சாகத்தையுண்டாக்கும் வல்லமையமைத்துப் படைத்த கடவுளுக்கு நாம் மனமறிந்த வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

குழந்தைகளின் பால் கட்டியும் அதன் சிகிச்சையும்.

ஜநாப் ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹெப்.

இத்தென்னாட்டில் சிசுக்களுக்குப் பால் கட்டியென்னும் ஒரு நோய்வந்து குழந்தைகளைக் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கிறது. பால் கட்டியென்று ஒருகுழந்தைக்கு வந்துவிட்டால் அது பெரும்பாலும் கைவிடும்படியாகவே நேர்ந்துவிடுகிறது. சில வைத்தியர்கள் கட்டியில்லாத குழந்தைகளைப் பார்த்து கட்டியிருக்கிறதாகச் சொல்லி ஏதோ ஒரு மருந்தைக் கொடுத்துக் குணப்படுத்திவிட்டதாகப் பெயருண்டாக்கிக் கொள்கிறார்கள். பெரும்பாலும் இவ்வகைசூட்சி நடக்காமலில்லை. ஆனால் கட்டியில்லாத குழந்தைக்கு, கட்டியென்றே மருந்துகொடுப்பதனால் அக்குழந்தைக்கு அதுவே அபாயமாக முடிகிறதுண்டு. இது நிற்க, இந்நோயை நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் இரண்டு வகையில் இவ்வியாதி சம்பவிக்கிறது என்று சொல்லலாம். ஒன்று சிசு சாப்பிடும் பாலின் தோஷத்தினாலேயே சம்பவிக்கிறதென்றும், இப்படிப் பாலினால் சம்பவிக்கிற வியாதி குணப்பட்டுவிடுமென்றும், மற்றொன்று சாபத்தினால் சம்பவிக்கிறதென்றும், இப்படி சாபத்தினால் சம்பவிக்கிறது குணப்படாதென்றும் சொல்லலாம். முதலாவது பாலினால் சம்பவிக்கும் வியாதியைப்பற்றியும், அதற்குச் சிகிச்சையும் சொல்வோம். சாதாரணமாக எவ்வகைப் பாலினும் மோர் போன்ற புளிப்பு வர்க்கத்தைச் சேர்த்து வைத்தால் அப்பாலானது தயிராக மாறிவிடும். மேற்படி தயிரைத் துணியிற்கட்டித்

தொங்கவிட்டால் தயிரில் உள்ள ஜலமெல்லாம் சொட்டுச் சொட்டாக வடிந்ததும், துணியில் சக்கை மாத்திரம் நின்றுவிடும். அத்தயிரின் சக்கையை நெருப்பில் எரித்தால், அல்லது ஓட்டில் வைத்துப் புடமிட்டால், அச்சக்கையானது ஒருவகை வெண்கலம்போல் கெட்டியாய் ஓசை வரும்படியான சற்று சிவந்த ஒரு வஸ்துவாக ஆகிவிடுகிறது. தயிரின் சக்கையில் உள்ள ஜலம் நெருப்பின் உஷ்ணத்தால் எரிந்துவிடவே, அச்சக்கையானது ஒருவகை உலோகமாக மாறிவிடுகிறதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இது நிற்க, மேற்கண்ட தயிரின் சக்கையிற் கொஞ்சம் சுண்ணாம்பு சேர்த்து நன்றாய்க் குழைத்து, உடைந்த பீங்கான், கிளாஸ், முதலானதில் தடவி ஒட்டவைத்தால் காய்ந்த பிறகு கெட்டியாக ஒட்டிக்கொள்ளும். பிறகு எவ்வகை ஜலத்திற்கும் கரையாது. இதே விதமாய்த்தான் குழந்தையின் வயிற்றிற் பால் கட்டி சம்பவிக்கிறதையும் இனி கவனியுங்கள். குழந்தையானது பாலைச்சாப்பிட்டதும், அப்பாலானது அக்குழந்தையின் வயிற்றுக்குச் செல்லுகிறது. உஷ்ணத்தால் மலச் சிக்கல் உண்டாகியிருக்கும் குழந்தையின் வயிற்றில் புளிப்பு அதிகமாயிருக்கும். மேற்படி புளிப்பு பாலிற் பட்டதும் மேற்படி பாலானது தயிராக மாறிவிடும். மலச் சிக்கல் உள்ள குழந்தைக்கு அடிக்கடி அதிகமாக நீர் பிரியக்கூடிய சுபாவமானதால், நீர் அதிகம் பிரியப் பிரிய, தயிரில்உள்ள ஜலமெல்லாம் வெளிப்பட்டு தயிரின் சக்கைமாத்திரம் குடலில் தங்கிவிடும். இன்னும் அதிகப்படி உஷ்ணத்தால் மேற்படி சக்கை சுண்டச் சுண்ட வெண்கலம்போல் கெட்டிப்படும். பின்னும் குடலில் ஜீரணமாக்கவேண்டிய உஷ்ணம் அவ்விடத்தைவிட்டு வேறுபட்டுத் தேகத்திலுள்ள எலும்புகளில் தாக்கி, உருகச் செய்து சில சமயம் நீருடன் கலந்து மோரைப்போல் நீர் பிரியும். அல்லது தெளிவாக நீர் தோன்றினாலும் காய்ந்தவிடத்தில் சுண்ணாம்புபோல் வெளுத்துவிடும். எலும்பானது சுண்ணாம்பின் அம்சமானதால், சுண்ணாம்பின் காரம் குழந்தை வயிற்றிற் தங்கியிருக்கும் தயிரின் சக்கையிற் சேர்ந்து, கிளாஸ், பீங்கான் முதலானவை ஒட்டிக்கொள்ளுமென்று முன் சொல்லியிருக்கிறோமே, அதுபோல் வயிற்றில் எவ்விடத்திலாகிலும் ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்து ஒட்டிச் சில்லைப்போல் கெட்டிப்படுத்திவிடும். இதுதான் பாலால் உண்டாகும் பால்கட்டி எனப்படுவது. இனி இதற்கு சிகிச்சை:—அவரவர்களின் குடும்பத்தில் குழந்தைகளுக்குப் பழக்க வழக்கமாய்க் கொடுத்து வரும் பேதி மருந்தைக் கொண்டே இதை நிவர்த்தியாக்கலாம். ஆனால், இவ்வியாதிக்குக் கீழ்க்கண்டபடி கொடுக்கவேண்டும். வெள்ளாட்டின் பால் அரைச்சேர் ஒருசேர் கிடைத்தவரையில் சேகரித்துக் கொள்ளவேண்டும். அதை ஒரு புது மண் பாத்திரத்திற் போடவேண்டும். பானையின் வாய்க்கு வெள்ளைச் சல்லா வஸ்திரத்தால் வேடு கட்டவேண்டும். அவ்வேட்டின்மேல் ஒரு பிடிக்குள்ளடங்கியவளவு சல்லாத்துணியை சுருட்டி வைக்கவேண்டும். அதன்மேல் ஒரு புது மண்பானையால்மூடிப் புட்டுபோல் அவிக்கவேண்டும். அப்போது பாலின் ஆவிமாத்திரம் சல்லாத்துணியில்படும். அச்சல்லாத்துணியைப் பிழிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இது சுத்த ஜலம்போலிருக்கும். ஆனால் பால் பொங்கி மேற்படி துணியிற் படக்கூடாது. அப்படிப்பட்டுவிட்டால் பிழிந்தால் பாலாகத்தான் வரும். இதுகூடாது. இதற்காகவே மெதுவாக எரித்து ஆட்டின் பாலின் ஆவி ஜலத்தையே எடுத்துக் கொள்ளவேண்டும். மேற்படி ஆவி ஜலம் அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ் வரை எடுத்து, முன் சொல்லியபடி பழக்கமாய்க் கொடுக்கும் பேதி மருந்து 2, 3 தடவை பேதியாகும்படியான

அளவுஉறைத்துக் காலையில்மாத்திரம் கொடுக்க வேண்டும். இப்படிக் கொடுப்பதனால் என்ன ஆகிறதென்று கவனியுங்கள். குடலிற் பாலின் சக்கை சேர்ந்து கட்டி உண்டாகி யிருக்கிறதென்று முன்னமே அறிந்திருக்கிறீர்கள். சக்கைக் கட்டி உண்டாகிறதற்குப் பாலினுடைய ஜலம் வெளிப்பட்டதே காரணமென்றும் தெரிந்திருக்கிறீர்கள். இப்படியிருக்க, எவ்வகையிலும் நன்மை செய்யக்கூடிய ஆட்டின் பாலின் தெளி நீரானது தன் இனமாகிய பாலின் கட்டிச் சக்கையிற் சேர்ந்து இளக்கி உப்பச் செய்கிறது. அத்தெளி நீரில் பேதி மருந்து சேர்ந்திருக்கிறபடியால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மலவாதியாக வெளியிற் கொண்டு வந்து விடுகிறது. இதே மாதிரி தினம் காலை நேரங்களில் மாத்திரம், சில காலம், அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாளாக 6 நாள் அல்லது 7 நாள் கொடுக்கவேண்டும். குழந்தையின் தேக பலத்திற்குத் தக்கவாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள், இரண்டு நாள் விட்டு ஒரு நாள், கொடுத்து வரலாம். அதாவது வயிற்றிலுள்ள கனம் குறையும் வரை எவ்வளவு நாளானாலும் கொடுத்து வரவேண்டும். வயிற்றின் கட்டி குறைந்து விட்டதாக நிச்சயமாகத் தெரிந்தவுடன், உடனே தாமதியாமல் மறுநாள் முதல் இரும்பு சம்பந்தமான மெழுகு, லேகியம், செந்தூரம், குழந்தை தேகத்திற்குத் தக்க அளவு குழந்தையின் தேகம் நல்ல இரத்த விருத்தியுண்டாகும் வரை கொடுக்கவேண்டும். இப்படி இரத்த விருத்திக்குக் கொடுக்காதவரை, குணமாகி வந்த கட்டி பிறகு உடனே திரும்பி வந்து விடும். அதை உத்தேசித்தே கட்டியின் குணம் குறைந்ததும், இவ்வகை இரத்த விருத்தி மருந்து கொடுக்கவேண்டும். குழந்தைக்கு ஆகாரம் புழுங்கலரிசிக் கஞ்சி கொடுக்கலாம். வெள்ளாட்டுப் பாலை ஆடை விழும்படிக் காய்ச்சி, ஆடை நீக்கிப் பாலை வஸ்திரத்தால் வடிக்கட்டி அப்பாலில் வேண்டுமானால் கொஞ்சம் சீனியிட்டுத் தனியாகவும், புழுங்கலரிசிக் கஞ்சியுடனும் சேர்த்துக் கொடுத்து வரலாம். இதுதான் இதன் முக்கியமான ஆகாரம். இப்பால்கட்டி உண்டான குழந்தை தாயின் பால் குடிப்பது பழக்கமாயின், அத்தாயின் வயிற்றில் மந்தம் உண்டாகாதபடி ஆகாரம் புசிக்கவேண்டும். அதாவது கிழங்கு வகை, நன்றாய் வேகாத காய்கறி, கெட்டித்தயிர், பழையது, ஆறி ஜில்லிட்ட சாதம் இவைகள் அறவே நீக்கவேண்டும். இப்பாலினாலே உண்டான கட்டியானாலும், முன் சொல்லியபடி, பாலின் சக்கை வெண்கலம் போற்கெட்டியான பதார்த்தம் ஆகும் வரை முதிர்ந்து விடின் எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாதென அறியவும். ஆதலால் கட்டி யென்று கண்டவுடனே மேற் கண்ட சிகிச்சை செய்யவும். வயிற்றில் மந்தம் சேர்ந்தாலும், மேற் கண்ட தெளி நீரிலேயே பேதிக்குக் கொடுப்பது எவ்வகையிலும் நன்மை செய்யும். எல்லாவற்றிற்கும் அவரவர்களின்குடும்பவைத்தியர்களைக் கலந்துகொண்டு அவர்களிடம் மேற் கண்ட முழு விஷயங்களையும் படித்துக் காண்பித்து, இதே சிகிச்சையை கட்டி வைத்தியர் மூலமாகவே சமயோசிதமாய்ச் சிகிச்சை செய்து கொள்ளவும்.

இனி சாபத்தினால் வரும் நோயையும் அதன் சாந்தியும் கூறுவோம்.

(தொடரும்.)

தாய்மார்களே! குழந்தைகள் விஷயத்தில் சற்றும் அஜாக்கிரதை வேண்டாம்.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதின்மூன்றும் அத்தியாம்.

காரகோரம் நகர்—தார்த்தார்கள் வரலாறு—பார்கு.

மேலே சொன்ன பாலைவனத்தைக் கடந்து சென்றால் கரியோரான் அல்லது காரகோரம் என்னும் நகரம் வந்து சேரலாம். அது மூன்று மைல் சுற்றளவுள்ள ஒரு பெரிய நகரம். அங்கு கற்கள் இல்லாமையினால் அந்நகரத்திற்கு மண்ணினால் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு சமீபத்தில் வேறொரு பெரிய கோட்டையுமுண்டு. அதில் அந்நாட்டு அதிபதியின் அழகான அரண்மனை யிருக்கின்றது. முற்காலத்தில் தார்த்தார்கள் ஒன்று சேர்ந்து வசித்து வந்த ஸ்தானங்களில் இதுவுமொன்றாகையால் அவர்கள் இங்கு எவ்வாறு அரசாட்சி செய்து வந்தார்களென்பதைச் சொல்லுவோம்.

அவர்கள் வட நாட்டிலுள்ள குர்ஜா (குல்ஜா) பார்கு (பால்க்) என்னும் பிரதேசங்களில் வசித்து வந்தவர்கள். அங்கு மேய்ச்சல் நிலங்களும், ஆறு குளங்களும் நிறைந்த விசாலமான மைதானங்களும் மாத்திரம் இருக்கின்றனவே யன்றி நாடு நகரங்கள் இல்லை. அவர்களுக்குத் தங்களது ஜாதியைச் சேர்ந்த அரசனு மிருக்கவில்லை. ஆதலால் அவர்கள் உம்கான் என்னும் வேற்றரசன் ஒருவனுக்குக் கப்பங்கட்டிவந்தனர். இந்த அரசன் யாரென்று நான் விசாரித்ததில் அவன் மூத்தான் அல்லது மூத்த ஜான் (பிரஸ்பிடர் அல்லது பிரஸ்டர் ஜான்) என்பவன் என்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. அவனுக்குத் தார்த்தார்கள் வருஷந்தோறும் தங்களுடைய கன்று காலிகளிற் பத்துக்கொன்று கப்பங் கட்டி வந்தனர். நாளடைவில் தார்த்தார் ஜனத்தொகை பெருகுவதைக்கண்ட உம்கான், பயங்கொண்டு அவர்களை உலகத்திற் பலவிடத்திலும் சிதறிப்போகும்படிச் செய்ய நினைத்து, அவர்களுள் கலகம் ஏற்பட்டபொழுது முன்னூறு அல்லது நானூறு பெயர்களை ஒருங்கே நாடு கடத்தி அவர்களது பலத்தைக் குறைத்தான். வேறு சமயங்களில் தார்த்தரிய கனவான்களையும் இவ்வாறே நாடு கடத்தி அவர்களது கொட்டத்தையு மடக்கினான். தங்களது கெடுதியை நினைத்தே இவ்வாறு உம்கான் செய்தானென்று தெரிந்த தார்த்தார்கள் சிதறிப்போக மனமில்லாதவராய்த் தாங்கள் வாசஞ் செய்த இடங்களிலிருந்து பெயர்ந்து சென்று, வடதிசையிலுள்ள பாலைவனத்தை யடைந்து, அங்கிருந்து கொண்டு, உம்கானுக்குக் கப்பங்கொடோ மென்றார்கள்.

இவ்வாறு அங்கு வசித்து வருகையில் இவர்கள் கி.பி. 1162 ம் வருஷத்தில், தங்களுள் அதிபுத்திமானும் சாமர்த்தியமுள்ளவனுமான செங்கிஸ்கான் என்பவனைத் தங்களுக்கு அரசனாக்கிக்கொண்டனர். இவன் சிறிதும் நீதி தவறாமல் ஆண்டு வந்ததினால், தார்த்தார்களெல்லாம், "இவன் கேவலம் மனித ஜன்மமெடுத்த அரசனல்ல, தருமதேவதையே" என்று இவனிடம் அதிகமான விசுவாசமும், பயபக்தியுமுடையவராயிருந்தனர். இதனால் ஆங்காங்கு சிதறியிருந்த வேறு தார்த்தார்களும் இவனையே வந்து அடைக்கலம் புகுதலும், இவன், தனக்கு ஒரு பெருத்த வீரர்குழாமே ஏவலாளர்களாயிருப்பதறிந்து, அப்பாலை

வனத்தை விட்டுவிட்டு, அவ்வீரர்களை வில்லம்புடன் வரும்படிக் கட்டளையிட்டுப் பக்கத்திலிருந்த நாடு நகரங்களைக் கைப்பற்றத் தொடங்கினான். தான் கைப்பற்றிய நாடுகளை விட்டு முன்செல்லுமுன், இவன், அவற்றை நீதியுடன் ஆளத்தக்க அதிபதிகளை நியமித்ததினால், அந்நாட்டாருக்கு இவனிடத்தில் சிறிதும் வெறுப்புண்டாகவில்லை. தவிர அவ்வந்நாடுகளிலிருந்த பெரிய மனிதர்களைத் தனது பரிவாரத்துடன் அழைத்துச் சென்று அவர்களுக்குச் செல்லுஞ் செலவுங் கொடுத்துப் பரிசுகளுமளித்தான். இவ்வாறு செய்ததனால் தனக்குப் பெரிய கீர்த்தியும் பராக்கிரமமும் வந்துவிட்டதாக நினைத்து, இவன் வெகு விநயத்துடன் உம்கானுக்குத் தனது தூதர்களை யனுப்பி அவனது குமாரத்தியைத் தனது பட்டமகிஷியாக்குமாறு வேண்டினான். உம்கான், செங்கிஸ்கான் தன்னையவமதித்ததாக நினைத்துக் கோபங்கொண்டு தூதரின்மேற் சீறி, “என் வீட்டு வேலைக்காரன் என் பெண்ணைக் கேட்பதற்கும் ஆய்விட்டதா? நீங்கள் இந்த க்ஷணமே இங்கு விட்டோடிப் போய் உங்களது எஜமானனிடம், “இம்மாதிரி மறுபடி பேசினால் உன்னைச் சித்திரவதை செய்வேன்” என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள்” என்றான்.

செங்கிஸ்கான் இதைப் பொருட்டாக்காமல், வெகு தைரியமாய் ஒரு பெரிய படையுடன் புறப்பட்டுவந்து, தாண்டேக் என்னும் விசாலமான மைதானத்தில் பாளய மிறங்கிக் “கூடுமானால் ஒரு கை பார்க்கலாம்,” என்று உம்கானுக்குச் செய்தியனுப்பினான்.

உம்கானும் ஒரு பெருத்த சேனையைத் திரட்டிக்கொண்டு அதே மைதானத்திற்கு வந்து தார்த்தார்களது பாளையத்திற்குப் பத்து மைலுக்குள் ஓரிடத்தில் தனது பாளையத்தையுமிறக்கினான். அப்போது செங்கிஸ்கான் தனது சோதிடர்களை வரவழைத்து, அப்பொழுது நிகழவிருந்த யுத்தத்தின் இலாப நஷ்டங்களை யாராய்ந்து சொல்லும்படிக் கட்டளையிட்டான். அவர்கள் ஒரு நாணலை இரண்டாகப் பிளந்து நிலத்தில் நட்டு ஒன்றின்மேல் செங்கிஸ்கான் என்றும் மற்றொன்றின்மேல் உம்கான் என்றுமெழுதி “நாங்கள் ஜபம் செய்கையில் எங்களது தெய்வத்தின் சக்தியினால், இவ்விரு நாணல்களும் ஒன்றோடொன்று போர் செய்து மோதிக்கொள்ளும். எந்த நாணல் ஜயிக்குமோ அந்த நாணலின் மேலெழுதப்பட்டிருக்கும் அரசனுக்குத்தான் ஜயமுண்டாகும்” என்றனர். இதைக் கேட்ட ஊர் ஜனங்களெல்லாம் இவ்விந்தையைப் பார்க்கத் திரளாக வந்துகூடினர். சோதிடர்களும், முணுமுணுவென்று சில மந்திரங்களைச் சொல்லவும் ஸ்தோத்திரங்களை வாசிக்கவும் ஆரம்பித்தனர். அப்போது நாணலின் இருபாகங்களும் இடம்விட்டுப் பெயர்ந்து ஒன்றுடனொன்று பொருத, செங்கிஸ்கான் பேரெழுதிய பாகம் உம்கான் பாகத்தின் மேல் நின்றது. இதைக்கண்ட தார்த்தார்கள் தங்களுக்கு ஜயம் நிச்சயமாய்க் கிடைக்குமென்ற தைரியத்துடன் யுத்தத்திற்குப் புறப்பட்டு, யுத்தத்தில் உம்கானைத் தோற்கடித்துக் கொன்றனர். செங்கிஸ்கானுக்குக் கீர்த்தியும் ராஜ்யமுங் கிடைத்ததுமன்றி, உம்கானுடைய குமாரத்தியும் பட்டமகிஷியானாள்.

இதற்கப்புறம் செங்கிஸ்கான் ஆறு வருஷம் ஆண்டு, வேறு அனேக ராஜ்யங்களையுஞ் ஜெயித்தான். கடைசியாகத் ‘தேசின்’ கோட்டையைப் பிடிக்க எத்தனித்து, அதனருகே நெருங்கிச் சென்றபொழுது எதிரிகள் எய்த ஒரு அம்பு அவனது முழங்காலிற் தைக்க அதனால் இறந்தான். பின்னர் அவனது உடல் ஆல்டாய் மலையில் புதைக்கப்பட்டது. தார்த்தார்களின் முதலரசன் செங்கிஸ்கான். இரண்

டாமவன் கேன்கான், மூன்றாமவன் பத்தீன்கான், நான்காமவன் ஈயூகான், ஐந்தாமவன் மங்குகான், ஆறுமவன் கூப்ளேகான். கூப்ளேகானே மற்றெல்லாரிலும் அதிகக் கீர்த்திப் பிரதாபங்களுள்ளவன். ஏனெனில் அவன் தன் முன்னோர்கள் ஜயித்துச் சேர்த்து வைத்திருந்த தேசங்களையடைந்தது மன்றி உலகத்தில் மீந்திருந்த வேறு தேசங்களையும் ஒருவாறு ஜயித்துத் தனதாக்கிக்கொண்டான். அவன் சுமார் அறுபது வருஷம் ராஜ்ய பாரமும் செய்து வந்தான். கான் என்ற பதத்திற்குச் சக்கரவர்த்தியென்று பெயர்.

செங்கிஸ்கான் வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்திகளும் இளவரசர்களும் இறந்த பின் ஆல்டாய் மலையிலேயே புதைக்கப்படுகின்றனர். அவர்கள் நூறு நாட் பயணமுள்ள இடங்களிலிறந்தாலுங்கூட அவர்களது உடல்கள் ஆல்டாய் மலைக்கே கொண்டு வரப்படுகின்றன. பிணத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோவோர், தம்மெதிர்ப்படுவோரை யெல்லாம், “நமது பிரபுவான அரசர் வேறுலகஞ் சென்று விட்டார்; அவருக்குப் பின்சென்று ஊழியஞ் செய்” என்று சொல்லிக் கொன்று விடுவார்கள். நல்ல குதிரைகள் எதிர்ப்பட்டால் அவைகளுக்கும் இதே கதி பிராப்தமாகிறது. கூப்ளேகானுக்கு முன்னிருந்த மங்குகானது தேகம் ஆல்டாய் மலையில் புதைக்கக் கொண்டு வரப்பட்டபொழுது, அப்பிணத்தைப் பின் தொடர்ந்த சிப்பாய்கள் பத்தாயிரத்துக்கு மேலான ஜனங்களைக்கொன்றதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

யேசுகிறிஸ்துநாதர் அற்புத வரலாறின் சங்க்ஷேபம்.

ஸ்ரீமான் M. A. ஆரோக்கியசாமி.

ஸ்ரீமதி சிந்தாமணி என்னுஞ் சிறந்த நற் பத்திரிகையின் பத்திராதிபருக்கு மனமார்ந்த வந்தனத்துடன் சமர்ப்பிக்கும் விண்ணப்பமாவது:—

இவ்விந்திய நாட்டின்கண் தங்களாற் சிறப்புடனெழுந்துலாவும் பத்திரிகையில் நிகழும் 1925 ௵. மே ௴ ஸ்ரீமான் வெ. க. ராமநாதன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள “தாம்பத்திய முறை அல்லது மனைவிமக்களும் முக்திமார்க்கமும்” என்னும் வியாசத்தை வாசிக்க நேர்ந்தது. அதனில் (478 பக்கத்தில் 2ம் பத்தியில்) ‘நம் வாசகர்கள் யேசுகிறிஸ்துவின் ஜனன விவரத்தை அநேகமாய் அறிந்திருக்கமாட்டார்கள்’ என்னும் வாக்கியம் ஆதியாக ‘யேசுகளும் இன்றைக்கும் அவதரிப்பார்கள்’ என்னும் வாக்கியம் ஈறாகவும் வரையப்பட்டுள்ள விஷயங்கள் வெகு விபரீதமாயும், கிறிஸ்துவர்களின் கொள்கைக்கு மாறுபாடாயும் இருப்பதைக் கண்டு மிக்க விசனமுற்று, இவ்வியாசத்தை யெழுதலானேன். இதனால் உண்மை விளங்கவும், ஷை சஞ்சிகையிலுள்ள வியாசத்தை முற்றும் வாசித்து முப்போதுங் கன்னிகையாய் நின்றிலங்கும் ஒப்பில்லா கற்பலங்காரி மீது தப்பபிப்ராயங்கொண்டோர் மனந் தெளிந்து, அப்பரிசுத்தவதி சகல பெண் குலத்தாரிலும் ஆசீர்வதிக்கப்பட்டவளெனப் போற்றிப் புகழவும் வழியாகுமென்பதால், தயை பாலித்துத் தங்களது பத்திரிகையினோர் கோணத்தில் இடந்தருவீர்களென்று நம்புகிறேன்.

ஜெகத்ரக்ஷகராகிய யேசுபெருமானின் ஜனன விவரம் ஸ்ரீராமதீர்த்தர் குறித்துக் காட்டுங் கொள்கைப்படியாவது, அல்லது உலக

வியற்கை விதிப்படியாவது நடவாமல் எல்லாம் வல்ல ஈசனின் திருவருட் செயலாலும், மானிட மதி கண்டறியா விதிப்படியாலும் நேர்ந்ததென்பதை தேவரால் வெளியாக்கப்பட்டுள்ள வேதாகமங்களிலும், வேதபாரர்களாலும் பற்பல காலங்களில் தோன்றிய கீர்த்தி பெற்ற உத்தம ஞானிகளாலும் எழுதி வைக்கப்பட்ட புத்தகங்களிலும் கலங்கமில்லாமற் காணலாம்.

என்றாலும், ஸ்ரீராமதீர்த்தர், யேசுகிறிஸ்து ஈசனின் மகனென்று ஒப்புக்கொண்டாலும், அவரை ஒரு வேற்று மனிதனாகப் பாவித்தும், அன்னவரின் ஜனனம் தாய் தந்தை இருவரின் சேர்க்கையாலேயே உண்டானதென்றும் பரிசுத்த மரியம்மாளின் பழுதில்லா கன்னிமைக்குப் பங்கமாகவும், அன்னவளின் தூய பர்த்தாவாகிய சூசை முனிவர் கனவிலுங் கருதியிராக் காரியத்திலீடுபட்டாரெனக் காட்டியும், இன்றும் யேசுக்கள் அவதரிப்பார்களென்றுங் கூறியிருப்பவையும் தவறென மெய்ப்பிப்பதற்குப் போதிய வகையாய் அவற்றினின்று சில அம்சங்களையெடுத்திங்கு எழுதவேண்டியதவசியமாயிற்று.

யேசுகிறிஸ்து நாதர் பூவுலகில் தோன்றிய போது மாத்திரம் இவ்வுலகிலறியப்பட்டவரல்ல. இவர் பிறப்பிற்கு முன்பு நாலாயிரவருஷ காலமாக, உலகிலுதித்த சகல மனுஷர்களும் ஒரு மீட்பரை எதிர் நோக்கி யிருந்தார்களென்பது ஆதிமறைக் கொள்கையாகும். இஸ்ராயேல் சந்ததியின் மூதாதையாகிய யாக்கோபென்பவர் யூதசனத்தையும், உலக முழுமையுஞ் சார்ந்ததாகிய ஓர் மகா தீர்க்கதரிசனத்தையறிவித்த வகையாவது :—

“அனுப்பப்படவிருக்கிறவர் வருமளவும் யூதா கோத்திரத்தினின்றும் இராஜ செங்கோன்மை நீங்காதிருக்கும். அந்நாள்மட்டும் அக் கோத்திரத்திலே ஆதிபத்தியமும் இல்லாது ஒழியாது. வரப்போகிற அவரை சகல பிரஜைகளும் எதிர் நோக்கி யிருப்பார்கள்” என்பதே.

இவ்வாறாக ஆதியில் ஆதாம் ஏவாளுக்குக் கொடுக்கப்பட்ட தேவவாக்குத்தத்தம் மோசேஸ்முனி காலம்வரை பரம்பரை வழியாகவும், மோசேஸ் முதல் கிறிஸ்தாப்தம் வரை ஆகமங்களின் வழியாகவும் தேவ ஞானவரம்பெற்ற தீர்க்கதரிசிகள் வாயிலாகவும் பரவி வந்ததோடு, கிறிஸ்துவாகிய மேசியாஸ் பிறக்குங் காலம், இடம், குலம், சம்பவம் முதலானவைகள் சங்கிலித் தொடர் போல் வரைந்து வைக்கப்பட்டிருப்பதை நாளதும் வேதாகம புத்தகத்திற் காணலாம்.

இவ்வித மேலான தேவ மகத்துவந் தங்கிய ஏகாக்ஷகரின் ஜனன விவரமே சொல்லரியத் தூய்மையும், அருவருக்கப்படாத பரம இரகசியமும் வாய்க்கப் பெற்றதாம்.

இதோ அநாதி நித்ய சர்வேசுவரன் தாமருளிய வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் வந்தபோது யூதேயா நாட்டில், தாவீது ராச குலத்திலுதித்த உத்தம நீதிமானான சூசைமா முனிவருக்கு விவாகஞ் செய்யப்பட்டிருந்த திருக்கன்னி மரியாளினிடம் கபிரேலென்னுந் தூதனை அனுப்பச் சித்தமானார். தூதாக வந்த சம்மனசானவர் அத்திருக் கன்னிகையிடம் பிரசன்னமாகி அன்னவளின் ஆத்தும ஜோதியைக் கண்டு மகிழ்ந்து “பிரிய தத்தத்தினாலே பூர்ணமானவளே வாழ்க! கர்த்தர் அருளால் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே” என்று உந்நத விதமாய்ப் புகழ்ந்து போற்றினார். மீளவும் “நீர் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவீர். அவருக்கு யேசு வென்னும் நாமஞ் சூட்டுவீர்” எனவே, அதற்குப் பரிசுத்தக்கன்னி மரியாய் “இது எப்படி யாகும்? நான் புருஷனை அறியேனே” என்று சொல்ல,

மாறுத்தரமாக “இஸ்பிரீத்து சாந்து (பரிசுத்த தேவ ஆவியானவர்) உமது மேல் எழுந்தருளுவார். உந்நதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும். ஆகையால் உம்மிடத்திற் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார்” என்றார் தேவதூதன். அப்போது பரிசுத்த மரியம்மாள் “இதோ நான் ஆண்டவருடைய அடிமை. உம்முடைய வார்த்தையின்படி எனக்காகக் கடவது” என்றாள். ஆழ்ந்த தாழ்ச்சியும், மட்டற்ற கீழ்ப்படிதலுமுள்ள கன்னிகையானவள் சம்மதித்த அக்ஷணத்திலதானே கர்த்தருடைய மாங்கிஷ ஐக்கியத்தின் பரம இரகசியம் நிறைவேறிற்றென்பது வேத சத்தியம். மேற்படி தேவதூதன் பரிசுத்தக் கன்னி மரியாளுக்குச் சொன்ன மறுமொழிக்கு அர்த்தமாவது: ‘நீர் புருஷனை அறியாத கன்னிகையாயிருக்கிறீர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஒரு கன்னி ஒரு குமாரனைப் பெறுவாளென்றும், அக்குழந்தைக்கு ‘எம்மனுவேல்,’ அதாவது நம்முடன் வாசம் பண்ணுகிற சர்வேசுவரனென்னும் பெயரிடப்படும் என்றும், இசையாஸ் தீர்க்கதரிசியானவர் வசனித்திருக்கிறார். அந்தக் கன்னிகை நீர்தான். நீர் பெறப்போகிற திவ்விய பாலன் சர்வவேசுரனுடைய குமாரன் எனப்படுவாரென்றும், இஸ்பிரீத்துசாந்துவானவர் தம்முடைய தேவ வல்லமையைக் கொண்டு உமது பரிசுத்த உதிரத்தில் உமது இரத்தத்தினால் அந்தத் திருக்குழந்தையின் சரீரத்தை உண்டாக்குவார்’ என்றும் அர்த்தமாகுமே யொழிய, இது வரையும் அறியாமலிருந்தாலும் இனி அறியலாகிக் கருத்தரிப்பீரென்றாவது, அல்லது பரமஹம்ஸர் ஒப்பில்லா உவமையைக் காட்டித் தீட்டியவாறுபோல் “உங்களுக்குள் உண்டான புருஷ சேர்க்கையை மறந்து போயிருக்கிறீர்கள்” என்றாவது சொன்னது போல் அர்த்தமாகாது.

மேற்கண்டவாறு சுதனாகிய சர்வேசுவரன் பரிக்கிரகஞ்செய்த மானிடசுபாவத்தோடு தூய கன்னிகையின் கர்ப்பாகாரத்திற் பத்து மாதந் தங்கியபின் சூரியனின் காந்தி பளிங்கை யுடைக்காமல் ஊடறுத்துச் செல்லுவது போல் தம் தாயின் கன்னிமைக்குப் பழுது நேராமல் அற்புதமேரையாய் வெளிப்பட்டு, புல்லணைமீது கிடத்தப்பட்டார். அச்சமயம் யூதாவின் காணியாகிய பெத்லெகேமில் மாடடையுங் குகையில், பரதேசிபோல் அவரின் திருப்பிறப்பின் சுபச் செய்தியை ஏழைகளான இடையர்களுக்கு வானதூதர் வழியாலும், கீழ்த்திசை நாடுகளில் வசித்திருந்த சோதிட சாஸ்திரிகளான மூவரசருக்கு நவ நட்சத்திரத்தின் மூலியமாகவும் தெரியப்படுத்தி அன்னவர்களால் ஆவலாய் தரிசிக்கப் படவும், ஆராதிக்கப்படவுமானார்.

நாற்பதாம்நாள் தேவாலயத்திற்குக்கொண்டு போனபோது, “ஆண்டவருடையகிறிஸ்துவைக் காண்பதற்குமுன் சாவைக் காண்பதில்லை” என்று இஸ்பிரீத்து சாந்துவினால் வாக்குப் பெற்றிருந்த மகாத்மாவாகிய சிமையோனாலும், தீர்க்கதரிசனியாகிய அன்னாளாலும் “புறஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவும், இஸ்ராயேலருக்குமகிமையாகவும்” இருப்பாரெனவும் புகழ்ந்து துதிக்கப்பட்டார். பன்னிரண்டாம் பிராயத்தில் சாஸ்திரிகள் கூடியிருந்த சபை நடுவில் வீற்றிருந்து, தமது ஞானத்தாலும், வாக்கு வல்லபத்தாலும் அவர்களை பிரமிக்கச் செய்யலானார். முப்பதாம் பிராயத்தில் யோர்தான் நதிக்கரையில் தமக்கு முன் தூதனாகிய ஸ்நாபக அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறியவுடன் வானமண்டலந்திறக்கப்படவும், “இவர் என் நேச குமாரன். இவர்மேல் பிரியமாயிருக்கிறேன்” என்று பிதாவாகிய சர்வேசுவரனால் சாட்சி

கூறப்படலானார். இவைகளுக்குப் பின் தமக்கு வேண்டிய சீடர்களைத் தெரிந்துகொண்டு, பட்டணங்களிலும், கிராமங்களிலும் ஊரூராய்ச் சுற்றி உலகத்தின் ஒளி தாமே யென்றும், ஆதியு மந்தமுமானவர் தாமே யென்றும், தாமே வழியும், சத்தியமும், ஜீவியமுமென்றும் பகிரங்கமாய்க் கூறலானார், கூறியதற்கொப்பாகக் கிரியைகளாலும் காண்பிக்கலாகி, தம்மை யண்டிவந்த பிறவி நோயாளரைச் சடுதியில் குணப்படுத்தியும், குஷ்டரோகங்களைப் போக்கியும், பிசாசுகளை யோட்டியும், மரித்தவர்களை எழுப்பியும், பாவவாளரின் பாவங்களை மன்னித்துச் சமாதான வழியில் நிலைப்படுத்தி மோட்ச வழியைக்காட்டியும், அத்தாட்சிப் படுத்திவந்தார். கடைசியாகத் தமது முப்பத்து மூன்றும் பிராயத்தில் மனுகுல ஈடேற்றத்திற்காக வலிய சிலுவைமரத்தில் பலியாகி, மரித்த மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, தமது அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்களித்து, "பரலோகத்திலும், பூலோகத்திலும் எனக்குசர்வதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் உபதேசித்து, பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினால் ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அநுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ நான் உலகம் முடியுமட்டும் உங்களோடிருக்கிறேன்" என்று திருவுளம்பற்றி, திருச்சபையை நாட்டி, நாற்பதாம் நாள் அவர்கள் காணவே ஒட்டோலகமாய் மேகங்களினிடையெழுந்து விண்ணுலகம் சேர்ந்தார். அப்போஸ்தலர்களோ தங்கள் சற்குருவின் திருவாக்கை சிரமேற்கொண்டவர்களாய் தேசாதேசங்கள் சென்று சத்திய வேதத்தைப் போதித்துத் திருச்சபையை நிலைநாட்டி, தங்கள் போதனையை மெய்ப்பிக்கும்படி உயிரையுந் தத்தஞ் செய்தார்கள். அவர்களின் பின்னடியார்களாய் வந்தவர்களில், எண்ணமுடியாத புண்ணியவாளராகிய ஆணும், பெண்ணும், பாலரும், விருத்தருமாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி வேதசாட்சிகளானார்கள். சிந்தப்பட்ட வேத சாட்சிகளின் இரத்தம் உலகமடங்கலும் கிறிஸ்துவர்களை விளைவிக்கும் வித்தாக விளங்கிற்றென்னலாம். மேற்படிசம்பவங்கள் ஒவ்வொன்றும் கிறிஸ்துநாதர் மெய்யான மனிதனும், மெய்யான தேவனுமாயிருக்கிறார் என்பதை உள்ளங்கைநெல்லிக்கனிபோல் காட்டுவதோடு, அவர் ஸ்தாபித்த திருச்சபையும், தனது நெடுங்கால நீடிப்பினால் அன்னவரின் தேவத்துவத்தை விளக்கிக் காட்டுகின்றன. ஆம்! கத்தோலிக் திருச்சபை யொன்றே அந்நாள்முதல் இந்நாள்வரை முள்ளுகளின் நடுவில் லீலிமலர் செழித்தோங்கி வளரும் மேரையாய் இப்பூவுலகில் நேரும் அபரிமிதமான இடைஞ்சல்களிலும், கிறிஸ்துவப் பூண்டே பூவிலில்லாமல் நசுக்கி நாசமாக்க வேண்டுமெனக் கங்கணங் கட்டி யெழும்பி நின்ற பூர்வ அஞ்ஞான ராஜாக்களின் கொடுங்கோன்மையிலும், திருச் சபையையும், அதின் பிரத்தியட்ச தலைவரையும் அதோகதி யாக்க வேண்டுமென்று நாளதும் சிங்கங்கள்போல் கர்ச்சித்துப் பாய்ந்து வரும் பதிதர்களின் சதிமோசங்களிலும் சிதையாமல் கற்பாறைபோல் நின்று உலகமெங்கும் சத்திய ஒளியைப் பரவச் செய்து ஞானதிக்கஞ் செலுத்தி வருவதை யார் அறியார்?

"நீ இராயாய் இருக்கிறாய். இந்த இராயின் மேல் என் கோட்டையைக் கட்டுவேன். நரகத்தின்வாசல்கள் அதைமேற் கொள்ளமாட்டாது" என்று சற்குருவாம் யேசு சுவாமி தமது தலைமை அப்போஸ்தலனுக்குத் தந்த உறுதிவாக்கின்படி இன்னும் உலக முடிவு பரியந்தமும் நிலையாய் நின்று, ஜெய வெற்றி பெறுமென்பதுண்மை!

இவ்வாறான மகத்துவங்கள் நிறைந்த கிறிஸ்து யேசுவைப் போன்ற யேசுக்களும் இன்றைக்கும் அவதரிப்பார்களென்று ஸ்ரீராமதீர்த்தர் கூறியதற்கு அத்தாட்சிதான் யாதோ? தாம் வரைந்துள்ள போதனை வழிவகையே யெனின், அப்போதனை சாதனையற்றதென்பதற்கு இதுவரையும் எந்த யேசுகளும் அவதரிக்காதிருப்பதே நற்சான்றும். ஆனால், ஜெருசலே மாநகரில், யூதேயா நாட்டில், மாடடையுங் குகையிற் பிறந்து, கல்வாரி மலை மேட்டில் நாட்டப்பட்ட சிலுவையாகிய கழுமரத்தில் உயிர்விட்ட நசரேயரான யேசுவே இனி நீதிபரராய் மனுகுலத்தை நடுத்தீர்க்க வானுலகினின்று தமதுமகிமைபிரதாபத்துடனெழுந்தருளி வருவாரென்பதே மறுக்கக் கூடாத சத்தியம்.

நீரின் தன்மையறிய சாகரத்தினின்று உள்ளங்கையளவு நீரைக் கொள்வதுபோல் வேதாகம சாஸ்திர சாகரத்தினின்று சிறிதளவாய் மாத்திரம் எடுத்து எனது சிற்றறிவிற் கெட்டியவாறு எழுதியதில், ஸ்ரீராமதீர்த்த ஹம்ஸர் தீர்மானத்துடன் தீர்த்த தீர்ப்புகள் முற்றுந் தவறென அறிந்துக்கொள்வதோடு யேசுகிறிஸ்து நாதர் வேற்றுமனிதனல்ல வென்றும், அன்னவரின் தாயாகிய பரிசுத்தமரியம்மாள் முப்போதும் பழுதில்லா கன்னியாஸ்த்ரியென்றும், பரிசுத்தர் சூசை முனிவர் என்றும் உத்தம விரதபர்த்தாவாக விளங்கினாரென்றுங் கண்டு கொள்ளலாம்.

பெண் கல்வி.

(ஒரு சம்பாஷணை)

ஸ்ரீமான் என். வேங்கடரமணன்.

கமலம்:—என்னடி ஜானகி! இரண்டு தினங்களாய் உன்னைக் கண்ணில் காணுவதுங் கடினமாயிருக்கிறது. மருமகப்பிள்ளை வந்திருக்கும் தடபுடலா என்ன?

ஜானகி:—இல்லையடி கமலா! எனக்கு இரண்டு தினங்களாய் ஜலதோஷம் பிடித்துக் கொண்டு தலை பாரமாயிருந்தது. மருமகப்பிள்ளை வந்தால் தடபுடலென்னவிருக்கிறது! என்னமோ, எங்கள் ஆத்துக்காரர் செய்த வேலை. நான் அருமையாய் வளர்த்த தங்கம் சுந்தரியை அவனுக்கே கொடுத்துத் தீர வேண்டுமென்று பிடிவாதம் பிடித்துச் சாதித்து விட்டார். என்னமோ அவன் இங்கிலீஷ் படித்திருக்கானும். ரொம்ப ரொம்ப கெட்டிக்காரனென்று புகழ்ந்து கொள்ளுகிறார். என் அண்ணன் மகன் அப்பாஜிக்குக் கொடுக்க வேண்டுமென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். என் வார்த்தையைக் கேட்டாரா? இல்லை.

கமலம்:—ஜானகி! என், இந்த மாப்பிள்ளைக் குத்தானென்ன? அழகில்லையா? படிப்பில்லையா? அப்பாஜிக்கு இவன் குறைந்து விடுவானா? சுந்தரிக்குத் தகுந்த சுந்தரனாகவே இருக்கான். அவன் பெயரும் "சுந்தரம்" என்பது எவ்வளவோ பொருத்தமாயிருக்கே!

ஜானகி:— போடி பைத்தியக்காரி! அழகிருந்தும், படிப்பிருந்தும் என்னவாகும்? கையில் காணி நிலம் உண்டா? கால் காசு உண்டா? மாதாமாதம் சம்பளம் வந்தால் உண்டு; இல்லாவிட்டால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லை. அழகா சோறு போடுகிறது? எங்

கள் அப்பாஜிக்கு என்ன குறை? கொஞ்சம் கருப்பு; மாநிறந்தானே. அதிகம் படிக்கத் தெரியாமற் போனாலும் பஞ்சாங்கம் பார்த்து ஜோசியம் சொல்லுவதில் கெட்டிக்காரன். அவன் தகப்பனார் சம்பாதித்த சொத்து வீடும், வாசலும், ஒரு தோட்டமும் இருக்கிறது. இதுவன்றி உள்ளூர் புரோகிதமும் உண்டு. ஊரார் அபிமானம் ஜாஸ்தி. வருஷத்துக்கு சாப்பாட்டிற்கு வாங்கவேண்டியதில்லை. ஏதோ வரும் வரும்படி மேல்ச் செலவுக்குப் போதும். அவன் எவ்வளவோ சொகுசாய் வைத்திருப்பான்.

கமலம்:— சரிதான்; அப்பாஜிக்கும் சுந்தரிக்கும் நல்ல பொருத்தம் பார்த்துச் சொன்னாய்! சுந்தரியின் படிப்பென்ன! அழகென்ன! புத்திசாலித்தனமென்ன! சதா "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்றபடி புத்தகமும் கையுமாயிருக்காளே. அவளையா அப்பாஜிக்குக் கொடுத்திருக்கவேண்டுமென்கிறாய்! அவன் ஜோசியம் சொல்லிக் கெட்டான். அவன் நடத்தைக்கும் சுந்தரிக்கும் எவ்வளவு வித்தியாசம்! சதா வேசிக்கள்ளனாச்சே. அவன் சொத்து மண்ணாய்ப் போக. மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினாற்போல், சொத்தை நம்பி அவனுக்குக் கொடுக்க எண்ணினாயே! சொத்து இன்றைக்கிருந்து நாளை யழித்துபோகுமே. சொத்தா சதம்? படித்திருந்தால் எவ்வழியிலாயினும் நாலு காசு சம்பாதித்து ஜீவனம் பண்ணலாம். பஞ்சாங்கப் படிப்பு அந்த பட்டிகாட்டுக்கு உதவுமன்றி அது படிப்பாகுமா? உலகம் மதிக்குமா? ஆகா! வெகு நன்றாய்ச் சொன்னாய்! கடவுள் கிருபையே சுந்தரிக்குச் சுந்தரனை மணாளனாய்க் கூட்டி வைத்தது. நீயும் கொஞ்சம் படித்திருந்தால் இப்படியெல்லாம் சொல்லமாட்டாய்.

ஜானகி:— ஓகோ! நீ கொஞ்சம் படித்துவிட்டாயென்று துள்ளுகிறாய். படித்தால் ரொம்ப புத்தி உண்டாய்விடுமோ? இன்று வேசிக்கள்ளனாயிருந்தால் நாளை அகமுடையான் வீட்டுக்குவந்தால்சரிப்பட்டுவிடுகிறான். சிறுவயதில் நாலாவிதம் நடக்கிறது உலக சுபாவந்தானே. இதனாலேயே அவன் கெட்டுப்போய்விட்டானா? சம்பந்தம் செய்வதில் சொந்தம் பார்க்கவேண்டாமா? இந்த சுந்தரன் எந்தத் தலைமுறையில் நமக்கு ஒட்டியிருக்கான்? வழியில் போகிறவனுக்குப் பெண்ணைக் கொடுத்தது வெகு நீதியாக்கும்! நான் அப்பொழுதே சொன்னேன், பெண்ணைப் படிக்கவைக்க வேண்டாமென்று, அவர் கேட்டாரா? தமிழாம், இங்கிலீஷாம், ஆர்மோனியமாம்! என்னனென்வோ பெரியவாள் காலத்தில் இல்லாததெல்லாம் சொல்லி வைத்தார். அவள் படித்தது போதும்; என்னை மதிக்கிறாளா? எடுத்ததற்கெல்லாம் "அம்மா, நீங்கள் படிக்கவில்லை" என்று பழிப்பு சொல்லுகிறாள். அவள் மெச்சித்தானே சுந்தரனைக் கட்டிக்கொண்டாள். அப்பாஜியைப் பற்றி எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்றாளே. எங்கள் காலத்திலுண்டா இப்படியெல்லாம்! பெரியவாள் பார்த்துக் கட்டி வைத்தவர்க்கு வாழ்க்கைப்படவேண்டும். "கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்று எவ்வளவோ பயபக்தியாய் நடந்துகொள்ளுவோம். என்னையும் அப்படித்தான் விவாகம் பண்ணிக்கொடுத்தார்கள். எனக்கென்ன குறை? இரண்டு ஆணும் ஒரு பெண்ணும் பெற்றேன்; சம்பந்தமும் பண்ணினேன்.

(தொடரும்.)

விலை ரூ. 2 —சரோஜனி.— விலை ரூ. 2

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான நவரசம் ததும்பும்துப்பறியும் நாவல். வங்காள நகரச் சித்திரக்காரரைக் கொண்டு எழுதின பத்து அழகான சித்திரப் படங்கள் அடங்கியது.

புத்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் ஒருவித வசியமாக்கப்பட்டு படித்துமுடியுமட்டும் கீழே வைக்க மனம் வாராதென்பது நிச்சயம்.

எம். எஸ். ராமுலு அண்ட் கம்பெனி,

புஸ்தகவியாபாரிகள், 64, மன்னர்சாமிகோயில் தெருவு,

இராயபுரம். மதராஸ்.

சிந்தாமணியைப்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

(ஒரு சகோதரி எழுதுகிருள்.)

நீங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி" யைப் படிக்க வெகு சந்தோஷமாயிருக்கின்றது. பரோபகாரமாய் நீங்கள் செய்ய முனைந்திருக்கும் உங்கள் முயற்சிக்கு பகவான் கருணைபுரியவேண்டும்.

Sister T. N. Sarojan, School Mistress, Thazhakudy, writes under date 29th June 1925 :—

Your valuable *Chinthamani* to hand. Very glad to find them useful, especially for our female world.

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்லீஷ் கற்றுக்கொள்ளக் கூடியது.

10,000 ஜனங்களால் வாசித்து பிரபல மடைந்தது.

எமது லேடி டிரேட்மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்.

இப்புத்தகத்தில் சொல்லிய படி இல்லாவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஆங்கில ஆசான்.

60 நாளையில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக் கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் சுமார் 600 பக்கங் கொண்டபெரிய புத்தகம். 5-ம் பதிப்பு.

விலை ரூ. 2. தாபற் செலவு அணா 8.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை தெருவு, மதராஸ்.

நயம்! வெகு நயம்!!

உயர்தரமான பம்பாய் இமிடேஷன் ஸில்க் புடவைகள்.

எங்களது சொந்த ஆர்டரின்பேரில் இவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மிக அழகாயும் பார்ப்பவர் கண்களுக்கு இவைகள் உண்மையாகவே காசி, பெங்களூர் முதலிய இடங்களில் செய்யப்பட்ட பட்டுப்போலத் தோன்றும். வெகுகாலம் நீடித்திருக்கும்; தினந்தோறும் துவைத்து அணியத்தக்கது. சிவப்பு, ரோஸ் வர்ணம், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, காபிகலர், சாக்லேட், மற்றும் பலவித நிறங்களில் இருக்கின்றன. பெண்மணிகளைத் திருப்திப்படுத்தப் பளபளப்பும் வசீகரத் தோற்றமும்கொண்ட இவ்வாடைகளைக் கொடுத்தலே சரி. மிகவும் சரசமான விலை. அளவு 18 × 2¾ முழங்கள். கேட்டிச்சாயம். உயர்ந்த உடை. விலை நயம்.

விலை ரூபாய் 6—12—0.

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் இவ்விலாசத்திற் கெழுதிக் கொள்க:—

ஜி. வி. நாதன்,
வியாபாரி,
65, அரண்மனைக்கார வீதி,
சென்னை.

சிந்தாமணியைப் பற்றி சில அபிப்பிராயங்கள்.

(ஒரு சகோதரி எழுதியது.)

I.

சகோதரி வி. பாலம்மாளுக்கு

நீங்கள் எழுதி வரும் 'சிந்தாமணி' வியாசங்கள் ஒவ்வொன்றும் படிக்க சொற் சுவையும் பொருட் சுவையும் பொருந்தி படிப்பவர்க்கு மிகவும் உற்சாகமாகவும் நல்வழிக்கு ஆதாரவை யளிப்பதாயு மிருப்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

II.

சகோதரியே!

தாங்களனுப்பிய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையைப் படித்தேன். கள் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டதற்கு தங்களுக்கு எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

"கதாமாலா."

இது தமிழில் பிரசுரிக்கப்படும் ஓர் உயர்தர மாத சஞ்சிகை. சிறுவர் பெரியோர்களும் கனதனவான்களும், ஏழை எளியோர்களும், எல்லா மதத்தினர்களாகிய ஆண் பெண் அடங்கலும் படித்து ஆனந்திக்கத்தக்க கதைகளடங்கியவை. புராணோக்த கதைகளும், நவரசக் கதைகளும், பலதேசக்கதைகளும், புத்திமதிக் கதைகளும், நவீன நாவல்களும், நாடகக்கதைகளும் மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டு இதில் வெளிவருகின்றன.

பத்திராதிபர்:—

கே. வி. ராமராவ்,
ஸப் அஸ்ஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்,
பெங்களூர் தண்டு.

தபாற்கூலி யுள்பட	வருஷசந்தா
உள்நாடு ரூ. 2—0—0	வெளிநாடு ரூ. 2—8—0

விளம்பரம் முதலிய விஷயங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

"தேவாங்க மித்திரன்"

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

இது தேவாங்கர்களுடைய முன்னேற்றத்தைக் கருதி நடத்தப்பட்டுவரினும், விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, சுகாதாரம், சன்மார்க்க போதனைகள், ஜீவிய சரித்திரங்கள் முதலியவைகளைப்பற்றியவைகளும், இன்னும் அநேக விசேஷ வியாசங்களும் எழுதப்பட்டு வெளிவரும்.

சந்தா விபரம்:—

வருஷம் 1-க்கு	ரூபா 2—0—0
அயல் நாடுகளுக்கு வருஷம் 1-க்கு ...	,, 2—8—0
அபிமானிகளுக்கு வருஷம் 1-க்கு ...	,, 10—0—0

விலாசம்: மானேஜர், "தேவாங்க மித்திரன்,"
தேவாரம், மதுரை ஜில்லா.

பூஜைக்குகந்த போட்டோ படங்கள்.

நம்மால் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

இது வரை வெளிவராத நூதன மாதிரி.

முருகன் ஷண்முக கடவுள், தண்டாயுதபாணி, பாரத மாதா உருவமாய் அமைந்த ஸரஸ்வதி, விக்னேச்வரர், ராதா கிருஷ்ணன், குழந்தை கிருஷ்ணன், யசோதா கிருஷ்ணன், திருப்புகழியற்றிய அருணகிரி நாதர், கீர்த்தனங்களியற்றிய தியாகராஜ ஸ்வாமிகள், அகஸ்தியர் பெருமான், பட்டிணத்தார், சென்னைக்கு விஜயம் செய்த பொழுது எடுத்த மகாத்மாவின் படம்.

		ரூ.	அ.	பை.
ஒருசெட்டு	...	6	0	0
தனிக்காப்பி				
சாதாரண போட்டோ 1-க்கு	...	0	12	0
,, ½ டஜன்	...	4	0	0
,, 1 டஜன்	...	6	0	0
வர்ண போட்டோ 1-க்கு	...	1	0	0
,, ½ டஜன்	...	5	0	0
,, 1 டஜன்	...	9	0	0

சர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை

தேசோபகாரி.

அரியபெரிய விஷயங்கள்கொண்டு இரங்கூனிலிருந்து வெளிவரும் சிறந்த வாரப் பத்திரிகை.

ஞாயிறுதோறும் வெளிவருவது.

(தேசோபகாரி காரியாலயம், நெ. 45, 36-வது வீதி, இரங்கூன்.)

சந்தா விபரம்.

இரங்கூன்:—வருஷம் 1-க்கு ரூ. 5; மாதம் 6-க்கு ரூ. 2-12. உள்நாடு: வருஷம் 1-க்கு ரூ. 6; மாதம் 6-க்கு ரூ. 3-4. வெளிநாடு: வருஷ 1-க்கு ரூ. 7; மாதம் 6-க்கு ரூ. 4.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22; வெளியூர்: ரூ. 26. விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி, 31-32, பார்ஸ்டிரீட், ரங்கூன்.

லோகோபகாரி.

முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும் வாரப் பத்திரிகை.

ஆசிரியர்:

பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச்சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம்பெற்று உலகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பது லோகோபகாரியின் நோக்கம்.

வருஷ சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளி நாடு ரூ. 6.

"லோகோபகாரி"

பத்திரிகாலயம்,

கோமளீசுவரன்பேட்டை, சென்னை.

Madras.

விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்தியா, ஸிலோன், மோரேஷஸ், பினங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,

86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்

ஆரோக்கிய தீபிகை.

சித்திர சகிதமாகச் சென்னையில் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை. இஃது தனது பெருக்கொப்ப ஆரோக்கியம், சுகாதாரம், பிரசவ முறைகள், முதற் சிகிச்சை, சிசுசம்ரக்ஷணை முதலிய விஷயங்களை ஆடவருக்கும் பெண்டிருக்கும் போதிப்பது. இயற்கை முறைகளால் தேகசுகத்தைப் பாதுகாத்து, நோயணுகாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமெனப் போதிப்பது. அநேக பிரபல வைத்தியர்களும் ஐரோப்பியரும், இந்தியரும் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்கிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் "ஆரோக்கிய தீபிகை" என்னும் இப்பத்திரிகையில், நோயற்ற வாழ்வினுக் கவசியமான செய்திகளெல்லாம் இனிது வரையப் படுகின்றன. இதன் ஆசிரியர் டாக்டர் U. ராமா ராவ், எம். எல். ஸி. இதன் வருஷ சந்தா ரூ. 1-8-0. இதன் பிரதிகளை விற்க வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. வேண்டியவர்கள் சென்னை தம்பு செட்டித்தெரு 323 நெ. டாக்டர் யு. ராமா ராவுக்கு எழுதிக்கொள்ளவும்.

கைமேற்பலன்!

அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

		ரூ.	அ.	பை.
1	வியாசக் கொத்து — அநேக அரிய வியாஸங்களைக் கொண்டது	2	0	0
2	அதிசயப் பொக்கிஷம் — ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை	1	8	0
3	இன்னுரைக் களஞ்சியம் — 40 அருமையான விஷயங்களைக் கொண்டது	1	0	0
4	விஷயரஸமஞ்சரி — எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது	1	0	0
5	திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும் — புதிய முறையில் வரையப்பட்டது	0	8	0

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் நாட்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை எனச் சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும். ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா. சவுத் இந்தியா.

தேசபக்தன்.

ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொளும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1-க்கு ரூ. 13 0 0

ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6-சதம்.

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, ரெக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

(இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையாபீசு : பம்பாய்

சேர்மன்.

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் எடனிலுள்ள கௌவாஜி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயில் பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இனும்தாரும் லிலக்சுமாந்தாரும் ஆவார்,)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர் :

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

(இம்பீரியல் பாங்குமத்தியசங்கத்தின்கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை இவை களைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த ஸ்தா பனம் புகழ்ப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிநிதியாகவிருந்த சுதேசிய இயக்கத்தை பரவச் செய்வது. தென்னிந்தியா பர்மா ஸிலோன் முதலியவிடங்களில் முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

மைசூர் சமஸ்தானத்தின் வியாபாரம், கைத்தொழில் இலைகளின் அபிவிருத்தியை உத் தேசித்து, சில பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணக்கி, மேற்படி கம்பெனியார் தங்கள் டைரெக்டர்களில் ஒருவரும், பம்பாயில் பிரபல தொழிலபிமானியுமாகிய A. B. கூடரெஜ் B. A. என்பவரை பெங்களூருக்கழைத்துள்ளார்கள். புதிதாக ஒரு கம்பெனியை ஸ்தாபித்துத் தற்போது மைசூர் கவர்மெண்டின் ஆதாவின்கீழ் இருக்கும் சில கைத்தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கவோ அல்லது அவைகளின் நிர்வாகவிஷயங்களை மேற்கண்ட கம்பெனியின் மூலமாகவே நடத்திவரவோ, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. மேற்சொல்லியிருக்கும் ஸ்தாபன விஷயத்தில் பல கைத்தொழில் நிபுணர்களும், பாங்கர்களும், பிரபல வியாபாரிகளும், செல்வமு குடையவர்களும், இந்தியாவிலுமல்லாது ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களிலும்கூட ஊக்க முடன் கலந்துகொண்டிருப்பதால் கூடியசீக்கிரம் மேற்சொன்னவிஷயம் ஒருவித முடிவிற்கு வாலாமென சகலாலும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவரம் வேண்டுவோர்

பி. வி. சுப்ப ராவ்,

கௌரவ மானேஜிங் டைரெக்டர்,

இந்தியன் கோவாபரேடிவ்ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,

பெங்களூர் ஸிடி.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ 3

வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

"தமிழ் நேசன்"

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பாஸ்பாம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, புத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

சிறந்த தமிழ் புத்தகங்கள்:

வால்மீகி இராமாயண வசனம்:—பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. உயர்ந்த பதிப்பு. நல்ல கனமான காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	பை.
6 காண்டங்கள் ...	15	0	0
சுந்தரகாண்டம் தனியே ...	2	4	0

'குறள் நானூறு':—மூலமும் உரைகளும், மொழி பெயர்ப்பும். 4 அணா.

'ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனைகள்':—650 கீர்த்தனங்கள் அடங்கியது ரூ. 3.

'குசிகர் குட்டிக் கதைகள்':—படிக்கப் படிக்கத் திகட்டாதன! இடித்து இடித்துப் புத்தி கூறுவன! வெடிக்க வெடிக்கச் சிரிக்கச் செய்வன! அ. மாதவ ஐயர் எழுதியவை. ரூபா 1—8—0.

'முத்து மீனாக்ஷி':—ஒரு பிராமணப் பெண்ணின் சுய சரிதை. அ. மாதவ ஐயர் எழுதியது. விலை அணா 8.

கே. மஹாதேவன்,

1, ராமசாமி பிள்ளைத் தெருவு,

வேப்பேரி. சென்னை.

SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A. எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றுவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு ச[illegible]திரம்.—சென்னை [illegible]யன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த [illegible]ரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது—*Ready*.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS.

807604

...ne Select Opinions on "Chinthamani."

...e Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this ...sidency by her starting "CHINTHAMANI" a Tamil Monthly intended to raise ... present status of women both politically and socially. "CHINTHAMANI" ...mises to fulfil that function under the able editorship of the scholarly lady. ... current number of the Journal which is before us, opens with an editorial which ...phasises the need for convincing the opponents of women-emancipation by ...laining to them what the new movement really means, and by clearing certain ...y common misconceptions regarding it. A special feature of the Journal is that ...ral, national and domestic ideals are brought before the readers in a quiet ...obstrusive way, through the medium of stories and dialogues. This number ...ntains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare ...ovement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's ...wn High School, Chidambaram,* writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as ...ll as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister ...lammal and I am of opinion that in respect to the subjects treated they are of ...tal interest to the Tamil women of the present generation and that in matter of ...yle and language this is not in any way inferior to the journals of this kind. ...his is a journal that should be read by women of all classes and creeds in their ...mes and by the girls in their schools.—FRANCIS KINGSBURY, Kilpauk, 25th ...ly 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need ...r intensive work among the women of Madras. I am glad you have taken up the ... The contents are very interesting. If the succeeding ladies take up the ...ndard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI ...YAR, *Retired High Court Judge, Madras,* 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is ...far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. ...rticles are well conceived and short, making it possible for the most laborious ...y to read and finish one of them in a single day. The subjects written upon are ...ch as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI ...YANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras,* Sept. 4, 1924.

Some of the Subscribers to Chinthamani.

Sree Raja Rajeswara Sethupathi Avl., Raja of Ramnad, Ramnad.
Sri Raja K. Laxmi Prasada Rao Bahadur Garu, Zamindar, Urlam.
A. Venkatarama Iyer Avl., Dt. Munsiff, Tenkasi.
T. R. V. Sarma, Esq., Asst. Govt. Auditor, Calcutta.
A. Ramanatha Iyer Avl., Dt. Munsiff, Vellore.
S. Sivarama Krishna Iyer Avl., Govt. Pleader, Trichinopoly.
K. Sourirajalu Naidu Avl., Sub-Judge of Ramnad, Ramnad.
Dewan Bahadur T. S. Tyagaraja Iyer Avl., Rtd Dt. Judge, My
Mrs. J. Karunakara Menon, B.A. (Hons.), Madura.
S. Ambravaneswar, Esq., M.A., Asst. Acct.-General, Bombay.
Miss S. Sornaletchumy, Pajam Hospital, Pajam (F.M.S.)
V. Nagalingam Avl., Ry. Telephone Operator, Port Swettenham (F.M.S.)
N. Krishnaswami Naidu Garu, Sentul (F.M.S)
R. Sivaguru, Esq., Central Work Shops, Kuala Kumpur (F.M.S.)
The Asst. Secretary, A. O. I. S. D. Library, Simla.
M. A. Somasundaram Pillay Avl., Market Rd., Taiping (F.M.S.)
The President, The Madras Social Club, Calcutta.
The Headmaster, Raja's High School, Sivaganga.
P. R. S. Ramasamy Pillay Avl., Main St., Kajang. (F.M.S.)
Rao Saheb R. Krishna Rao Bhonsle Avl., M. R. A. S., Vepery.
R. M. A. L. Manickam Pillai Avl., Moskee St., Medan.
W. T. Doraiswamy, Esq., Telegraph Office, Rangoon.
A. V. V. Iyer Avl., Currency Controller, Bombay.
The Secretary, Hindu Social Club, Rangoon.
B. S. Mani Iyer Avl., Dy. Inspector of Tamil Schools, Rangoon.
G. R. Subbarayar Avl., Sub-Judge, Madura.
C. S. Ekambaram Iyer Avl., Advocate, Rangoon.
P. C. Shunmugam Pillay Avl., Advocate, Moulmein.
S. S. Suryanarayanan, Esq., Bar-at-Law, Madura.
Mrs. Gopala Menon, Thallakulam, Madura.
S. Krishnamurthy Iyer Avl., Treasury Dy. Collector, Tinne
I. C. Sami, Esq., Midlands Estate, Klang (F.M.S.)
M. S. Rathnasamy, Esq., Market Rd., Taiping (F.M.S.)
P. L. R. M. Sinniah Chettiar Avl., Sitiawan (F.M.S.)
K. A. Narayanan, Esq., c/o Paterson Simmons & Co., Ltd.,
P. Thumbithurai Avl., Central Work Shops, Kua
N. Thumbu Avl., do do
V. Somasundaram Avl., do do
K. Krishnier Avl., Station Master, do do
S. S. Kandiah Avl., Electrical Dept., do do
V. Somasundaram Avl., Loco Dept., do do
S. Sivaramalingam Avl., Loco Dept., do do
P. Sinnathamby Avl., Ways and Works Dept., do do
V. Annamalai Avl., Loco Dept., do do

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,000—